உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 23 புதன்கிழமை (10.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 349

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவரா?

## அமைச்சர்கள், அதிகாரிகள் மத்தியில் கருத்து முரண்பாடு

கொழும்பு, நவம்பர் 10

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளின் சுதந்திரமான நடமாட்டம் தொடர்பில் அமைச்சர்களும், அதிகாரிகளும் வெவ்வேறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் போராளிகளை சமூகத்தில் எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பது தொடர்பில் பொதுமக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கு மதத் தலைவர்களுக்கும் இராணுவம் பாடம் நடத்தி வருகையில் இந்த முரண்பாடு வெளிவந்துள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படும் முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் சமூகத்தில் சுதந்திரமாக வாழ முடியும் என்றும் இவர்களுக்கு எவரும் இடையூறு விளைவிக்க முடியாது என்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

(24ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவு திட்டத்தின் பின் அமைச்சரவையில் மாற்றம்

### அமைச்சர் பதவிக்கு பலருடைய பெயர்கள் அடிபடுகின்றன

கொழும்பு, நவ. 10

ஜனவரி மாத முற்பகுதியில் அமைச்சரவை மாற்றம் இடம் பெறவுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் இரண்டாவது சத்தியப்பிரமாண வைபவம் எதிர்வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனையடுத்து உடனடியாக அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்த போதும் 2011ஆம் ஆண்டு வரவு

(24ஆம் பக்கம் பார்க்க)

### உயர்ந்து, உயர்ந்து...



அரச ஊழியர்களின் சம்பளத்தை எட்டாயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு கோரி அகில இலங்கை ரயில் ஊழியர் பொதுச் சேவைச் சங்கத்தினர் நேற்று கொழும்பு மருதானை ரெக்னிகல் சந்தியில் உள்ள ரயில்வே அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது...

## மீள்குடியேற்றத்தை உன்னிப்பாக அவதானித்து வருகிறது இந்தியா



### முதல்வர் கருணாநிதிக்கு சோனியா கடிதம்



புதுடில்லி, நவ. 10

இலங்கையில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள 30 ஆயிரம் மக்களின் மீள்குடியமர்வில் இந்தியா அக்கறையாக இருக்கிறது. இந்திய காங்கிரஸ் தலைவரும் தேசிய ஆலோசனை சபைத் தலைவருமான சோனியா காந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே

(24ஆம் பக்கம் பார்க்க)

## 6 நாள்களில் 7 படகுகளில் ஆஸி. சென்றனர் இலங்கையர்

### கிறிஸ்மஸ்தீவு முகாமில் இடநெருக்கடி

கொழும்பு, நவ. 10

கடந்த ஆறு நாள்களில், இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் அகதிகளுடன் ஏழு படகுகள் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்துள்ளன.

இதையடுத்து இந்த வருடம் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள படகு அகதிகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 547 ஆக அதிகரித்துள்ளது. இப்படியான படகுகளில் ஒன்றை

(24ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**ரயில் தண்டவாளப் பாதை மக்களுக்கு காணிகள்**
குடாநாட்டில் ரயில் பாதைகளில் குடிசைகளை அமைத்து வாழ்பவர்களுக்கு காணிகள். பக்கம் 02

**சீன உதவியுடன் புதிய இராணுவ முகாம்கள்**
நகரப்பகுதியில் படையினருக்கு சீன உதவியுடன் முகாம்கள். பக்கம் 03

**நீரிழிவு நோய் அணுகாது தடுப்போம்.**
அலசுகிறது கட்டுரை பக்கம் 07

### கல்விச்சுடர்

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I, II, வினாத்தாள்கள் மற்றும் கணிதம் I இல் (பகுதி B) விடைகள்

## மூன்று பிள்ளைகளின் தாய் மீது பூநகரியில் வல்லுறவுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 10

தனிமையில் மூன்று பிள்ளைகளுடன் வசித்து வந்த இளம் தாய் ஒருவர் கடந்த சனிக்கிழமை அதிகாலை இரண்டு இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார் என்றும் இது தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது என்றும் வன்னி

(24ஆம் பக்கம் பார்க்க)

## காலி முகத்திடலில் படம் எடுத்த யாழ். இளைஞர் விளக்க மறியலில்

கொழும்பு, நவ. 10

கொழும்பு, காலிமுகத்திடலில் படம் எடுத்ததாகக்கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். அரசடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பகீரதன் (வயது 17) என்பவரே கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

### வெற்றி விழா மேடை விபத்தில் பெரும் சேதம்

கொழும்பு, நவ.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவியேற்பு விழாவை யொட்டி அம்பாந்தோட்டையில் இடம்பெற வுள்ள வெற்றி விழாவுக்கான மேடையின் பாகங்களை ஏற்றிச் சென்ற வாகனம் மாத்தறையில் விபத்துக்குள்ளானது.

பெரிய கொள்கலன் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மேடைப்

(24ஆம் பக்கம் பார்க்க)

புதிய டிசைன்களில் மலிவு விலையில்
உங்கள் மனையை மெருகூட்ட
நவீன் செரமிக்



Naveen Ceramic
212, Palaly Road, Jaffna. PVT LTD
Tel : 212220033 / 212220044

## மலையக இளைஞர்கள் புலிகளிடம் கிளிநொச்சியில் பயிற்சி பெற்றனர்

### அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையில் பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 10

மலையக இளைஞர் பலருக்கு புலிகள் கிளிநொச்சியில் வைத்து கெரில்லாத் தாக்குதல் பயிற்சிகளையும், ஆயுதப் பயிற்சிகளையும் வழங்கியிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் பாதுகாப்பு இப்போது மிகவும் பலமாகவுள்ளது. கொழும்பில் மூடப்பட்டிருந்த வீதிகள் மக்களின் பாவனைக்காகத்

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ரயில் தண்டவாளப் பாதைகளில் வாழும் மக்களுக்கு காணிகள் ஒதுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். குடாநாட்டில் ரயில் பாதைகளில் குடிசைகளை அமைத்து வாழ்ந்துவரும் மக்களுக்கு சுமார் 20 வருடங்களின் பின்னர் காணிகளை ஒதுக்குவதற்கு இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெற்குக்கும் வடக்குமான ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தண்டவாளங்கள் அமைந்திருந்த இடங்களில் பொதுமக்கள் குடிசைகளை அமைத்து வாழ்ந்துவருகின்றனர். சுமார் 20 வருடங்களின் பின்னர் வடக்குக்கான ரயில் பாதைகள் இப்போது சீர்செய்யப்பட்டு வருகின்றன. இதை அடுத்து ரயில் பாதையில் குடியிருப்பவர்களை வேறு இடங்களுக்குக் குடிபெயரவைக்கும் நடவடிக்கைகள் யாழ்.செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக ரயில் பாதையில் குடியிருப்பவர்களின் விவரங்கள் அனைத்தும் யாழ். செயலகத்தால் திரட்டி முடிக்கப்பட்டுள்ளன. "அந்த மக்களுக்குக் காணிகளை ஒதுக்கி அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" - என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் சிலரைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. (உ-9)

# பாரம்பரிய வாத்தியங்களுடன் வலி.தென்மேற்கில் 'தமிழ் இனியம்'

சண்டிலிப்பாய், நவ.10

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் பாரம்பரிய இசை வாத்திய அணி வகுப்பு ஒன்றை மாணவர் மத்தியில் உருவாக்கி வளர்க்கும் நோக்குடன் இப்பிரதேசத்தில் பாரம்பரிய வாத்தியங்களுடனான "தமிழ் இனியம்" ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள வலி.தென் மேற்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் தகுதியான பாடசாலை ஒன்றைத் தெரிவு செய்து தருமாறு சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பாரம்பரிய இசையை அழியவிடாது பாதுகாப்பதுடன் மாணவர் மத்தியில் மேற்படி இசையை வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படவுள்ள பாரம்பரிய வாத்தியங்களுடானான தமிழ் இனியத்திற்குத் தேவையான கருவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வழங்கவுள்ளார்.

எனவே இக்கருவிகளின் விவரங்களையும்,கருவிகளுக்கான மதிப்பீட்டினையும் சமர்பிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அவர் கேட்டுள்ளார். (201-115)

# 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் துப்பாக்கி முனையில் துணிகரக் கொள்ளை

## அல்லாரையில் ஞாயிறு இரவு சம்பவம்

தென்மராட்சி, நவ. 10

வீட்டிலிருந்தோரைத் துப்பாக்கி முனையில் தடுத்துவைத்து விட்டு அங்கிருந்த 15 பவுண் தங்க நகைகள், 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம், கமரா போன் உள்ளிட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் கொடிகாமம் அல்லாரைப் பகுதி வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :-

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த வீட்டின்மீது கற்களும், பொச்சு மட்டைகளும் வீசப்பட்டன. ஆனால் வீட்டில் இருந்தவர்கள் பயம் காரணமாக வெளியே வரவில்லை. இதனைத் தொடர்ந்து துப்பாக்கி ஏந்திய முகமூடி அணிந்த நபர்கள் 8 பேர்வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த தந்தையையும் மகனையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். பின்னர் அங்கிருந்த பெண்ணைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள் உட்பட அனைத்து நகைகளையும் பறித்தனர். பின்னர் ஏனைய பொருள்களையும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

வீட்டுக்காரரை ஆயுத முனையில் வைத்துக்கொண்டு அங்கு பல இடங்களிலும் தேடிக் கையில் அகப்பட்ட பெறுமதியான பொருள்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அல்லாரையைச் சேர்ந்த சிவகுரு பாலசிங்கம் என்பவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த 15 பவுண் தங்க நகை, ரொக்கப் பணம், பெறுமதியான கைத்தொலைபேசிகள் என்பன இந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் குழுவினால் எடுத்துச்செல்லப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# யாழ்ப்பாணத்திலும் விரைவில் பேக்கரிகள் பல மூடப்படும்

## சங்கச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். மாவட்டத்திலும் மிக விரைவாக பேக்கரிகள் பல மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத் தின் செயலாளர் கா.பாஸ்கரன் தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை அரசினால் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அது சார்ந்த உற்பத்திப் பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டன. இதன் காரணமாக அந்தப் பொருள்களின் மீதான பாவனையாளர்களின் கேள்வியும் குறைவடைந்தது. இதனால் பாண் மற்றும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. அதனையடுத்து கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் பல பேக்கரிகள் மூடப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் இதுவரையும் எந்தவொரு பேக்கரியும் மூடப்படவில்லை. மிகவிரைவில் பல பேக்கரிகள் மூடப்படும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினால் இதுவரை காலமும் பேக்கரிகளுக்கு வழங்கப்பட்ட கோதுமை மாவின் அளவு 40 சத வீதத்தால் குறைவடைந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரிகள் அனைத்தும் தமது உற்பத்தியை அரைவாசியாகக் குறைத்து விட்டமையே இதற்குக் காரணம்.

மேலும் பெரும்பாலன பேக்கரிகள் தமது ஊழியர்களையும் குறைக்கத் தொடங்கிவிட்டன. இதனால் இந்தத் தொழிலைச் சார்ந்திருந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதே நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் இன்னும் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும்.

இது தொடர்பாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்துடன் கலந்துரையாடிய போது, அரசிடமிருந்து கோதுமை மாவை மானிய விலையில் பெறுதவன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரி விக்கப்பட்டது. இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக இது வரை எதுவித மேலதிக நட வடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்றார். (த-5)

# பாகிஸ்தானுடன் இறுக்கமான உறவு; ஆர்வமாக உள்ளது இலங்கை அரசு

## 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தகவல்

கொழும்பு, நவ.10

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் வருகையுடன் அந்த நாட்டுடனான இராஜதந்திர மற்றும் வர்த்தகத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் ஆர்வத்துடன் இலங்கை அரசாங்கம் இருப்பதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ்' நாளேடு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த நாளேடு மேலும் தெரிவித்திருப்பதாவது;

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி எதிர்வரும் 28ஆம் திகதி மூன்று நாள் பயணமாக இலங்கை வருகிறார்.

அவருடன் சுமார் 30 பேர் கொண்ட குழுவொன்றும் கொழும்பு வருகிறது.

அதில் வெளிவிவகார அமைச்சர் சா முகமட் குரோசி மற்றும் பாகிஸ்தானின் முக்கிய வர்த்தப் பிரமுகர்களும் அடங்கியுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தனது இலங்கை பயணத்தை முடித்துக் கொண்டு புறப்படும் சமநேரத்தில் தான் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி கொழும்பு வருகிறார்.

அதேவேளை, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இதுவரையில் எஸ்.எம். கிருஸ்ணாவின் பயணம் பற்றிய சரியான திகதியை அறிவிக்கவில்லை.

ஆனாலும் அவர் எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சிங்கள நடிகைக்கு ஒருவருட சிறை

கொழும்பு, நவ.10

கொழும்பின் பிரபல 'சுப்பர் மார்க்கெட்டில்' 17,500 ரூபா பெறுமதியான உடுபுடைவைகளைத் திருடினார் என்ற குற்றசாட்டை ஒப்புக்கொண்ட தொலைக்காட்சி நடிகைக்கு ஒருவருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

# பல்கலாசார விழா

வடமராட்சி, நவ. 10

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் பல்கலாசார விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்வி அபிவிருத்திக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த விழாவில் கலை நிகழ்வுகளும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (த-236)

# வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு சர்வதேசத்தை எதிர்பார்க்கிறது இலங்கை

கொழும்பு, நவ.10

வடக்கில் அபவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு தொடர்ந்து உதவிகளை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ஐ.நாவின் உதவி நிறுவனங்கள், அனைத்துலக மற்றும் உள்நாட்டு உதவி நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஐ.நாவின் உதவி அமைப்புகளின் தலைமைப் பரதிநிதிகள், அனைத்துலக மற்றும் உள்ளூர் உதவி நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சில உதவி அமைப்புகள் இலங்கை அரசுக்கு வழங்கி வந்த நிதியுதவிகளை நிறுத்தியுள்ளதாக பொருளாதார அபவிருத்தி அமைச்சு கூறியுள்ளது.

இதனால் இலங்கை அரசு நெருடிக்கடியைச் சந்திக்க ஆரம்பத்துள்ளது.

இதையடுத்தே உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளை அவசரமாக அழைத்த அமைச்சர் பசில் ராஜபக்ச, தொடர்ந்து [illegible] கோள் விடுத்துள்ளார்.

# அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, நவ. 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# பிரதேச செயலர்களுடன் அமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்டத்தின் பிரதேச மட்ட அபிவிருத்தி தொடர்பாக, அனைத்துப் பிரதேச செயலர்களுடனும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

அமைச்சர் தலைமையில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி தலைமையகமான ஸ்ரீதர் தியேட்டரில் இந்தக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது கிராமங்கள்தோறும் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-15)

# 114 மேலதிக வாக்குகளால் அவசர காலச்சட்டம் நிறைவேறியது

## ஐ.தே.க., ஐ.தே.மு, கூட்டமைப்பு எதிர்ப்பு

அவசரகாலச் சட்டம் 114 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றில் நிறைவேறியது.அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை பிரதமர் டி.எம். ஜயரட்ண நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

இதையடுத்து, விவாதம் இடம்பெற்றதோடு, அதன்பின்னர் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக 125 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன உதவியுடன் புதிய இராணுவ முகாம்கள்

## படையினருக்காக யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். நகரப் பகுதியில் தனியார் கட்டடங்களில் நிலை கொண்டுள்ள படையினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் சீன உதவியுடன் புதிய இராணுவ முகாம்களை அமைக்கும் பணிகள் முனைப்புப் பெற்றுள்ளன.

பலாலி இராணுவத் தலைமையக ஊடகப் பிரிவு இதனை உறுதிப்படுத்தியது. "குடாநாட்டில் படையினர் தமது நிலைகளை வேறு இடங்களுக்கு இடம்மாற்றவிருக்கின்றனர். அவ்வாறு இடம்மாற்றப்படும் இடங்களில் தயார் நிலையில் உள்ள கட்டடங்களை அமைக்க சீனா உதவி வழங்குகின்றது."-என்று தெரிவித்தது பலாலி தலைமையக ஊடகப் பிரிவு.

குடாநாட்டில் பொது மக்களின் வீடுகள், தனியார் மற்றும் பொதுக்கட்டடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.அங்கிருந்து வெளியேறி அவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதற்காக அந்த இடங்களில் இருந்து படையினர் விலகி வருகின்றனர்.

''நகரில் உள்ள படைத் தலைமை முகாம்களும் விரைவில் மாற்றப்பட உள்ளன.இதற்கென புதிய முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. புதிய இடங்களில் முகாம்களையும் இராணுவக்குடியிருப்புக்களையும் அமைக்க சீனா உதவிகளை வழங்க முன்வந்துள்ளது''-என்று மேலும் தெரிவித்தது பலாலி ஊடகப் பிரிவு. வன்னியில் இராணுவத்தினருக்காக அமைக்கப்பட்டுள்ளது போன்ற ஆயத்த நிலைக் கட்டடங்களை புதிய முகாமில் அமைப்பதற்கு தேவையான மூலப் பொருள்களை சீனா வழங்கும்.எனினும் எத்தனை புதிய முகாம்கள் அவ்வாறு அமைக்கப்படும் என்று இதுவரை முடிவு செய்யப்படவில்லை என்கின்றன படை வட்டாரங்கள். (உ-ஐ)



யாழ். பண்ணைப் பகுதியில் அமைக் கப்பட்டு வரும் புதிய படை முகாம்...

## விசுவமடுவில் இன்று மீள்குடியேற்றம்

முல்லைத்தீவு, நவ.10

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு மேற்கு, விசுவமடு கிழக்கு, மாணிக்கபுரம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் இன்று மீளக்குடியமர்த்தப்படவிருக்கின்றனர்.

விசுவமடு மகாவித்தியாலயத்தில் இயங்கும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இன்று புதன்கிழமை பதிவுகளை மேற்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் எஸ். கோணேஸ்வரன் கேட்டுள்ளார்.(ஒ-ஐ)



ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.பிராந்திய காரியாலயம் நேற்று திறந்து வைக்கப்பட்ட பின்னர் அதன் தலைவர் எஸ்.கே. குடவர்த்தன மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காணப்படுகின்றார்.

## ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பாக இலங்கையுடன் பேசவில்லை

### ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, நவ.10

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீளவும் வழங்குவது பற்றிய புதிய பேச்சுக்கள் எதனையும் இலங்கை அரசுடன் நடத்தவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் பேனாட் சவேஜ் தகவல் வெளியிடுகையில்,

'இந்த விவகாரம் தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எம்மை அணுகவில்லை. அதனால் இந்த விவகாரம் மூடப்பட்டே கிடக்கிறது' என்று தெரிவித்தார்.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவும் இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கூறியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தியது.

இதனால் இலங்கையின் ஆடை மற்றும் கைத் தொழில் பொருள்களின் ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களை தடுக்க இலங்கைத் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதே தடைக்கான காரணம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது. (உ)

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு செல்லும் வீதியின் நிலை மிகவும் மோசம்

யாழ்ப்பாணம், நவ.10

சங்கானை வைத்திய சாலைக்குச் செல்லும் வீதி சேதமடைந்து குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் இரவு வேளையில் வைத்தியசாலைக் குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வல்வை வீதியில் இருந்த பிரிந்து சங்கானை வைத்திய சாலைக்குச் செல்லும் வீதியே சேதமடைந்தும், வீதி விளக்குகள் இல்லாமலும் காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியூடாகச் செல்லும் பொது மக்கள், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

எனவே இவ் வீதியைப் புனரமைப்பதற்கும் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-16)

# யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு

## அலுவலகத் திறப்பு விழாவில் தலைவர் குடவர்த்தன

யாழ்ப்பாணம்,நவ.10

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டிலிருந்து யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய உள்ளோம். இந்தப்பங்களிப்பானது நிதியத்தின் 88 இலட்சம் அங்கத்தவர்களின் பங்களிப்பையும் உள்ளடக்கியே செய்யப்படுகின்றது என ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எஸ். கே. குடவர்த்தன தெரிவித்தார்.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் மாட்டின் வீதியில் நேற்று திறந்துவைக்கப்பட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வரு மாறு:-

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தில் இந்த அலுவலகம்,ஜனாதிபதியின் நண்பரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினால் திறக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இதுவரை காலமும் இந்த அலுவலகம் இங்கு இல்லாத காரணத்தினால் மக்கள் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இனிவரும் காலங்களில் இவ்வாறான கஷ்டம் இங்குள்ள மக்களுக்கு இருக்காது. எமது 8 திட்டங்களும் இங்குள்ள மக்களுக்கு விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும்.

88 இலட்சம் அங்கத்தவர்கள் மூலம் 117 பில்லியன் ரூபா திரட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகையில்95 வீதமான நிதி திறைசேரியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

எமது நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவாதி அல்லர். தெற்கு மக்களைப் போன்றே வடக்கு, கிழக்கு மக்களையும் அவர் பார்க்கின்றார். 1959 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த தமிழ்- சிங்கள மக்கள் உறவு மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அன்றைய காலங்களில் யாழ். மாவட்ட ஆசிரியர்களே எமக்குத் தெற்கில் கல்வி கற்பித்தார்கள். அன்று இருந்த சகோதரத்துவம் இன்றில்லாமல் போய்விட்டது. மீண்டும் எமக்கிருந்த நல்லுறவை ஏற்படுத்தித் தருமாறு அமைச்சரிடமும் ஜனாதிபதியிடமும் கேட்டுகிறேன் - என்றார்.

இந்நிகழ்வில்உரையாற்றிய ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வேலைப் பணிப்பாளர் திஸ்ஸ குட்டியாராச்சி ஓய்வூதியம் அற்ற அரசாங்க கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன இதில் அங்கத்தவராக இணைய முடியும். ஊழியரின் சம்பளத்தின் 3 வீதம் ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தப்படவேண்டும்.13 வீதமான வட்டி அந்தப் பணத்தொகைக்கு வழங்கப்படும். சுய தொழிலில் ஈடுபடுபவர்கள் கூட இதில் அங்கத்த வராக முடியும் -என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழிகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவிக்கையில்.

ஊழியர்நம்பிக்கை நிதியத்தின் பிராந்திய அலுவலகம் இங்கு அமைந்ததையிட்டு இங்குள்ள மக்களின் சார்பில் ஜனாதிபதிக்கும் தலைவர் எஸ்.கே. குடவர்த்தனவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட எமது தொழிலாளர்களின் நலனில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் வைத்து ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்கள் 10 பேருக்கு [illegible] பணம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த-15)

## காக்கிச் சீருடைகளுடன் மேற்பார்வைப் பணியாளர்

தென்மராட்சி,நவ.10

இருபத்தைந்து வருடங்களின் பின்னர் சாவகச்சேரி நகர சபையின் மேற்பார்வையாளர் தர உத்தியோகத்தர்கள் காக்கிச் சீருடைகள் அணிந்து கடமைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அரச திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் கடமையின் நிமித்தம் காக்கிச் சீருடை அணிவது தடை செய்யப்பட்டதையடுத்து சாம்பல் நிற சீருடைகளே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், மாகாண, உள்ளூராட்சி வருமான மேற்பார்வையாளர் சங்கத்தினர் மாகாண, உள்ளூராட்சி திணைக்களத்திற்கு விடுத்த வேண்டுகோளையடுத்து காக்கிச் சீருடைகள்அணிய அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நகர சபையின் மேற்பார்வையாளர்கள், தர உத்தியோகத்தர்கள் காக்கிச் சீருடை கள் கடமையின் போது பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-201)

## பாண் விற்பனையில் பெரும் வீழ்ச்சி

கொழும்பு, நவ.10

பாண் உட்பட இதர பேக்கரி தயாரிப்புக்களின் விற்பனை பெருமளவு சரிந்துள்ளதால் நாடெங்கும் 2 ஆயிரம் பேக்கரிகளை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு ஐக்கிய இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் கோதுமை மாவின் விலை கிலோவொன்றுக்கு 8ரூபா 50 சதத்தால் அதிகரிக்கபபட்டது.இதனையடுத்து பேக்கரி உற்பத்திகளின் விலைகளையும் அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.இந்த அதிகரிப்பபைத் தொடர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடருமானால் சுமார் 2 ஆயிரம் பேக்கரிகளைக் காலப் போக்கில் மூடவேண்டிய நிலை ஏற்படும்-என்றும் அவர் கூறினார்.

நாடெங்கும் சுமார் 7 ஆயிரம் பேக்கரிகள் உள்ளன என்றும் அவற்றில் சிறிய அளவிலான பேக்கரிகள் பல ஏற்கனவே மூடப்பட்டு விட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோப்பைக் கோப்பியில் 'கப்சிப்' ஆகிவிடுவார் ரணில்

நாடாளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா எல்லாத் தமிழர்களையும் புலிகள் என்ற சந்தேகத்துடனேயே நோக்குகின்றார் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நாடாளுமன்றில் குற்றஞ்சுமத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றுமாலை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையான வாய்மூல விடைக்கான கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்ட பின் எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சபையில் கவன ஈர்ப்பு தன்னிலை விளக்கம் ஒன்றை முன்வைத்தார்.

''கடந்த நாடாளுமன்றத் தொடரின்போது இந்தச் சபையில் உரையாற்றிய சபை முதல்வரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா எனது சுய கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சில தவறான கூற்றுக்களை முன்வைத்துள்ளார். இது தொடர்பாக விளக்கம் அளிக்கவேண்டியது எனது கடமை.

ஜெனிவாவில் வசிக்கும் சந்திரன் என்பவர் ஓர் இலங்கையர், அவர் இலங்கையை நேசிப்பவர். இங்கிருந்து யார் சென்றாலும் அவர்களை வரவேற்று விருந்தளித்து உபசரிப்பவர். அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா கூட சந்திரனின் வீட்டிற்குச் சென்றுள்ளார். அவருடன் விருந்து சாப்பிட்டுள்ளார்.




சந்திரன் எனது நண்பர். நாங்கள் இலங்கையர்கள் என்ற வகையில் அடிக்கடி தொடர்புகளைக் கொண்டுள்ளோம்.

ஆனால், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சந்திரனை ஒரு புலி என்கிறார். நான் சந்திரனின் அடையாள அட்டையைப் பயன்படுத்தியதாகவும் குற்றம் சுமத்துகின்றார் என்று கூறினார்.

இதனால், சபையில் பெரும் கூச்சல் ஏற்பட்டது. ஆளும் தரப்பில் இருந்து புலி புலி என்றும், புலிகளுக்கு வக்காளத்து வாங்குபவர் என்றும், நாட்டைக் காட்டிக்கொடுப்பவர் என்றும் கூச்சல் இட்டனர்.

ஆனால், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் சளைக்காமல் பதிலடி கொடுத்துக் கொண்டே இருந்தார்.

அப்போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆமாம் நீங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்தான் இதில் சந்தேகம் இல்லை. சந்திரனும் ஒரு புலிதான் என்று கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அமைச்சர் யாரையுமே நம்புவது இல்லை. தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்று நோக்குகின்றார். அவரது போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று குற்றம் சுமத்தினார் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டம் அவசியமில்லை என்று வாதிட்டார்.

புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்றால் மீண்டும் ஏன் அவசர காலச் சட்டம் என்று கேள்வி எழுப்பினார் ரணில் விக்கிரசிங்க.

எனினும் அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா விடயம் தொடர்பாகப் பேசியபோது சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

சரத் பொன்சேகாவிற்கு அளிக்கப்பட்டிருக்கும் தண்டனை மீள்பரிசீலனை செய்யப் படவேண்டும்.

சரத் பொன்சேகாவின் சிறப்புரிமை தொடர்பாக சபாநாயகர் தீர்ப்பு ஒன்றை வழங்

## விமல் வீரவன்ஸ கிண்டல்

கும் முன்னர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பொன்சேகாவின் மன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டதாக அறிவித்துள்ளார். இது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கே சவாலாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டினார் ரணில் விக்கிரமசிங்க.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

இங்கே அவசர காலச்சட்டம் தொடர்பான விவாதம் நடைபெறுகின்றது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும், அதன் முன்னுள்ள விடயங்களைப் பற்றியும் பேசுகின்றார்.

நான் சில காலம் அந்தக் கட்சியில் இருந்தேன் என்பதற்காக வெட்கப்படுகின்றேன். இன்று ஐ.தே.கவுக்குப் பேச எதுவுமே இல்லை. சஜித் பிரேமதாஸாவைப் பார்த்துப் பயப்படுகின்றனர், நடுக்கத்துடனேயே பேசுகின்றனர் என்று அஸ்வர் எம்.பி. கூறினார்.

அப்போது ஆளும் தரப்பினர் அஸ்வரின் பேச்சுக்கு ஆதரவாக ஆரவாரம் செய்தனர்.

இவற்றை எல்லாம் கணக்கில் எடுக்காமல் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசினார்.

முன்பு இப்புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்டபோது பிரதமராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் மற்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆகியோருடன் கலந்துபேசினார். ஆனால், இப்பொழுது நாடாளுமன்றத்தில் ஒரு புதிய கட்டிடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.

ரணில் விக்கிரசிங்க பேசும்போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி வழமை போல் இடையூறு செய்துகொண்டே இருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரைத் தொடர்ந்து அமைச்சர் விமல் வீரவன்ஸ உரையாற்றிய போது அவசரகாலச் சட்டம் தொடர்பாகப் பேசியதை விட ஐக்கிய தேசியக் கட்சியைத் சாடுவதிலேயே கூடுதலான நேரத்தைச் செலவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க கட்டடம் கட்டுவது தொடர்பாக ஜனாதிபதி தன்னிடம் பேசவில்லை என்று குறைபட்டுக்கொண்டார். ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து ஜனாதிபதி மாளிகையில் ஒரு கருப்புக் கோப்பி வழங்கி இருந்தால் இன்று ரணில் விக்கிரமசிங்க இப்படிச் சத்தம் போட்டிருக்கமாட்டார் என்றார் விமல்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வெள்ளைக்காரர்களுக்கு இந்த நாட்டைக் காட்டிக்கொடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். சிறிதும் நாட்டுப்பற்றில்லாதவர்கள். தேசத்துரோகிகள் என்றும் சாடினார்.

அமைச்சர் வீரவன்ஸவுக்குப் பதிலடி கொடுப்பதுபோல் உரையாற்றினார் எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

''அமைச்சர் விமல்வீவன்ச தன்னை ஒரு நாட்டுப்பற்றாளன் என்பது போல் இங்கு பேசுகின்றார். முன்பு இந்த நாட்டை கொலைக்களமாக

(24 ஆம் பக்கம் பார்க்க)


## முதலாம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்



அமரர்

**காசிப்பிள்ளை செல்லத்துரை**

மலர்வு 03.02.1939 — உதிர்வு 23.10.2009

அப்பா!
காலத்தின் கட்டளையால்
எம்மை கண்ணீரில் மிதக்கவிட்டு
ஓராண்டு ஆனதுவே நம்ப முடியவில்லையப்பா!
உங்கள் நினைவால் நாளும் தவிக்கின்றோம் ஆண்டு ஒன்றென்ன
ஆயிரம் தான் ஆனாலும் என்றும் நீங்காது எம் மனதில்
உங்கள் அன்பான நினைவலைகள்...

டச்சு வீதி, உடுவில்,
சுன்னாகம். (சி/572763)

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

இல.37, அரசவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த செல்வராஜா கலைச்செல்வன் என்பவரது தேசிய அடையாள அட்டை (740373447 V), அலுவலக அடையாள அட்டை (சிறுவர் நன்னடத்தை திணைக்களம், திருகோணமலை), சாரதி அனுமதிப் பத்திரம், முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் (07.11.2010) அன்று திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்ள டது. கண்டெடுத்தவர்கள் நல்லூர் வீதியில் உள்ள சந்தியா மல்ரி பான்சி கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(105821) தொலைபேசி: 0770872440, 0779496940

## தவறிவிட்டது

கடந்த 04.11.2010 அன்று யாழ். நகரப் பகுதியில் 72/3, பணிக்கர் லேன், திருநெல்வேலி எனும் விலாசத்தையுடைய த.நிலான் என்பவருடைய 913422600 V எனும் இலக்கமுடைய I.C யும், Jop I.C யும் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல. 0777494666

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள்ளும் மாநகர சபையை அண்டிய பிரதேசத்திற்குள்ளும் வீடு உடன் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0750390290

## குத்தகைக்கு

11 அடி நீளமான அலுமினிய Body இல் 3 பக்கம் கதவுடைய Canter மாதாந்த குத்தகைக்குண்டு. தொடர்பு: 077-4064761

## கணித - விஞ்ஞான ஆசிரியர் உடன் ஆள் சேர்ப்பு

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சைவசிறார் இல்லத்திற்கு பட்டதாரி கணித - விஞ்ஞான ஆசிரியர் (ஆண்-பெண்) உடன் தேவை.
நேரில் வரவும்.சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தி. இராசநாயகம்(DCS)
தலைவர்,
மகாதேவா ஆச்சிரமம்,
ஜெயந்தி நகர்-கிளிநொச்சி.

T.P: 0773868566
026 326 7571

(சி/572761)

## கிளிநொச்சி மகா வித்தியாலயம்
## தரம் 5 புலமைப் பரிசில் பாராட்டு விழா

2009, 2010 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா நாளை மறுதினம் 12.10.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். சித்திபெற்ற மாணவர்களும், பெற்றோர்களும் கலந்துகொள்ளவும்.

பாராட்டுவிழா ஏற்பாட்டுக் குழு,
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

(சி/572767)




வறுத்தலை விளானைச்சேர்ந்த புஸ்பராஜா ராஜலக்சுமி தம்பதியினரின் செல்வப்புதல்வன் மதீஷ் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (10.11.2010) புதன்கிழமை திருநெல்வேலியில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், பூட்டி அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அன்ரிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மதீஷை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியின் துணையுடன் சீரும் சிறப்புடனும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
(அப்பா) க.புஸ்பராஜா

## 53 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

ஏழை மக்களின் வாழ்விற்காவும் அவர்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்காகவும் தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை செலவழித்து உழைத்துக்கொண்டிருக்கும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**



அவர்கள் இன்று தன்னுடைய 53 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும். போரினால் அழிந்த எம் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அழிந்துபோயிருக்கும் எம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் காலம், நேரம் பாராது கண் அயராது இயங்கிக்கொண்டிருக்கும் கௌரவ அமைச்சர் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் உடல்,உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து எம் தேசத்துக்கும், மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்ற எல்லாம் வல்ல கைலாச விநாயகரின் அருட்கடாட்சத்தை வேண்டி நிற்பதுடன் அமைச்சருக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



வாழ்த்துபவர்கள்:
தலைவர், பணிப்பாளர்கள், நிர்வாகத்தினர், ஊழியர்கள்.
லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜனநாயகம் போகிற போக்கில்....

பொது மக்களை ஒன்று கூட்டி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அறியமுடியாத நிலை, வன்னி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்திருக்கிறார். கிளிநொச்சி மலையாள புரத்தில் தமக்கு இந்த அனுபவம் ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

மலையாளபுரத்தில் உள்ள மக்களை நாடாளு மன்ற உறுப்பினர் சந்தித்து, அவர்களுக்கு உள்ள பிரச் சினைகளைக் கேட்டறிவதற்கு ஏற்பாடாகி இருந் தது. அனால் அந்தக் கூட்டத்துக்கு ஒரு சில பொது மக்களே சென்றிருந்தனர்.

குறிப்பிட்ட கூட்டத்திற்கு மக்கள் செல்வ தற்கு முன்னராக இராணுவத்தினரும், புலனாய் வுப் பிரிவினரும் அங்கு சென்று விட்டனர்.தங் கள் பிரச்சினைகளைப் பகிரங்கமாகத் தெரி விக்க முடியாத காரணத்தினாலேயே மக்கள் தம் மைச் சந்திக்க வரவில்லை என்று குற்றஞ்சாட் டுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்.மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு உள்ள குறைபாடுகளை, கஷ்டங்களை விவரமாக அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் கடமை அவர்களுக்கு உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருக் கும் குற்றச்சாட்டின் பிரகாரம், இராணுவத்தின ரும் புலனாய்வுப் பிரிவினரும் இந்தக் கூட்டத் துக்குச் சென்றிருந்ததை அறிந்து மக்கள் அங்கு செல்லவில்லை என்பது தெளிவாகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மட்டுமே தெரிவிக்கவேண்டிய குறைபாடுகள், முறைப் பாடுகளை இராணுவத்தினர் மற்றும் புலானாய் வுப் பிரிவினரின் பிரசன்னத்தில் கூறுவதால், தங்களுக்கு ஏற்படக்கூடிய பின் விளைவுகளை நினைத்து அவர்கள் அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருக்க மாட்டார்கள் என்பதனை எவரும் ஊகித்துக்கொள்வர், புரிந்துகொள்வர்.மக்கள் தமது பிரதி நிதியான நாடாளுமன்ற உறுப்பி னரிடம் தமக்குரிய பிரசினைகளைக் கூறமுடி யாத ஓர் இக்கட்டான நிலை மலையாளபுரத்தில் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

வன்னி மக்களின் கஷ்டங்களை நாடாளு மன்ற உறுப்பினர்களே விவரமாக அறிந்து கொள்ள முடியாத நிலை தோற்றுவிக்கப்பட் டால், அவர்களுக்குள்ள கஷ்டங்கள், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் வெளிப்படுவதற்கு வேறு எந்த வழியும் கிடைக்காமற் போய்விடும்.

மக்களின் வாழ்வுரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் வெளியில் தெரியாமல் தடுக்கப் படும் மறைமுக முயற்சி அல்லது ஏற்பாடே இது என்று கருதக்கூடியதாகும்

இதனை இன்னொரு விதமாக நோக்கின்-

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது மக்களின் - வாக்காளர்களின் - குறை நிறை களை விவரமாகக் கேட்டறிந்து அவற்றுக்கு நிவாரணம் தேடிக்கொடுக்கும் அவரது முக்கிய பணியை, உரிமையைத் தடுக்கும் செயலாகக் கருதலாம்.

மொத்தத்தில், ஜனநாயகத்தின் ஆணி வேரையே பிடுங்கி எறியும் உள்நோக்கம் கொண்டது என்று கணிக்கப்படக் கூடியது இது.

ஜனநாயகம் என்ற பெயரில் அதற்கு நேர் முரணான எதேச்சாதிகாரம் கட்டவிழ்த்து விடப் படுவது இங்கே துலாம்பரமாகத் தெரிகிறது. ஒப்பேற்றப்படுவது புலனாகிறது.

மக்கள் பிரதிநிதி ஒருவர் தனது மக்களின்- வாக்காளர்களின்-குறைபாடுகளை, பிரச்சினை களை கேட்டறிய முடியாதவாறு மறைமுகமா கத் தடைபோடும் இதுபோன்ற செயல் தென்னிலங்கைப் பிரதேசங்களில் ஒப்பேறி னால் நிலையை அரசு ஏற்றுக்கொள்ளுமா? ஜனநாயக நாடு ஒன்றில் அது ஏற்கக்கூடிய செயலா?

தமிழ்ப் பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு மேற்படி நிலைமை இனியும் உருவாகாமல் தடுக்க ஜனநாயகத்தின் பேரில் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை திறந்த மனதுடன் செய்யுமா அரசு?

# தென்னாபிரிக்காவில் சர்வதேச இளைஞர் மாநாடு; பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,நவ.10

அடுத்த மாதம் தென்னாபிரிக்கா வில் நடைபெறவுள்ள அனைத்து பல்கலைக்கழக மற்றும் இதர இளை ஞர்களை ஒன்றிணைத்து சர்வதேச இளைஞர் கலாசார மாநாட்டில் யாழ். பல்கலைக் கழக மாணவப் பிரதிநிதி கள் பங்கு பெறுவது தொடர்பாக துறைசார்ந்த மாணவ ஒன்றியப் பிரதிநிகளுடனான கலந்துரையா டல் யாழ். பல்கலைக்கழக கேட் போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துரையாற்றும் போது கூறியதாவது:-

சர்வதேச இளைஞர் கலாசார நிகழ்வானது இனங்களுக்கிடையே சமத்துவம், ஐக்கியம், நட்பு மற்றும் ஒற்றுமையை பேணிப் பாதுகாப் பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

அத்துடன் வெளிநாட்டுத் தொடர் புகள், வெளிநாடுகளின் கலை, கலா சாரம், கல்வி உள்ளிட்ட துறைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதுடன், பல்வேறு நாடுகளைச் சார்ந்த பல் கலைக்கழக மாணவர்களுடனான தொடர்புகள் மூலம் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கருத் துக்களைப் பகிர்ந்து கொள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் உங்களது உண்மையான கருத்துக்களை சரி யான பக்கமாகவும், சரியான சிந்தனை மூலமும் வெளிப்படுத்தும் போது அது பல்கலைக்கழக மாணவர் சமூ கத்திற்கு மட்டுமல்ல எல்லாச் சமூகத் திற்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும் - என்றார்.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத் துப் பல்கலைக் கழகங்களிலும் சர்வ தேச இளைஞர் கலாசார மாநாடு சார்ந்த நிகழ்வுகள் முன் னெடுக்கப்படவுள்ளன.

அதன் பிரகாரம் அந்தந்த இடங் களுக்கேற்ப கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் பல்வேறு கலை நிகழ் வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர் வரும் 17ஆம் திகதி கலாசார நிகழ்வு நடைபெறும் என்றும், இதேபோன்று ஏனைய பல்கலைக்கழகங்களிலும் கலாசார நிகழ்வுகள் நடைபெறும் என்றும் டிசெம்பர் 13 முதல் 23 வரை இந்நிகழ்வுகள் தென்னாபிரிக் காவில் நடைபெறவுள்ளதாகவும் உயர் கல்வியமைச்சின் மாணவப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட் டது.

இக்கலந்துரையாடலில் பேரா சிரியர் விசாகரூபன், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் வேல்நம்பி, விரிவுரை யாளர் எஸ்.சிவராஜா மற்றும் சட்டத் தரணி ரங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஒ)

# வெலிக்கடைச் சிறை சம்பவத்துக்கு பொலிஸாரின் செயற்பாடே காரணம்

## முன்யோசனையுடன் நடந்திருக்க வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு,நவ.10

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக் கடைச் சிறையில் இடம்பெற்ற சம்ப வத்துக்கு பொலிஸாரின் உணர்ச்சி யற்ற போக்கும் அவர்கள் மத்தியில் நிலவிய ஒருமைப்பாடு இன்மையே காரணம் என்று சிறை சீர்திருத்தம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.டபிள்யூ. குணசேகர தெரிவித்துள் ளார்.

சம்பவம் தொடர்பாக முதல்கட்ட அறிக்கையொன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருக்கிறேன். மூவர் கொண்ட விசாரணைக் குழுவொன் றையும் நியமித்திருக்கின்றேன்.

குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் இம்மாதிரி சம்பவம் எதுவும் இனிமேல் நடக்காமல் இருக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுப்பேன் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போதைத் தடுப்பு பிரிவினர் 16 சிறைகளில் இம்மாதிரி சோதனைகளை நடத்தியிருந்தார் கள். ஆனால் வெலிக்கடைச் சிறைச்சாலையைத் தவிர வேறு எந்தச் சிறையிலும், இம்மாதிரி மோதல் எதுவும் நடைபெறவில்லை யென்று அமைச்சர் தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிபருக்கு பொலி ஸார் தாம் நடத்தப்போகும் திடீர் சோதனை பற்றி அறிவித்திருக்க வேண்டும். திடீர் சோதனை நடத்துவதற்கான கட்டளையை கடைசி நேரத்தில் தான் பொலிஸார் காட்டியிருக்கிறார்கள் என்றார் அவர்.

கீடும் குற்றவாளிகளாக 2,600 பேரை சோதனையிடுவது 60 பொலி ஸாரால் கூடிய காரியமல்ல. ஏனைய சிறைகளில் பொலிஸாரும், சிறை அதிகாரிகளும் இணைந்தே இந்த விதமான சோத்னைகளை நடத்தி யிருக்கிறார்கள் என்று அமைச்சர் குணவர்த்தன கூறினார்.

குற்றவாளிகளான சிறைக்கைதி களின் மனோநிலை பற்றி பொலி ஸார் முன்கூட்டியே யோசித்திருக்க வேண்டும் என்றார் அவர். அவர் மேலும் தெரிவிக்கையில் செப்பல் விடுதியில் உள்ள கைதிகள் அனை வரும் வாழ்நாள் சிறைக் கைதிகள் ஆவர். சுமார் 40 பேர் வரை போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் இருக் கிறார்கள். அவர்கள் பொதுவில் பொலிஸாரைக் கண்டாலே வெறுக் கிறவர்கள். தாம் சிறையில் இருப் பதற்கு பொலிஸார் தான் காரணம் என்று நினைக்கிறவர்கள்.

எனவே கடும் குற்றங்களுக் காக தண்டிக்கப்பட்டவர்களை சோத னையிடும் போது பொலிஸார் மிகக் கவனமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்றார்.

மேல்நீதிமன்ற நீதிவான் சரத் அம்பேபிட்டிய கொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட் டிருக்கும் குடு நூர் என்பவருக்கு இச்சம்பவத்தில் தொடர்புண்டு என்பதை அமைச்சர் மறுத்துரைத் தார். குடு நூர் கண்டி போகம்பரை சிறையில் தண்டனையை அனுப வித்து வருகிறார் என்று கூறினார் அமைச்சர்.

# மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளின் பாடசாலைகளில் கவனம் செலுத்துக

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.10

வடமாகாணத்தில் பருவகால மழை ஆரம்பித்துள்ளதனால் மாகா ணத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பிரதேசங்களில் பாடசாலை நிலை மைகளைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்து மாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சையும், அரசாங்கத் தையும் வற்புறுத்தியுள்ளது.

பருவமழை பெய்யக்கூடிய மாதங்களில் குறித்த பிரதேசங் களின் பாடசாலைகளில் கற்பித்தல் தொடரமுடியாத நிலை ஏற்படலா மென இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் பெர்னான்டோ சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது வடமேல் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை காரண மாகத் தென்னோலையால் வேயப் பட்ட, சிமெந்தினால் நிலம் அமைக் கப்படாத பல பாடசாலைகளின் உள் வெள்ளம் புகுந்து சேறும் சகதி யுமாகக் காணப்படுகின்றன. இப் பாடசாலைகளில் கல்வியைத் தொடர முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வெள்ளியன்று மாங் குளம் பாடசாலையை மூட வேண்டியிருந்த தென ஜோசப் ஸ்ரா லின் மேலும் கூறியுள் ளார். அவர் மேலும் கூறுகையில் கிளிநொச்சி, ஓமந்தை மத்திய கல் லூரிகள் உட்பட வட [illegible]த்தில் மேலும் [illegible]தான பாட சாலை களை மூட வேண்டிய நிலை ஏற்படலாம் என்றார்.

சில பாடசாலைகளில் இராணுவத் தினர் இன்னமும் தங்கியுள்ளனர் என வும், இவர் களிடமிருந்து மீளப் பெற்று இப்பாடசா லைகளில் கல்வியைத் தொடர்வதற் கான நடவடிக்கை களை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும் எனவும் ஜோசப் ஸ்ரா லின் சுட்டிக் காட்டியுள்ளார். (ரி)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 25 | : | 11.11.2010 வியாழக்கிழமை |
| திதி: | : | பஞ்சமி மு.ப.08.57 வரை |
| நட்சத்திரம் | : | பூராடம் |
| | | [illegible] பி.ப.01.2[illegible] வரை |
| [illegible] | : | 07.3[illegible]-08.[illegible] வரை |
| ராகுகாலம் | : | 01.36-03.06 வரை |

### சஷ்டி நாயகனின் ஐந்தாம் நாள்



ஒய்யாரி வள்ளிவேலா ஓங்காரத்தத்துவமே
வள்ளி தேவயானியுடன் எம் உள்ளங்கவர்ந்தவனே
பைய பைய நீ வருகையிலே முருகா
பாரதங்கள் தான் மிஞ்சும் பாரினிலே முருகா
விரைந்திடுவாய் முருகா மயில் மீதினிலே
வினைகளை விரட்டும் வீர வேலவனே
சங்கடங்கள் தீர்த்திடும் சூரசம்காரா
எங்கள் முன்னே நீ ஓடி வாவா முருகா

வேதனைகளகற்றியிங்கே முருகா முருகா
சாதனைகள் படைத்திடவே நீ இங்கு
வேலும் மயிலுமாய் வீதியிலே வந்திடுஐயா
ஒன்றா இரண்டா இங்கே நாம்படும் வேதனைகள்
பாராமுகமாய் இருத்தல் முறையோ முருகா
மெய்யடியார்கள் மெச்சிடவே முருகா
மெய்யை உணர்த்திட வா முருகா

தெல்லியூர் தேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில்

முதல் முறையாக நம்பமுடியாத கட்டணக் கழிவில்

# சர்வதேச கற்கை நெறிகள்

நீங்கள் காலவிரயமின்றிப் பட்டதாரியாக வேண்டுமா? சர்வதேச அங்கீகாரம் கொண்ட பட்டப்படிப்பையும், அதற்கு நிகரான தொழிலையும் எதிர்பார்க்கிறீர்களா? காலத்தை வீணடிக்காது நன்கு உழைத்துச் சமூகத்திலே முன்னேற வேண்டுமா?

கவலையை விடுங்கள் இன்றே எம்மிடம் விரையுங்கள்....

நீங்கள் குறுகிய காலத்தில் பின்வரும் கற்கை நெறிகளைப் பெற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நாடி வந்திருக்கின்றது.

**100% விசா உத்தரவாதம்**

**Pre. MBA (Master of Business Administration)**
To whom : Degree holders, non business degree holders HNDA, HNDM (Advanced Technical Institute)

**Final Degree (Top Up) MBA in UK**
Course Duration: 9 Months

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree @ London (UK), USA, Canada, Australia, Newzealand

இவ்வாறான பயிற்சி நெறிகளுக்கு 100% நல்ல வேலைவாய்ப்பு வெளிநாடுகளில் உண்டு

| | | |
|---|---|---|
| Foundation Diploma in Hospitality Management; Foundation Diploma in Nursing (Health & Social Care) | 6 Months | Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia |
| Foundation Diploma in Management; Foundation Diploma in Human Rights & Principles of laws | 3 Months | Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia |

இவ் அடிப்படை நெறிகளைக் கற்பதினால் வெளிநாடுகளில் கற்கை நெறிகளை இலகுவாகக் கற்க முடியும்

**IELTS** (International English Language Testing System)
We guarantee minimum band 6.0 Upwards
பிரபல விரிவுரையாளர்கள் மூலம் புதிய நவீன முறைக்கமையவும் Audio, Video Visuals ஊடாகக் கற்பிக்கப்படுகிறது.

Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது

Spoken English - 6 Months
Diploma in English - 6 Months
Advanced Diploma in English - 4 Months

விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகள், இலகு விளக்கங்களுடன் மாணவர்கள் எளிதாகக் கற்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

உங்களின் பட்டப்படிப்புச் சம்பந்தமான கற்கைநெறி வழிகாட்டுதல்களுக்கு இத்துறையிலே மிக அனுபவம் வாய்ந்த எமது சட்டத் தரணிகள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள்.

Courses' Commence on: 14,16 /11/2010 காலை: 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு :

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES (BCHS)**
Tel : 021 222 4550, Hot lines : 077 7222422, 071 4299935 E-mail : info@bchs.lk
No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.10
கோப்பாய் கோட்டபாடசாலை அதிபர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை 1மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் என கோப்பாய் கோட்டப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார்.
(த-72)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நெடுந்தீவு அன்னையின் மைந்தன் உயர்திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தின் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி, மேற்கொண்டு கோப்பாய் பிரதேச செயலராகவும் பொறுப்பேற்கின்ற அவர்களைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று வெந்து- நொந்துபோன எம் தமிழ் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல தில்லைக்கூத்தப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

கலாபூஷணம் வே.சுந்தரலிங்கமும் (J.P)
குடும்பத்தினரும்.
65/6, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

## 60 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### லயன் எம்.தவக்குமார்

(நிர்வாக இயக்குநர், Kanna Clinic, சித்தன்கேணி)



அகவை அறுபது காணும் மாணிக்கம் பெற்றெடுத்த மாண்பான முத்து எங்கள் தவக்குமார் மருத்துவ உலகில் மகத்தான சாதனைகள் பல புரிந்து எல்லோருக்கும் வழிகாட்டியாக ஆயிரம் கோடி சூரியன் உதித்தபோது வெளிவரும் வெளிச்சத்துக்கு ஒப்பான புன்சிரிப்புடன் நேர்கொண்ட பார்வை நின் நிமிர்நடை வாழ்க்கையில் எல்லோரும் வாழவேண்டுமென்ற வாழ்வியல் உலகில் நீங்களும் வாழுங்கள், நாங்களும் வாழுகின்றோம் என்ற உன்னத தத்துவத்திற்கு அமைவாக மருத்துவ உலகில் ஒரு வியாபாரச் சின்னமாக திகழும் எம்.தவக்குமார் அவர்கள் என்றும் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழையடி வாழையென வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:Lion நண்பர்கள், மருந்தக நண்பர்கள், வியாபார பிரதிநிதிகள், மருத்துவர்கள், வியாபார நண்பர்கள், வெளிநாட்டு நண்பர்கள், நலன்விரும்பிகள்.
(சி-572754)


# ALL IMAGE DIGITAL SOLUTION

## XEROX DIGITAL PRESS

இன்றுமுதல் அச்சகத்துறையினருக்கு ஓர் வரப்பிரசாதம்

100பிரதிகளுக்கு மேல் பிரதியாக்கம் செய்வோருக்கு பேப்பர் Print






| | |
|---|---|
| A4 . Paper Print | - 25/= |
| A4 Sticker | - 35/= |
| A4 Art Paper | - 30/= |
| Visting Card | - 3/= |
| 10x15 (2 side) | - 80/= |

(அச்சகத்துறையினருக்கு விசேட சலுகை)

பனர் - 25/= முதல்



FRONDETIER 370-யுடன் வழமையான புகைப்பட பிரதியாக்கற் சேவைகள்

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
தொ.பே. 021 2221358
E-mail. moorthydigitals@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை; தரமான சேவையை வழங்க முடியாத நிலை

## சொந்த மண்ணில் பணியாற்ற அழைக்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். மாவட்டத்தில் போதிய வைத்திய அதிகாரிகள் இல்லாமையால் தரமான வைத்திய சேவையை வழங்க முடியாதுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் ஆதார வைத்தியசாலைகளான பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பிரதேச வைத்தியசாலைகளான சங்கானை, கோப்பாய், வேலணை, வல்வெட்டித்துறை, காரைநகர், நயினாதீவு, நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, புங்குடுதீவு, அச்சுவேலி, அனலைதீவு, அம்பன், கரவெட்டி, கொடிகாமம், மானிப்பாய், வரணி, மருதங்கேணி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளான தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, ஊர்காவற்றுறை, கரவெட்டி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகியவற்றில் வைத்திய அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

யாழ். மாவட்ட மக்கள் கடந்த முப்பது வருடங்களாக யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டனர். பல வைத்தியசாலைகள் சேதமடைந்தன. வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன. தற்போது நாம் பெரும்பாலான வைத்தியசாலைகளை மீளக்கட்டியெழுப்பியுள்ளோம். இந்நிலையில் போதிய வைத்திய அதிகாரிகள் இல்லாமையினால் தரமான வைத்திய சேவையை வழங்க முடியாதுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்விகற்று மருத்துவர்களாக உயர்ந்த பல நூற்றுக்கணக்கானோர் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வருகின்றனர். முப்பது வருடங்களாக அல்லல்பட்ட இந்த மக்களுக்கு இனிமேலாவது தரமான மருத்துவ சேவையினை வழங்க வேண்டியது எமது தார்மீக கடமையாகும். தங்கள் சேவைக்காலத்தில் குறுகிய காலமேனும் இந்த மாவட்டத்தில் வந்து பணியாற்றி உங்களது பங்களிப்பை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

அமைதியான, சுமுகமான சூழல் நிலவும் இக்காலத்தில் எமது மக்களுக்கு சேவையாற்ற முன்வருமாறு பகிரங்கமாகப் பணிவுடன் அழைக்கின்றோம்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்ற வைத்திய அதிகாரிகளுக்கு மத்திய சுகாதார அமைச்சினால் விசேடமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகளுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இவ்விடயம் யாழ். மாவட்ட சுகாதார சேவைகளின் மேம்பாடு சம்பந்தமான விசேட கலந்துரையாடலில் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் மேஜர். ஜெனரல். ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது யாழ். மாவட்டத்தில் பணியாற்ற விரும்பும் வைத்திய அதிகாரிகளுக்கென விசேட விண்ணப்பங்கள் கோரப்படுமென மத்திய சுகாதார அமைச்சரினால் உறுதியளிக்கப்பட்ட படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கையின் எப்பாகத்திலும் எந்த தரத்திலும் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள் யாழ். மாவட்டத்தில் பணியாற்ற விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 29ஆம் திகதி ஆகும். இவ்விடயம் சம்பந்தமானசுற்றறிக்கையை மத்திய சுகாதார அமைச்சின் இணையத் தளத்திலும் பார்வையிடலாம். - என்றுள்ளது. (த)

# யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடன் ஊடகக்கல்வி



புதிய ஆரம்பம்: ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் அண்மையில் 30 மணி குறுகியகால ஊடகவியல் அடிப்படைப் பயிற்சி நெறியை ஆரம்பித்தது. நிகழ்வை ஆரம்பித்து வைத்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உரையாற்றுகிறார். அருகில், பயிற்சி நெறியை நடத்தும் லண்டன் பியோனா பார்ட்டன் மற்றும் ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் தேவானந்த் ஆகியோரும் உள்ளனர்.

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் புதிதாக பத்திரிகையியலுக்கான 2 ஆண்டுப்பயிற்சிநெறி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இப்பயிற்சி தொழில்சார் பயிற்சியாகும். இந்தப் பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெறும் ஒருவர் பயிற்சி முடிவில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணைய ஊடகங்களில் பணியாற்றும் ஆற்றலைப் பெறுவார். பதிப்பு ஊடகத்துறையில் செய்திகள், கட்டுரைகள் எழுதுவது, பயிற்சி இதழ் வெளியிடுவது என்பவற்றில் திறமை பெற்றிருப்பார். வானொலி ஊடகத்தில் செய்தி வாசிப்பு மற்றும் அறிக்கையிடல் விசேட நிகழ்ச்சிகள் தயாரித்தல், நேர் காணல், பெட்டக நிகழ்ச்சி தயாரிப்பு என்பவற்றோடு ஒலித் தொகுப்பு (சவுண் எடிட்டிங்) போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தொலைக்காட்சி ஊடகத்தில் கமரா கையாளும் நுட்பங்களை அறிந்து கொள்ளல், செய்தி வாசிப்பு, ஆவணப் படத்தயாரிப்பு, பெட்டக நிகழ்ச்சி தயாரித்தல், படத் தொகுப்பு (எடிட்டிங்) போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஊடகக் கற்கைக்கு ஏற்ற ஆய்வுகூட வசதிகள், எடிட்டிங், ரெக்கோடிங் வசதிகளுக்கு ஏற்றவாறான ஸ்ரூடியோ மற்றும் இணைய வசதிகளுடன் இந்த வள நிலையம் இயங்கி வருகின்றது. யுனெஸ்கோ நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் தற்போது நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளின் நிதி அனுசரணையுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# தேசிய அடையாள அட்டைப்பதிவுகள் யாழ்ப்பாணத்திலும் கணினி மயமாகும்

யாழ்ப்பாணம், நவ.10

தேசிய அடையாள அட்டைப் பதிவுகள் யாழ்ப்பாணத்திலும் விரைவில் கணினி மயப்படுத்தப்படவிருப்பதாக மாவட்ட செயலக உயர் அதிகாரியொருவர் "உதயனுக்குத்" தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைப் பதிவுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் இந்த வருட இறுதிக்குள் யாழ். மாவட்ட செயலகத்திலும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிதாகத் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்கள் முதலில் கணினி மயப்படுத்தப்படும் எனவும், பின்னர் படிப்படியாக ஏனையவை கணினி மயப்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆள்பதிவுத் திணைக்களத்தின் அனைத்துப் பணிகளும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் மூலம் புதிய நடைமுறைகள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாகவே தரவுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

தேசிய அடையாள அட்டைகள் இலத்திரனியல் அடையாள அட்டைகளாக இனிவரும் காலங்களில் வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-15)

# இருபத்தைந்து மில்லியன் ரூபா செலவில் கோப்பாயில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், நவ.10

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 25 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடந்த போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, தேத்தாவளவு வீதி, கோவில் வீதி, செமிர்ரரி வீதி, அத்தியடி வீதி, செம்பிக்கலட்டி வீதி, தயக்கடிலம் வீதி ஆகிய 6 வீதிகளும் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் வளஸாயிலுள்ள சந்தைக் கட்டடம் 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளன. (எ- 15)




# யாழ். மத்திய கல்லூரியில் 13ஆம் திகதி தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். மத்திய கல்லூரியில் இம்மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள தொழிற்சந்தையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் வழங்குநர்கள் எவரும் பங்குபற்றவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பணியாளர்கள் தேவைப்படுகின்ற தனியார் தொழில் நிறுவனங்கள் தொழிற்சந்தையில் பங்குபற்ற விரும்பினால் நிறுவனம் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எந்தவொரு தனியார் தொழில் நிறுவனங்களும் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தொழிற்சந்தையில் பிற மாவட்டங்களிலிருந்து வருகை தரும் தனியார் தொழில் நிறுவனங்கள் மட்டுமே பங்குபற்றவுள்ளன.

இதுவரை 90 வீதமான தனியார் தொழில் நிறுவனங்களும், எஞ்சியவை அரசாங்க தனியார் தொழில் நிறுவனங்களும் பங்குபற்ற இருக்கின்றன. அத்துடன் பதிவு செய்யப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளும் இதில் பங்கேற்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பான்மையான வேலையற்ற பட்டதாரிகள் இத்தொழிற்சந்தையில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொழிற்சந்தையானது யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த- 15)

# நெடுங்குள மக்களின் காணிப்பிரச்சினை; அமைச்சர் டக்ளஸ் நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். நகருக்கு கிழக்கிலுள்ள குடியேற்ற கிராமமான நெடுங்குளத்திற்குவிஜயம்மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அம்மக்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் குடியிருப்பு பிரச்சினைகள் தொடர்பாக நேரில் கண்டறிந்தார்.

தமது காணி உரிமம் காரணமாக தாம் அரசாங்கத்தினதும், உலக வங்கியினதும் வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என அக்கிராம மக்கள் தெரிவித்ததை அடுத்து அது தொடர்பாக ஆராய்வதற்காகவே அக்கிராமத்திற்கு அமைச்சர் நேரடியாகச் சென்றிருந்தார்.

இவ் விஜயத்தின் போது யாழ். பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ, யாழ். மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ, நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிநிதிகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரும் உடனிருந்தனர்.

ஜே 61 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நெடுங்குளம் மாதர் கிராமிய அபிவிருத்தி சங்க கட்டடத்தில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் தனி ஒருவரின் சொந்த காணியாகிய 110 பரப்பு மற்றும் 90 பரப்பு ஆகிய அளவு கொண்ட நிலப்பகுதியில் இருந்து மேற்படி குடியேற்ற மக்கள் தமது காணிகளை கொள்வனவு செய்திருந்தமை கண்டறியப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டதிட்டத்தின் பிரகாரம் 39.5 பரப்பு அளவுடைய தனியொருவரின் காணியானது பிரிக்கப்படும் போது அதில் 10 பரப்பானது பொது நோக்கு தேவைக்கென வழங்கப்பட வேண்டும் என்பதுடன் வீடுகளுக்கான வீதி அமைப்பானது உரிய அளவுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்ற நடைமுறை இங்கு பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்ற விடயம் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கண்டறியப்பட்டது.

இதன் காரணமாகவே அவர்கள் மாநகர சோலை வரி செலுத்த அனுமதி வழங்கப்படவில்லை என ஆணையாளர் தெரியப்படுத்தினார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் அணுகாது தடுப்போம்

**இன்று நம்மில் பெரும்பாலானோர் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நோயை அணுகவிடாது தடுப்பது பற்றிய குறிப்புகள் அடங்கிய இக்கட்டுரை சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி இங்கு பிரசுரமாகிறது.**



விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் மனிதனின் வாழ்க்கை முறையை முற்றாக மாற்றிவிட்டுள்ளது. பொருளீட்டு முனைப்பினால் இன்றைய மனிதன் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறான். உடலுழைப்புக்குப் பதிலாக இயந்திரசாதனங்களே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதனால் போதிய உடல் உழைப்பு, மற்றும் உடற்பயிற்சி இன்றி வாழ்வதுடன் அவன் இலகுவில் கிடைக்கக் கூடிய செயற்கையாக, சுவையூட்டப்பட்ட டின்களில் அடைக்கப்பட்ட, பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை தேவைக்கு அதிகமாக உட்கொள்ளுகிறான். இதன் காரணமாக கூடிய கொழுப்புச் சத்தையும், மாப்பொருளையும் உடல் பெற்றுக்கொள்கிறது. இதனால் உடலின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. அந்த வகையில் உடல் பருமன் கூடி நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றான். இதனால் இன்று எங்கு பார்த்தாலும் நீரிழிவு நோயாளர்களைக் காண்கின்றோம். எனவே மனிதன் வாழ வேண்டிய பாதி வயதில் கிளினிக் கொப்பியுடன் வைத்தியசாலைக்கும், வீட்டுக்கும் மாறி மாறி அலைகின்றான்.

எனவே இதனைத் தவிர்ப்பதற்கு இன்றே நாம் திட்டமிட்ட வாழ்க்கை முறையை தெரிவு செய்து எமது அடுத்த பரம்பரையாவது இந் நோய்களிலிருந்து விடுபட முயற்சிப்போம். மேற்படி நோய்கள் பரம்பரை பரம்பரையாக தொடர்வதால் இன்றே திட்டமிட்ட உணவுப் பழக்கத்தையும், உடற்பயிற்சிகளையும் மேற்கொண்டு ஆரோக்கியமானவர்களாவோம்.

இன்றைய உலகில் வளர்முக நாடுகள் பலவும் உணவுப்பழக்க வழக்கம் பற்றியும், உடற்பயிற்சி, யோகா, தியானம் பற்றியும் அதிகமாக பேசுகின்றன. உடல் பருமனைக் குறைப்பதற்காக பல இயந்திர சாதனங்களையும் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. எனவே நாம் இவற்றிலிருந்து விடுபட எமது பாரம்பரிய முன்னோர் வழி வகுத்த சில வழிமுறைகளை பின்பற்றி எமது இனிய வாழ்வை ஆரோக்கியமானதாக்குவோம்.

★உணவு என்பது பசியை தணிப்பதற்காகவும், உடல் இயக்கத்தை பேணுவதற்கும் போதியதாக இருக்க திட்டமிடுவோம். கண்ட கண்ட நேரங்களில், கண்ட கண்ட உணவுகளை உண்டு உடற்பருமனை கூட்டுவதைக் தவிர்ப்போம்.

★உணவில் மாப்பொருள், புரதம், நார்ப்பொருள், கனியுப்புக்கள் என்பன போதியளவில் அமைய உணவை திட்டமிடுவோம். சீனிசார்ந்த மாப்பொருளுணவுகள், கொழுப்புணவுகளை கூடியளவு குறைப்போம்.

★மரக்கறிவகைகள், கீரைவகைகள், பழங்கள், முழுத் தானியங்கள் போன்ற நார்ப்பொருள் உணவுகளை உணவில் கூடுதலாக இருக்க நிச்சயப்படுத்திக் கொள்வோம்.

**செ.தவச்செல்வம்**
**நீரிழிவு சுகாதாரக் கல்வி தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

★நீரை நிறைய அருந்துவோம். அது தாகத்தையும் தீர்க்கும், உடல் பருமனை அதிகரிக்காது. மதுபானங்கள் , மென்பானங்கள் அருந்துவதை குறைக்கவோ, தவிர்க்கவோ முயற்சிப்போம்.

★உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்காக சீனிசார்ந்த உணவுப்பண்டங்கள் (சொக்கலேட், பிஸ் கட், கேக், கண்டோஸ் போன்றன) செயற்கை சுவையூட்டப்பட்ட உணவு வகைகள்(Pizaa, Noodles, Fried rice) போன்றவற்றை வழங்குவதை குறைக்க முயற்சிப்போம். அதற்கு பதிலாக பழங்கள், தானியங்கள் (பயறு, கடலை, கௌபி, நிலக்கடலை போன்றன) கொடுத்து அவர்களின் வாழ்வை மேம்படுத்துவோம்.

★கொழுப்புக் கூடிய எண்ணெய் வகைகள்(தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய்), இறைச்சி வகைகள் போன்றவற்றை தவிர்க்க முயற்சிப்போம். நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றையும், கோழியிறைச்சி, சிறிய மீன் வகைகளையும் கூடுதலாக உணவில் சேர்க்க முயற்சிப்போம்.

★ஒரே இடத்தில் தொடர்ந்து இருக்கும் சோம்பலான பொழுது போக்குகள்(T.V.பார்த்தல், Computer game விளையாடுதல்) போன்றவற்றைக் குறைத்து சிறுவிளையாட்டுகள், உடற்பயிற்சிகள்(நடத்தல், ஓடுதல், வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுதல், வீட்டு வேலைகளில் ஈடுபடுதல்) போன்றவற்றில் ஈடுபடுவோம்.

★மனதுக்கும், உடலுக்கும் தெம்பூட்டும் யோகாக்கள், தியானங்களில் ஈடுபடுவோம். மனிதர்களுடன் மனம் விட்டுப் பேசுவோம்.

இத்தனையும் இன்றே திட்டமிடுவோமானால் நாளை நாம் வெற்றியாளர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் மாறுவோம்.

ஊடக அனுசரணை உதயன்



கொழும்பு, வெள்ளவத்தை ராமகான சபாவில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீவித்யா சர்வதேச இந்து மத பீடத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் சர்வதேச இந்து மத பீடாதிபதியாக சிவஸ்ரீ சம்பு மகேஸ்வர சிவாச்சாரியார் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு இலங்கையின் மூத்தகுரு கப்பித்தாவத்தை பா.சண்முகரட்ணசர்மா அரச அங்கீகாரச் சான்றிதழ் வழங்குவதையும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன், ஜனாதிபதியின் இணைப்பாளர் ஆர். பாபு சர்மா, தெல்லிப்பழை விஸ்வ நாராணய சர்மா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.(த)

**வேலை தேடுகிறீர்களா..?**
**இது உங்களுக்கு...**



## பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களைப் பணிக்கு அமர்த்தல்

ஏ.டிபி.யின் நிதியுதவியுடன் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் நெடுஞ்சாலைகள் திட்டத்திற்குத் தேவைப்படும் பின்வரும் பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பதவிகள்
01. வதிவிடப் பொறியியலாளர்
02. நெடுஞ்சாலைத் திட்டப் பொறியியலாளர்
03. பாலங்கள் அமைப்புப் பொறியியலாளர்
04. அளவுப் பொறியியலாளர்
05. உதவி வதிவிடப் பொறியியலாளர்
06. ஏனைய சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்

மற்றும் கட்டுமான மேற்பார்வையாளர்கள், சமூக அறிவியலாளர், பொருளியலாளர், சூழலியலாளர், மீள்குடியேற்ற நிபுணர், பொதுத்துறை முகாமைத்துவ நிபுணர்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 12.11.2010 மேலதிக விவரங்களுக்கு நவம்பர் 8ஆம் திகதிய டெய்லி நியூஸ் பத்திரிகை லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான- ஆணைக்குழு.

**உதவிப் பணிப்பாளர் (சட்டத்துறை) பதவி**

**தகைமைகள்:**
1. 26.11.2010 அன்று 22 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 26.11.2010
மேலதிக விவரங்களுக்கு நவம்பர் மாதம் 4ஆம் திகதிய 1679ஆம் இலக்க வர்த்தமானியைப் பார்க்க.

## வாசகர் திருமுகம்

### புதிய பாலம் அமைப்பதற்கு நன்றிகள்

கைதடி- கோப்பாய் B 268 வீதியில் புதிய பாலம், வீதி செப்பனிடல் ஆகியவற்றைச் செய்துதந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதி அமைப்பு அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் யாவருக்கும் நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வீதியைச் சிறப்பாக மேலும் செப்பனிடுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.

**கைதடி வடக்கு.** **வே.தபேந்திரன்.**

### மீண்டும் ஆரம்பமாகியுள்ள மின்சாரத் துண்டிப்பு

கடந்த சில நாள்களாக யாழ்.குடாநாட்டில் மின்சாரமானது இரவு வேளைகளில் தடைப்படுகிறது. இதனால் யாழ்ப்பாணம் இருளில் மூழ்கிப் போகிறது. அன்றாட கடமைகளும் தடைப்படுவது மட்டுமல்லாமல் சில அசம்பாவிதங்களும் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நடைபெற இருப்பதால் அப்பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் இரவு வேளைகளில் மின்வெட்டு அமுலுக்கு வருவதால் அவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு தடங்கல் ஏற்படுகின்றது.

சில தனியார் கல்வி நிறுவனங்கள் இரவு வேளைகளில் இயங்குவதால் அங்கு மாணவர்கள் மின் துண்டித்தலால் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். இந் நடைமுறை தொடருமாக இருந்தால் 'சகல செயற்பாடுகளிலும் குடாநாடு ஸ்தம்பிதம் அடையும்'. எனவே இதற்குரிய அதிகாரிகள் கூடி விரைவில் இதற்கான தீர்வினைக் கண்டு மாணவர்களின் ஏக்கத்தைத் தீர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**சன்மார்க்க மகா வித்தியாலயம்,**
**யாழ்ப்பாணம்.** **ச.பகீரதன்.**

### பணத்திற்குப் பின்னால் சென்றால் இருக்கும் உரிமையையும் இழக்க நேரும்

20.10.2010 அன்று உதயனில் வெளியான யாழ்.ரயில் நிலையத்தில் அரங்கேறியுள்ள நாடகம், நாளாந்தம் மாறிவரும் திருகுதாளக் காட்சிகள்! என்ற தலைப்பின் கீழ் இந்த நாடகத்தின் பின்னணிக் காட்சிகள் சில வெளிக்கொணரப்பட்டிருந்தன. இதை வாசிக்கும்போது இனி தமிழரைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் பலருடைய மனதிலும் தோன்றியிருக்கும். இன்று உருவாகி உள்ள இந்த நிலைக்கு நாங்கள் ஒவ்வொருவரும் காரணகர்த்தாக்களே. அத்துடன் அறிந்தோ, அறியாமலோ இந்தப் பின்னணிக்காட்சிகளுக்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். நொந்து, வெந்துபோய் வந்த வன்னிவாழ் எம் உறவுகளுக்கு கரம் கொடுத்து அரவணைத்து இல்லிடம் கொடுத்தோம். காலம் நீள எமக்கே உரித்தான சுயநலம் எம்மை சூழ்ந்துகொள்ள தென்பகுதியிலிருந்துவரும் மக்களிடமிருந்து பணம் சம்பாதிக்க அடைக்கலம் தேடியவர்களை கலைத்துவிட்டு அந்த வீடுகளை விடுதிகளாக மாற்றிவிட்டோம். மானத்தை, உறவுகளைவிட பணம்தான் எமக்கு முக்கியமானது என்ற நிலைக்கு வந்து அடைக்கலம் கொடுத்த அந்த வீடுகளை வர்ணம்பூசி பணம் சம்பாதிக்கும் இடங்களாக மாற்றியுள்ளோம்.

ரயில் நிலையத்தில் வந்திறங்கியவர்கள் எங்கே போய்விட்டார்கள்? இப்படிப்பட்ட பணம் சம்பாதிக்கப்பட்டவர்களிடம் இருப்பிடம் தேடி போய்விட்டார்கள். மறுபுறம் மக்களின் உதவியுடன் இந்த நாடகத்தின் பின்னணியில் இருக்கும் சிலர் ஆள்கள் இல்லாத வீடுகளையும் நிலங்களையும் கைவசப்படுத்தப் பேரம் பேசும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர். பணம்தான் பெரிதென்று பணத்திற்குப் பின்னால் சென்றால் இருக்கும் கொஞ்ச உரிமைகளையும் நிலத்தையும் பறிகொடுத்து மானத்தையும் இழந்து விடுவோம்.

**அ.கனகலிங்கம்.**
**கல்வியங்காடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீடமைப்புத் திட்டம் வவுனியாவில் மார்ச் மாதம் ஆரம்பிக்கும் என்கிறார் அரச அதிபர்

வவுனியா,நவ.10

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் 7 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பணிகள் அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச். சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் யுத்தத்தால் சேதமடைந்துள்ள மற்றும் வீடுகள் இல்லாதவர்கள் என 7 ஆயிரம் குடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகிறது.

பயனாளிகள் தெரிவு நிறைவுபெற்றதும் அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் வீடமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## தேராவில் கிராமம் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு,நவ.10

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தேராவில் கிராமத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி மக்கள் மீள்குடியேற்றப்படுவார்களெனத் தெரியவருகின்றது.

இந்த மீள் குடியேற்றமும் நடைபெற்றால் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6 கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியேற்றம் பூர்த்தியாகிவிடும். இன்னமும் 13 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற வேண்டியுள்ளது. (க)




## மோசமான வீதி

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இதில் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கோடையில் கிரவல் புழுதியில் குளித்தவர்கள் தற்போது குழிகளில் காணப்படும் கிரவலும் மழைநீரும் கலந்த நீரில் குளிக்கின்றனர். (க-405)

## யானை விரட்டு....




உற்சாகம்: வன்னிப் பிரதேசங்களிலே குடிமனைக்குள் பிரவேசிக்கும் யானைகளை விரட்டிக் காடுகளில் சேர்க்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் உற்சாகமாக ஈடுபட்டுள்ளனர். புலிவேட்டைக்குப் பதில் இப்போது யானை வேட்டை.

## மாணவர்களுக்கு கௌரவிப்பும் பாராட்டும்

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுப் பாராட்டப்படவிருக்கின்றார்கள்.

நாளைய தினம் முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசராசாவும், கௌரவ விருந்தி னராக கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கமும், விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களான பொ. விஜயநாதன், திருமதி வசந்தா சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்வர். (க-405)

## பெண்களுக்கான விசேட சிகிச்சைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில்

வவுனியா,நவ.10

வவுனியா மாவட்டத்தில் தாய், சேய் சிகிச்சை நிலையத்தின் விசேட சிகிச்சைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

பெண்களுக்கான சுக வனிதையர் சிகிச்சை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் விசேட சிகிச்சைகள் தொடர்பான கலந்துரையாடலே நடைபெற்றது. வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இது நடைபெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் வைத்திய நிபுணர் திருமதி என்.மபிடிகம கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றிய திருமதி மபிடிகம இந்தச் சிகிச்சை நிலையத்தின் ஊடாக மாதம் ஒருமுறை பெண்களுக்கு விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பாக மார்பகப் புற்று நோய், நீரிழிவுப் பரிசோதனை, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் அவசியமானது.

இந்தச் சிகிச்சை நிலையத்திற்குத் தற்போது சமுகமளிப்போரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

எதிர்காலத்தில் இதன் முக்கியத்துவம் பற்றிக் கிராம மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் இந்தச் சிகிச்சை நிலையத்தை நாடி வருவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும், என்று கூறினார்.

சுமார் 40 க்கும் மேற்பட்ட குடும்ப சேவையாளர்களும், வைத்திய அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (க-501)

## மலரும் மொட்டுக்கள்

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் க.பொ.த உயர்தர கலைத் துறையின் சித்திரப் பிரிவு மாணவர்களின் மலரும் மொட்டுக்கள் என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி நேற்று நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியை கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அழகியல் பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பொன்.குணரத்தினம் கலந்து கொண்டார்.

இந்த ஓவியக் கண்காட்சியில் சமகால நிகழ்வுகள் இடம்பெற்றமை சிறப்பு அம்சமாகும். அயல் பாடசாலைகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்களும், பொது மக்களும் இந்த ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர். (க-405)

## உள்ளூராட்சிச் சபைகளின் 235 வீதிகள் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

வவுனியா,நவ.10

வவுனியா மாவட்டத்தில் பல மில்லியன்கள் ரூபா செலவில் 235 வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்குச் சொந்தமான 235 வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதிப் புனரமைப்பின் 80 வீதமான பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மிகுதிப்பணிகளும் விரைவில் பூர்த்தியாகும்.

மாகாண மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான வீதிகளும் சிறந்த முறையில் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## இனம் காணப்பட்ட 121 வாகனங்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும்

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட 121 வாகனங்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி, கிராமசேவையாளர் உறுதிப்படுத்திய இரு அடையாள அட்டைப்பிரதிகள், வரி அறவீட்டுப் படிவப் பிரதி ஆகியவற்றுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் சமுகமளித்து வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இனங்காணப்பட்டுள்ள அந்த வாகனங்களின் விவரம் வருமாறு:-

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 41-8881 | 37-8011 | HJ-2616 | HF-3041 | 54-6293 | 9SRI3204 | SA-5985 |
| JR-7191 | 37-0073 | HJ-0383 | 30-2623 | LB-9120 | QB-2274 | 49-3487 |
| 24-9516 | 270-3199 | JQ-3954 | JI-7093 | GG-3821 | JE-1807 | 36-5910 |
| 77-9104 | JG-5613 | CG-2847 | GP-2925 | 47-2308 | 36.0650 | HH-7935 |
| JH-8296 | 37-4254 | OA-5766 | 54-4800 | GN-7245 | 37-1904 | 60-1100 |
| 21-5772 | JN-2735 | JU-3599 | GX-8741 | GO-2846 | 49-3487 | GP-6032 |
| 270-2738 | 71-1485 | 46-3176 | 57-6195 | 56-5713 | 36-5910 | GY- 5818 |
| WPHP-8266 | 37-1619 | 43-2784 | HE-6026 | GZ-8907 | HH-7935 | 42-2618 |
| HB -7684 | 25-3372 | SC1140 | GY-6893 | LA-3317 | 60-1100 | JF-3449 |
| 21-7193 | 57.1703 | *HE-9605* | 36-9010 | JQ-2298 | GP-6032 | 41-8688 |
| QB-3071 | 25-5727 | 36.4627 | 59-9886 | 49-3768 | GY-5818 | 43-2227 |
| JA-8868 | GH-7620 | 36-5425 | 48-3252 | JJ-4923 | 42-2618 | 27-8011 |
| 56-8585 | 22-5104 | H L-6697 | LA-5186 | LB-2708 | JF-3449 | SA-5985 |
| LA-5988 | JL-9930 | 27-0027 | 251-8598 | GS-9949 | 41-8688 | SB-0219 |
| 25.1774 | HI-8015 | QB-6361 | 68-0226 | GG-8750 | 43-2227 | 37-4174 |
| LA•7608 | LB-9128 | GN-9410 | 63.2037 | SB-7123 | 27-8011 | [illegible] |
| JH-6327 | LA-0375 | GJ -0744 | HM-6101 | [illegible] | 77-9253 | [illegible] |

## வன்னி மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அறிய முடியாத நிலை

### கூட்டமைப்பு எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி,நவ.10

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களை ஒன்றுகூட்டி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிய முடியாத நிலை வன்னிப் பிரதேசங்களில் நிலவுவதாக வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராம மக்கள் சிறிதரன் எம்.பியைச் சந்தித்துத் தங்களது பிரச்சினைகளை எடுத்துக் கூறக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இக்கூட்டத்திற்கு ஒரு சிலரே வருகை தந்திருந்தனர்.

இந்தக் கூட்டத்திற்கு மக்கள் வருவதற்கு முன்னரே இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் வந்து விட்டனர். தங்களது பிரச்சினைகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாது என்ற காரணத்தால் பலரும் வரவில்லையென அங்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து சிறிதரன் எம்.பி. சம்பந்தப்பட்ட புலனாய்வுத் துறை அதிகாரியை அழைத்து ''நாங்கள் மக்களின் பிரதிநிதிகள். மக்களுடன் பேசுவதற்குச் சகல உரிமைகளும் எமக்குண்டு. நீங்கள் இதில் தலையிடவேண்டிய அவசியமில்லையென'' ஆவேசத்துடன் தெரிவித்தார்.

எமது மக்களின் இயல்பு நிலை திரும்புவதற்கு நீங்கள் உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொன் கழுகு

மிகவும் உயரமான மலைப் பகுதிகளின்தான் இப்பறவைகள் அபூர்வமாக வாழ்கின்றன. உயரமான மலைப்பகுதியில் குளிர் அதிகமாக இருக்கும். இரை கிடைப்பதும் கடினம். அதனால்தான் உயரமான பகுதிகளில் பறவைகள் வாழ்வதில்லை.

இதற்கு விதிவிலக்காக மலைப்பிரதேசத்தில் வாழும் பறவை பொன் கழுகு ஆகும். ஐரோப்பா, ஆசியா, வடக்கு ஆபிரிக்கா, வடக்கு அமெரிக்காவின் மலைப் பகுதிகளில் இது காணப்படுகின்றது. 90 சென்ரி மீற்றர் நீளமுள்ள இந்தப்பொன் கழுகின் இறக்கை அதிகபட்சம் 1.8 மீற்றர் நீளம் இருக்கும் பாறையின் விளிம்பில் பாதுகாப்பான பகுதிகளிலும் உயரமான மரக்கிளைகளிலும் பொன் கழுகுகள் கூடு கட்டி வாழ்கின்றன. இந்தக் கழுகுகளின் கண்கள் மிகவும் கூர்மையானவை. இரண்டு கிலோ மீற்றர் உயரத்தில் பறந்தாலும் தரையில் திரியும் சிறிய முயல்களைக் கூட கண்டுவிடும். முயல் சிறுபறவைகளின் குஞ்சுகள் இறந்துபோன விலங்குகள், மிருகங்கள் சாப்பிட்ட மீதி ஆகியன இதன் இரைகளாகும்.




# ஆந்தை

ஆந்தையின் ஒரு நேர உணவு எவ்வளவு தெரியுமா? சொன்னால் அசந்து விடுவீர்கள். ஒருநேரத்துக்கு 10 எலிகள். இப்படி ஒரு வருடத்தில் மட்டும் 150 கிலோ எடை வரையிலான எலிக் கறியை உணவாகக் கொள்ளும். இதனால் விவசாயிகளுக்கு விளை நிலங்களில் ஆந்தையின் கண்படுவது அதிஷ்டம்தான்.

க.நிம்மி.





# ஒட்டகம்

அரபு நாட்டில் வசிக்கும் பிராணிகளில் ஒட்டகம்தான் மிகப்பெரியது. இது பாலைவனக் கப்பல் என்றுகூட வர்ணிக்கப் படுகிறது. சுமை சுமப்பதும், சவாரிக்கு உதவுவதும், வண்டி இழுப்பதும், போன்ற பல வேலைகளுக்கும் இவை உதவும். மிகப் பொறுமையுள்ள பலமான பிராணி என்று கூடச் சொல்லலாம். இவற்றுக்கு தீவனம் போடுவதில்கூட சிரமம் இருக்காது. தொடர்ச்சியாக ஏழெட்டு, பத்து நாள்கள்கூட நீர் அருந்தாமல் இருக்கும். இதனால்தான் இவை பாலை வனத்தில் அதிகமாக [illegible]

க.திரு.



# தவளை

தவளைக்கு நுரையீரல் உண்டா? உண்டு. தவளையின் நுரையீரல் மெல்லிய சுவராலான இரு பைகளாகும். இவை உடற்குழி எனப்படும் பகுதியில் தொங்கிக் கொண்டிருக்கும்.

குரல் வளையின் திறப்பின் மூலம் இது வாய்க்குழியுடன் இணைந்துள்ளது. தவளை வாயினால் சுவாசிக்கின்றது. அப்போது வாய்க்குழி வழியாகக் காற்று உள்ளே செல்கிறது.

க.சோபா.

# தேவாங்கு




தேவாங்கை ஆங்கிலத்தில் [illegible] லொரிச் என அழைப்பார்கள். தென் இந்தியாவிலும் இலங்கையிலும் அடர்ந்த காடுகளில்தான் அதிகம் காணப்படுகிறது. 25 சென்ரி மீற்றர் நீளம் வரை வளரும். எடை 225 முதல் 350 கிராம் இருக்கும்.

இதன் கண்கள் பெரியவை. இரவில் விரிவடையும் தன்மை கொண்டவை. இவை தனது இரையைச் சுலபமாக அடையாளம்கண்டு வேட்டையாடும். தேவாங்கு பகல் முழுக்கத் தூங்கிவிட்டு இரவில்தான் வேட்டைக்கு வெளியில் வரும். பல்லி, சிறு பறவைகள்தான் இதற்கு இரை. ஓசை இல்லாமல் மெதுவாக நடந்து சென்று வேட்டையாடும். பெண் தேவாங்கு கர்ப்பம் தரித்து 90 நாள்களில் குட்டி போடும். எப்போதாவது அபூர்வமாகத்தான் இவை குட்டி ஈனும்.

க.விது.

# திமிங்கிலம்



டொல்பின் மீன்களில் ''போட்டில் நோஸ்'' என்ற நீண்ட மூக்கு டொல்பின்களும் உள்ளன. ஆனால் திமிங்கில வகைகளில் இந்த இனம் அரிது. இதுவும் கடல் பிராணிகளில் பாலூட்டி வகையைச் சேர்ந்தவை. தண்ணீரின் அடி ஆழத்தில் வாழும் இவை மூச்சு விடுவதற்கே கடலின் மேற்பரப்புக்கு வந்து செல்லும். இப்படி மேலே வந்து செல்வது தினமும் 3 ¾ மணி நேரம் இருக்கும்.

அட்லாண்டிக் கடல் பகுதியில் மட்டுமே இந்தப் ''போட்டில் நோஸ்'' திமிங்கிலம் அதிகமாகக் காணப்படுகின்றது. பெரிய பறவையின் மூக்குப்போல் இதன் வாய் இருக்கும்.

க.நிலா.

## மறப்பேனா?

என்னவளே!
நீ பிரிந்த போதும்
உன் நிலவு முகச் சிரிப்பை
மனதில் நீ தந்த வடுவை
மறப்பேனா!
உதறிவிட உன்னால் முடிகிறது
ஆனால்
நினைத்து அழத்தான்
என்னால் முடிகிறது.

ச.சுந்தினி,
யா/[illegible] இந்துக் கல்லூரி,
[illegible] கலைப்பிரிவு- 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் 75 ஆயிரம் குடும்பங்கள் வீடற்ற நிலையில் என்கிறார் கோத்தபாய

## அநேகமானோர் சட்ட விரோத கட்டடங்களில் தஞ்சமாம்

கொழும்பு,நவ.10

கொழும்பு நகர எல்லைக்குள் 75 ஆயிரம் குடும்பங்கள் வீடற்ற குடும்பங்களாகவும், குடிசைகளில் வசிக்கும் நிலையிலும் இருக்கின்றன என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலக நகரத் திட்டமிடல் தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

கொழும்பிலும் அதன் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் வீடுகளற்ற மற்றும் குடிசைகளில் வாழும் 75 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. அக்குடும்பங்கள் அனுமதியற்ற கட்டடங்களில் வாழ்கின்றனர். இவற்றில் அநேகமானவை அரசின் சொத்துக்களாகும். இவர்களுக்கு மாற்று இருப்பிடங்களை வழங்கும் நிலையில் திறைசேரி இல்லை. ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடுகளை அமைக்க வேண்டுமாயின் 25 லட்சம் ரூபா செலவாகும். இதனால்தான் நகர்த்திட்டம் அவசியம் என வலியுறுத்தி வருகிறோம். இவ்வளவு பெருந்தொகையான குடும்பங்களுக்கு இருப்பிடங்களை அமைக்கத் தேவையான நிதியைப் பெறுவது எப்படி?

ஆகவே, இந்தக் காணிகளை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். யுத்தம் முடிவடைந்து விட்டதாலும் நாட்டில் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஏற்பட்டதாலும் மட்டுமே முதலீட்டாளர்கள் வந்துவிடமாட்டார்கள். நாம் அவர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களது முதலீடுகள் உரிய பலனைப் பெற்றுத்தரும் என்பதையும் நாம் உணர்த்த வேண்டும் - என்றார். (சி)

# வெலிக்கடைச் சிறைச்சாலை மோதலால் பொன்சேகா பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.10

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் மூலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதற்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கிராம யாத்திரை நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க -

போர் முடிவடைந்துள்ள நிலையில் இந்த ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுற்ற நிலையில் துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் செலவில்லையென்றால் ஏன் கல்வித்துறையை விட பாதுகாப்புத்துறைக்கு அதிக நிதியை ஒதுக்க அரசு தீர்மானித்தது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (சி)

# 'இலங்கையின் எதிர்காலம்' பாரிஸில் கலந்துரையாடல்

கொழும்பு, நவ10

'இலங்கையின் எதிர்காலம்' என்ற தலைப்பிலான அரசியல் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிஸில் நடைபெற்றது.

இக்கருத்தாடலில் இலங்கை தொடர்பான சர்வதேச மற்றும் இந்திய நிலைப்பாடுகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் இன்றைய போக்கு, நாடுகடந்த தமிழ் ஈழ அரசு, புலம்பெயர் தமிழர்களின் அரசியல், இலங்கை அரசியலில் இடதுசாரிகளின் இன்றைய நிலை, புலி ஆதரவு - புலி எதிர்ப்பு, இலங்கை அரச ஆதரவுப் போக்கு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துக்களும் விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கையிலிருந்து சென்ற புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உரையாற்றினார்.

## ஆரம்பம்



பயிற்சி : வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் 'டிஜிற்றல் ஆர்ட் வேர்க்' பயிற்சி திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் உள்ள ஐ.ரி.கம்பஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் கே.சி.பெலிசியன் நடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (படம் : லக்ஸ்மன்)

## ஊடக டிப்ளோமா கற்கை நெறியை

# 2011 இல் ஆரம்பிக்கிறது இளைஞர் விவகார அமைச்சு

கொழும்பு,நவ.10

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் ஊடக உயர் டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிக்கவும், அரசியல் கற்கை நெறி நிலையம் ஒன்றை உருவாக்கவும் இளைஞர் விவகார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஊடகத்துறையின் அடிப்படை விழுமியங்களை நிறைவேற்றும் வகையில் ஊடகவியலாளர்களை உருவாக்குவது, நல்லிணக்கத்தை எதிர்பார்த்துள்ள நாட்டில் இன்றியமையாத ஒரு விடயம் என்பதால் ஊடக உயர் டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக அமைச்சு டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறியாக நடைபெறவுள்ள இப்பாடநெறிக்கான திட்டங்கள், துறைசார் நிபுணர்களால் தற்போது மேற்கொள்ளப்பட்ட வருகின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

காவலாளி, தொழிலாளி போன்ற பதவிகளுக்குக் கூட கல்வித் தகைமைகளைக் கோரும் நிலையில் இலங்கை அரசியலில் பிரவேசிப்பதற்கு மட்டும் எவ்வித தகைமையும் தேவைப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ள அரசியல் கற்கை நெறி தொடர்பில் கல்வி நிலையத்தின் ஊடாகத் தொழில்சார் அரசியல்வாதிகளை உருவாக்குவதற்கான பின்புலம் உருவாக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# ஈழ அகதிகள் தொடர்பில் ஆஸியின் கடும் போக்கில் மாற்றம் வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்

கொழும்பு,நவ.10

ஆஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் ஈழத் தமிழ் அகதிகளுக்காகத் தடுப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளமைக்கு ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஆணைக்குழு 75 பக்கங்களிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை மற்றும் ஏனைய நாட்டு அகதிகள் வரையறைக்கு உட்பட்ட அத்தியாவசிய சேவைகளேயே பெறுகின்றனர். அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

ஆஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் அகதிகளைத் தடுத்து வைத்திருப்பது, மனித உரிமைகள் கடுமையாக மீறும் செயல்.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் அகதிகளுக்கான அடைக்கலக் கோரிக்கையை கால தாமதம் செய்வதன் மூலம் ஆஸ்திரேலியா அவர்களின் தடுத்துவைத்தல் காலத்தை நீடிக்கிறது.

ஆஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகளை சுகாதாரம் மற்றும் ஏனைய சட்டமுறைகளுக்காகவே கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்புகிறோம் என அந்த நாட்டு அரசு கூறுகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று கிறிஸ்மஸ் தீவுக்கு சென்று வந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் குழுவினர் குறித்த முகாம்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை

## நல்லிணக்க ஆணைக்குழு முன் நாலக தேரர் சாட்சியம்

கொழும்பு,நவ.10

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை - என்று தேசப்பற்றுள்ள பிக்கு முன்னணியின் செயலாளர் பென்கமுவ நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னால் நேற்றுமுன்தினம் அவர் சாட்சியம் அளித்த வேளையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு தாம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது, அங்குள்ள தமிழ் மக்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரை தேர்தலில் நிறுத்தினால் அவரை தாங்கள் வெற்றிபெறச் செய்வோம் என தம்மிடம் தெரிவித்தனர் என தேரர் கூறினார்.

அதேபோல் திருகோணமலையில் கிராம மட்டத்தில் உள்ள தமிழ் மக்கள், சிங்கள இனத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு அரச அதிபரைக் கேட்டுக் கொண்டனர் எனவும் பென்கமுவ நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொன்னாலை என்ற இடத்திற்கு தாம் சென்றபோது அங்குள்ள மக்கள் தமக்கு எந்த ஒரு தமிழ்க் கட்சிகளும் தேவையில்லை எனவும், சிங்கள இராணுவமே தமக்கு உதவி வருகின்றனர் எனவும் தம்மிடம் கோரியதாக தேரர் தெரிவித்துள்ளார்.

தமது வடமாகாண விஜயத்தின்போது தாம் ஆங்கிலத்தில் மக்களுடன் உரையாடிய போதிலும், தமிழ் மக்கள் சிங்களத்திலேயே தம்முடன் உரையாட ஆர்வம் காட்டினர் எனவும் தேரர் கூறியுள்ளார். (சி)

# உள்ளூராட்சி நிறுவன ஒதுக்கீடுகளில் பெண்களுக்கு 10 வீத பிரதிநிதித்துவம்

கொழும்பு,நவ.10

புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெண் உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நாடாளுமன்றக் கட்டட வளாகத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உறுப்பினர்கள் நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் டபிள்யூ பி.டீ.தஸநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2006ஆம் ஆண்டு [illegible] தேச மகளிர் தினத்தன்று வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றிய மொன்றை நிறுவுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பால்நிலைச் சமத்துவம், அரசியல் செயற்பாட்டில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் மற்றும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் ஆகியவை ஒன்றியத்தின் நோக்கங்களாகும்

[illegible] ஒன்றிணைத்து பெண்கள் சார்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஒத்துழைத்தல் மற்றும் பெண்களின் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சட்டங்களைத் தயாரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல் போன்றவை ஒன்றிய உறுப்பினர்களின் எதிர்பார்ப்பாகும்.

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினை பற்றி இங்கு கவனம் செலுத்தப்படுவதோடு, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான உத்தேச ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த 25 வீத ஒதுக்கீடுகளில் ஆகக்குறைந்தது 10 வீதத்தைக் கட்டாயமாகப் பெண்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென் அனைத்து அங்கத்தவர்களும் கோரிக்கை விடுத்தனர். அது சம்பந்தப்பட்ட மகஜரொன்றும் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒன்றியத்தின் முதலாவது கூட்டத்தில் உத்தியோகத்தர் குழாமொன்று தெரிவுசெய்யப்பட்டது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். பல நாள்கள் இழுபறியாக இருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரலாம். சகோதரிகள் வழியில், உறவுப் பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பணி புரிவோர் திடீர் லீவு எடுக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.



**இடபம்:**
போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். நீங்கள் நல்லவர் போல நினைத்த ஒருவர் விரோதமாகச் செயற்படலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.



**மிதுனம்:**
உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். இழுபறியாக இருந்த கடன் மிகுதி ஒன்று வரும். நாடி வந்த சிலருக்கு பிறரிடம் கடன் வாங்கியாவது கொடுத்து உதவி செய்வீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பகட்டான ஆடை, ஆபரணம் அணிவீர்கள்.



**கடகம்:**
எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும். உற்றார் உறவினர்கள் கொடுக்கும் வாக்குறுதியை நம்பி சில காரியங்களில் இறங்குவீர்கள். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் தீர்விற்கு வரும். எதிர்பாராத பண வரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு.



**சிங்கம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர் போக்குவரத்துக்களால் ஆதாயம் பெறலாம். உறவினர்கள் சிலர் விடயத்தில் பரிவுடன் நடந்து கொள்வீர்கள். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களை எதிர்கொள்ளலாம். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள்.



**கன்னி:**
மாமன், மைத்துனர்கள் வழியில் மகிழ்ச்சியான செய்திகளைக் கேட்கலாம். பெற்றோர் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். வாகனங்களை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகள் மேன்மைக்காக நல்ல காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள்.



**துலாம்:**
பேச்சுத் திறமையால் நினைத்த காரியங்களை சாதிக்கலாம். சிலரைப் பார்த்து பொறாமைப் படுவீர்கள். தொழில் ரீதியான விடயங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரலாம். பிறரின் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படாமல் நினைத்தவற்றைச் செய்வீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உற்சாக அனுபவம் உண்டு.



**விருச்சிகம்:**
குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் அதிக ஆதாயம் கிடைக்கலாம். கைநழுவிப் போனதாக நினைத்த காரியம் ஒன்று மீண்டும் கைகூடலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டு. சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு தேடலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.



**தனுசு:**
நண்பர்கள் உங்கள் மனம் போல நடந்து கொள்வர். வழக்கமான பணிகள் தாமதம் ஏற்படாமல் சுறுசுறுப்பாக முடியும். பிள்ளைகளின் விருப்பங்களை கேட்டறிவீர்கள். பணப்பற்றாக்குறையைத் தவிர்க்க ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கவும். சந்தோஷ செய்திகளை கேட்கலாம். பல நாள் வேலையை இன்று சேர்த்துச் செய்யலாம்.



**மகரம்:**
பெண்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக்கலாம். உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை வாங்க அல்லது சாப்பிட பணத்தைத் தாராளமாகச் செலவிடலாம். அயலார் உங்களின் நடவடிக்கைகளைப் பார்த்து பொறாமைப்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். நோய் உபாதைகளால் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம்



**கும்பம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்ய நேரிடலாம். உங்களை விமர்சித்தவர்களே பாராட்டலாம். உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே தொலைபேசி மூலம் சில காரியங்களை முடிப்பீர்கள். ஆதாயகரமான பொருள் வரவைப் பெறலாம்.



**மீனம்:** ஏதோ ஒரு காரணத்திற்காக உங்கள் மீது கோபம் கொண்டவர்கள் சமாதானம் அடையலாம். சேமித்த பணத்தை புதிய வழிகளில் முதலீடு செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள். நிச்சயித்த காரியம் ஒன்றில் திடீரென நடக்கும் சம்பவங்களால் மாற்றம் செய்யலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியான அலைச்சல் உண்டு.

# ரிஷானாவுக்கு உயிர்ப்பிச்சை வழங்குமாறு கோரி 5,000 புலம்பெயர் இலங்கையர் ஒப்பத்துடன் மனு

கொழும்பு,நவ.10

சவூதி அரேபியாவில் மரண தண்டனைவிதிக்கப்பட்டு தவாத்மி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஷானாநபீக்கு உயிர்ப்பிச்சை அளிக்குமாறு புலம் பெயர்ந்த 5 ஆயிரம் இலங்கையர்கள் கையொப்பமிட்டுள்ள மனுவொன்றின் பிரதி நேற்று முன்தினம் இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதுவரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்மனுவின் மூலப் பிரதி சவூதி மன்னர் அப்துல்லாபின் அப்துல் அசீஸ் அல்சவுத்துக்கு கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டதாக புலம் பெயர்ந்த இலங்கையர்களின் நடவடிக்கை செயற்பிரிவின் இணைப்பதிகாரி செல்வி வயலா பெரேரா நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

இந்த மனுவின் மற்றுமொரு பிரதியை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

(ஒ-5)

## கரை ஒதுங்கியது 40 அடி நீள மீன்

வண்ணை,நவ.10

பாலைதீவுக்கு அப்பால் கக்கடதீவுக் கடலில் மிகவும் நீளமான 40 அடி மீன் செத்துக் கரை ஒதுங்கி இருப்பதாக கடற்றொழிலாளர்கள் கூறினர்.

பனை மீன் என மீனவர்களால் அழைக்கப்படும் இந்த மீன் கடந்த வாரம் மன்னாருக்கும் கக்கடதீவுக்கும் இடைப்பட்ட சமுத்திரத்தில் மிதந்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

திமிங்கில இனத்தைச் சேர்ந்த இந்த மீன் பனை போன்ற நீளத்தையும் நிறத்தையும் கொண்டிருப்பதால் பனை மீன் என்றே கடற்றொழிலாளர்களால் அழைக்கப்படுகிறது. (ஒ-160)




வவுனியா கல்வி வலயத்துக்கு சி.டி.பி.நிதி நிறுவனத்தால் 'இலகு தமிழ்' நூல் இலவசமாக வழங்கப்பட்டது. சி.டி.பி. நிறுவன அதிகாரி இளங் கோவன் கார்த்திக் வவுனியா வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி மாணிக்கவாசகரிடம் நூல் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (கு)

## ஆசையும் துன்பமும்



ஒருவர் சோளத் தோட்டத்தில் காவல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பொம்மை மாதிரி இருந்து அப்படியே தூங்கி விட்டார்.

அப்பொழுது நந்தி ஒன்று கைலாயத்தில் இருந்து சோளத் தோட்டத்தை மேய வந்தது.

அவன் திடீரென விழித்துப் பார்த்த போது நந்தி மேய்ந்து கொண்டிருந்தது. நந்தியை விரட்டிப் பிடிக்க ஓடினான். அது ஆகாயத்துக்குப் பறந்து போய் விட்டது.

மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டு நந்தியை எதிர்பார்த்த வண்ணம் இருந்தான்.

நந்தியும் வந்தது. மெதுவாகப் பாம்பு மாதிரி நெளிந்து கொண்டு நந்தியின் அருகே போனான். நந்தி வேகமாக ஓடியது. உடனே தாவி அதன் வாலைப்பிடித்துக் கொண்டான். நேராகக் கைலாயத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

பார்வதி பரமசிவனிடம் நியாயம் கேட் டான்.

அதற்கு நட்ட ஈடாக பை நிறைய தங்கக் கட்டிகளைக் கொடுத்தார்கள்.

அவனும் சந்தோசமாகப் பூமிக்கு வந்து சேர்ந்தான்.

அவனுக்கு அது தங்கக் கட்டியா? என்ற சந்தேகம் வந்தது. தனது நண்பனிடம் ''இது தங்கம் தானா?'' என்று கேட்டான்.

அது நிஜமான தங்கம் தான் என்று தெரிந்தும் ''இது பித்தளை. யார் உன்னை இப்படி ஏமாற்றியது'' என்றான் நண்பன் தந்திரமாக.

மறுபடியும் கடவுளிடம் நியாயம் கேட்க முடிவு செய்தான்.

அன்று இரவும் நந்தி வந்தது. அதன் வாலைப் பிடித்துக் கொண்டான். அப்போது அவனது காலை யாரோ பிடித்த மாதிரி இருந்தது. குனிந்து பார்த்தான். அவனுடைய நண்பன்.

நண்பன் உனக்கு "எவ்வளவு தங்கம் கிடைத்தது" என்று கேட்டான். அவன் ''இதோ இவ்வளவு இருக்கும்'' என்று கைகளைக் காட்டினான். அவ்வளவு தான் இரண்டுபேரும் கீழே பொத்தென்று விழுந்தார்கள். நந்தி மேலே பறந்து போய் விட் டது.

கோ.ச.வாசிநாதன்.

## தெய்வ குஞ்சரிமணவாளன்!

ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதன் வெளிப்பாடு புன்னகை. இதனைத்தான் அழகுத் தமிழில் முறுவல் என்பார்கள்.

சீதையின் புன்முறுவலை ''புதியதோர் முறுவல் பூத்தாள்'' என்பார் கம்பன். பெண்கொடி தானே! அதில் புன்முறுவல் பூப்பது பொருத்தம் தானே! அபிராமி அந்தாதியும் அம்பிகையின் அழகுப் புன்முறுவலை ''பவனி முறுவல் துவளப் பெறாது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்'' என்று கூறுகிறது.

சிலபேர் பிறரைப் பார்க்கும் போது கண்ணாடியை அணிந்து கொள்கிற மாதிரி சிரிப்பை எடுத்து முகத்தில் அணிந்து கொள்வார்கள். புன்னகை மாறாத முகமாக இருந்ததால் கோபமற்றவர், அன்பானவர், நெருங்கத் தக்கவர். இப்படிப் பல்லுக்கு ஒரு பண்பு வைத்து முப்பத்திரண்டு பெருமைகள் கூறலாம்.

''முத்து'' என்றதும் அருணகிரிநாதர் பல்லைப்பற்றிச் சிந்தித்தார். மலருக்கு ஒளி உண்டு என்பதே பாரதி பாடிய பின்தான் பலருக்குத் தெரியும். "சோலை மலர் ஒளியோ உனது சுந்தரப் புன்னகைதான்'' என்று புன்முறுவலை ''சோலை மலர் ஒளி'' என்றார் பாரதி.

பல்லின் ஒளி வரிசையாக இருந்தால் சிறப்புக்களை இணைத்து ''முத்தைத்தரு பக்தித்திரு நகை'' என்றார் அருணகிரிநாதர். பக்தி என்றால் வரிசை, அந்தப் பல் வரிசைக் குரியவர் 'அத்தி' என்றும் அவர்தம் 'இறை' முருகன் என்றும் இணைத்து அத்திக்கிளை என்று பாடினார்.

முருகனின் மனைவியாகிய தேவயானை 'ஐராவதம்' என்கிற இந்திர உலக யானையால் வளர்க்கப்பட்டவள். விஸ்ணு குமாரத்தி தேவயானையால் வளர்க்கப் பட்டமையால் 'தேவயானை' என்றே அழைக்கப்பட்டாள். நன்றி மறவாத நல்ல திருப் பெயர்.



காஞ்சி மா நகரில் உள்ள மலைக்கு 'அந்திகிரி' என்று பெயர் காஞ்சி புராணத்தில் அதன் பெயர் கூறும்போது அந்தி என்றால் 'தேவயானையாகிய ஐராவதம்' என்கிறது. 'ஐராவத்தால் பூஜிக்கப்பட்ட மகாவிஷ்ணு அவர் எனக் கூறுகிறது காஞ்சி புராணம்.

தெய்வயானை வருந்தித் தவமிருந்து முருகனை மணந்தாள். ஆறுபடை வீட்டில் மங்கல மணம் நிகழ்ந்த இடம் என்பதால் முதற்படை வீடாகக் கொண்டாடப்படுவது திருப்பரங்குன்றம்.

முருகனுக்க வலப்புறம் வள்ளியும், இடப்புறம் தெய்வானையும் யோக நெறிப்படி நமது இடது சுவாசம் இடகலை, வலது சுவாசம் பின்கலை. இடகலை, பின்கலை இரு சுவாசமாகவே முருகனின் இரு மனைவியர் உணரப்படுகின்றனர்.

முருகன் தமிழ்க் கடவுள், உயிர் எழுத்து 12, திருக்கை எனவும் மெய்யெழுத்து 18 திருக்கண்கள் எனவும் ஆயுத எழுத்து, வேல் ஆயுதம் எனவும் மெல்லினம், வல்லினம், இடையினம் என்கிற பகுப்பு ஆறாக வரும் முருகனின் முகம்6எனவும் சஷ்டி 6ஆவது திதி. தெய்வாணைக்கு ''தேவசேனா'' என்னும் வடமொழிப் பெயர் உண்டு. அவளை மணந்தமையால் 'தேவசேனாதிபதி' என்றும் முருகனை அழைப்பர்.

இந்திரனுடைய தேவசேனைக்கு முருகன் பதியானதால் தேவசேனாதிபதி என்றும் சொல்வார்கள்.

சு.கி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை விட்டகலாத மாமேதை

**பேராசிரியர் துரைராஜாவின் 77 ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து, யாழ்ப்பாணச் சராசரி மனிதர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர் பேராசிரியர் துரைராஜா. இளமையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்விகற்று பின் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கணிதம் கற்று பல்கலைக்கழகத்திற்கு முதல் மாணவனாகத் தெரிவாகி பொறியியல் விஞ்ஞானப் பட்டம் பெற்று பின் பிரித்தானியாவில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக, பேராசிரியராக, பீடாதிபதியாக சேவையாற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பணியாற்றிய எமது பேராசிரியரை இத்தினத்தில் நினைவு கூர்வது சாலப் பொருந்தும்.



பேராசிரியர் தாய், தந்தைக்கு நல்ல பிள்ளை, சகோதரர்களுக்கு நல்ல முன்னோடி, தனது குடும்பத்திற்கு நல்ல தலைவன்,தன் பிள்ளைகளுக்கு நல்ல தந்தை. மனைவிக்கு நல்ல கணவன். அவர் குடும்ப வாழ்வு யாழ்ப்பாண கந்த புராண கலாசார வாழ்வுக்கு நல்லதொரு உதாரணம். பெரியோரை மதித்தல், ஆசிரியரை மதித்தல்,சமயவாழ்வில் குடும்ப வாழ்வை ஒன்றிணைத்தல்,தமிழர் கலாசாரத்தில் ஒன்றிப் போதல், கலாசார வாழ்வைத் தனது பெருமையாகக் கொள்ளல், அடுத்து வரும் சந்ததிக்கு தமிழர் வாழ்வியலின் பெருமைகளைக் கையளித்தல் போன்றவை அவர் வாழ்வின் இயல்புகளாகும். பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாணச் சமூகத்தை வலுவூட்டுவதற்காக அயராது உழைத்தவர்.தனது பொறியியல் கல்வியை தனது மாணவர்களுக்கு விருப்புடன் கற்பித்தவர்.தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அவரை நல்ல குருவாக, நல்லாசானாக மதித்து வந்தனர்.

பேராசிரியரின் மாணவன் என்று சொல்வதால் தங்களைத் தாங்களே தர முயர்த்திக் கொண்டவர்கள் பலர். அவர் மாணவர்களின் பெருமைக்குரியவர் என்பதுடன் மட்டும் நின்றுவிடாது மாணவர்களுக்கும் பெருமை சேர்த்தவர். எல்லோரையும் அறிவுடையவர்களாகவும் வினைத்திறனுடையவர்களாகவும் உருவாக்க வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவர். அவரின் கல்விசார் வரலாற்றை அவர் மாணவர்களே உலகெங்கும் பரப்பி நிற்கின்றனர் என்றால் அவர் பெருமையை பறைசாற்ற வேறு யார் வேண்டும்.

தமிழர் வாழ்விடங்களின் அபிவிருத்திக்காக திட்டமிட்டு செயற்பட்டவர். உதாரணமாக பொருளாதாரத் தடையில் அமிழ்ந்து போன யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க எல்லா தரத்திலான,எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர் கால திட்டமிடலை மேற்கொண்டவர். யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத் தடை காரணமாக இழந்த வசதிகளை மீண்டும் பெற அவர் அயராது உழைத்தவர். இடர்கால யாழ்ப்பாணத்தவரின் பொருளாதார வாழ்வியலையே தனது வாழ்வியலாகவும் மாற்றிக் கொண்டவர். அதனால்தான் அக்கால வாழ்வில் வடமராட்சியிலிருந்து சாதாரண மனிதர்கள் சைக்கிளில் வந்தபோது தானும் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து துணைவேந்தராகப் பணியாற்றியவர். அக்காலத்தில் யாழ்ப்பாணச் சராசரி மனிதர்களின் முறையையே தனது குடும்ப வாழ்க்கையை முறையாகவும் மாற்றிக்கொண்டவர். துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி மக்களில் ஒருவராக தன்னை வரித்துக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமகன்.

**பேராசிரியர் ப.சிவநாதன்**
தலைவர், பொருளியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழர் நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகக் கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி, யாழ்ப்பாணச் சமூகத்தை பல்கலைக்கழகம் வரை கொண்டு வந்தவர். வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாகவும், மீன்பிடியாளர்களாகவும் இருப்பதால் விவசாயபீடத்தை கிளிநொச்சியில் நிறுவினார். மீன்பிடிக் கற்கைக்கான திட்டங்களைத் தீட்டினார். விவசாய விளைநிலங்களுக்கிடையே விவசாயபீடம் இருப்பது போல எதிர் கால அபிவிருத்திக்கு வன்னிப் பெரு நிலப்பரப்பே மையமானது, பாதுகாப்பானது என்று கருதி பொறியியல் பீடம் ஒன்றை வன்னியில் நிறுவத்திட்டமிட்டுச் செயற்பட்டவர். இவரின் இம் முயற்சிகள் இடம், காலம், தேவையறிந்து செயற்பட்டவர் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள்.

ஒடுக்கப்பட்டவர்களிடத்தும், ஏழைகளிடத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகளிடத்தும் அன்பும் ஆதரவும், பரிவும், கருணையும் கொணடு விளங்கிய பேராசிரியர் துரைராஜா என்றும் எம் மனதை விட்டகலா மேதையாகவே உள்ளார்.

# வரலாற்றில் நிலைத்து விட்ட ரவிராஜ்

**முன்னரள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜின் 4 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

எமது இளந்தலைமுறையின் விடிவு தேடி களமிறங்கி வீறுநடைபோட்ட ஓர் இளம் அரசியல் தலைவனான மாமனிதர் நடராஜா ரவிராஜ் காவியமாகி இன்றுடன் நான்கு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்த 4 ஆண்டுகளில் எமது அரசியல் களம் வேகமான, மோசமான பல மாற்றங்களை அடைந்து, தற்போது இந்நாட்டில் தமிழினத்தின் இருப்பே ஒரு கேள்விக்குறியாக மாறியி ருக்கிறது. இப்போது ரவிராஜ் உயிரோடிருந்திருந்தால் எமக்கு நல்லதொரு அரசியல் தலைமையை வழங்கியிருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் இறுக்கமான அரசியல் சூழ்நிலையிலும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பாதையில் தனக்கேயுரித்தான ஆளுமையுடன் ஒரு ஜனநாயகப் போராளியாகத் தடம் பதித்து, போராடும் வல்லமையை அவர் கொண்டிருந்தார்.

1962ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி ஆசிரியர்களான நடராஜா - மங்களேஸ்வரி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் ரவிராஜ். சாவகச் சேரி டிறிபேக் கல்லூரியிலும், பின் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் கல்வி கற்று, அதன்பின் சட்டக் கல்லூரியில் பயின்று 1989ஆம் ஆண்டு சட்டத்தரணியாகக் கொழும்பில் தனது பணியைத் தொடங்கினார். அக்காலத்தில் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான அப்பாவித் தமிழ் இளைஞர்களை மீட்பதற்கு தனது சட்டப்புலமையைப் பயன்படுத்தினார். இதனை விட அவர்களுக்கு ஆதரவளித்து வழிகாட்டுவதிலும் கொழும்பில் முன்னின்று பாடு பட்டு வந்தார். இப்பணியில் அவர் பெற்ற கசப்பான அனுபவங்கள் யாவும் இயல்பாகவே இனப்பற்று மிகுந்திருந்த அவரது உள்ளத்தை மேலும் உரமாக்கின. தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசியல் போராட்டக் களத்துக்கு உந்தித்தள்ளவும் இவை காரணிகளாக அமைந்தன. 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகர முதல்வராகப் பதவியேற்றது முதல் தமிழர் அரசியலில் அவர் பிரகாசிக்கத் தொடங்கினார். போர்ச் சூழலில் நலிவுற்றிருந்த மாநகர சபையின் பணிகளை மீளக் கட்டியெழுப்புவதில் மும்முரமாக ஈடுபட்டார். அதே ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். பின் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.



அமரர் ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலம் வெறும் 5 ஆண்டுகள்தான். எனினும், அக்குறுகிய காலப்பகுதியில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் செய்யமுடியாத பணிகளை அவர் ஆற்றியிருந்தார். இதனை எல்லோரும் அறிவர். எத்தகைய வேலைப்பளு இருந்தாலும் மாதாந்தம் சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லமான ராஜ் அகத்தில் திரளும் மக்களைச் சந்திப்பதற்கு அவர் ஒருபோதும் தவறியதில்லை.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்வதுடன், பிரதேசத்திலுள்ள கல்விமான்களதும், முதியோர்களதும் ஆலோசனைகளைச் செவிமடுத்து அதன்வழியே, தனது பணிகளைச் செய்து வந்தார். இன்னொரு ஹிரோஷிமா என ரணில் விக்கிரமசிங்கவினால் வர்ணிக்கப்பட்ட - அழிந்து போன- சாவகச்சேரி நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதிலும், தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றுவதிலும் முன்னின்று உழைத்தார். துன்பப்படுவோருக்குத் தானாகவே முன்வந்து உதவும் பண்பைக் கொண்டிருந்தார். இதனால் தான் அவர் குறுகிய காலத்திலேயே எல்லோராலும் விரும்பப்படும் ஒரு தலைவரானார்.

**- அருந்தவபாலன் -**

இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும், அதற்கான நியாயங்களையும் மக்கள் அனுபவித்துவந்த சொல்லொணாத் துன்பங்களையும் சிங்கள மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் உரிய முறையில் கொண்டு சென்றார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் அவற்றினை மிக லாவகமாகக் கையாண்டு தனது கருத்துக்களைக் கேட்போர் மனதில் உறைக்கவும், உணரவும் வைத்தார். தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களைச் செம்மையான முறையில் பயன்படுத்தினார். குறிப்பாகச் சிங்கள ஊடகங்களை மிகச் செம்மையான முறையில் பயன்படுத்தி தமிழர் போராட்டத்தின் நியாயங்களை யும், தமிழர் தாயகத்தின் உண்மை நிலைமைகளையும் உடனுக்குடன் சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறினார். இவரது இந்தப் பணிதான் அவரது உயிரைப் பறிப்பதற்குரிய முதன்மைக் காரணியாக இருந்தது எனப்பரவலாகக் கருதப்பட்டது.

தெற்கிலுள்ள சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் அவரை விடுதலைப் புலியாகவே கருதினர். தமிழர் உரிமைக்காகப் போராடுப வர்கள் சிங்கள மக்களின் விரோதிகள் என்ற சிங்கள கோட்பாட்டாளரின் கூற்றைப் பொய்யென்று சிங்கள ஊடகங்களினூடாக எடுத்துக்கூறி, இனங்களுக்கிடையிலான நல்லுறவை ரவிராஜ் வளர்த்து வந்தார்.

மனித உரிமைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த ரவிராஜ் மனித உரிமை அமைப்புகளில் இணைந்து இலங்கையிலுள்ள சகல மக்களதும் உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்தார். இலங்கை இனப்பிரச்சினைக்கு போர் மூலம் ஒரு போதும் தீர்வு காணமுடியாது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அவர் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையின் கீழ் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென நம்பினார்.

தமிழர் பிரச்சினைக்கு யுத் தம் மூலம் தீர்வு காணமுடியாது என ராவிராஜ் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறி வந்ததால் தான் அவர் கொல்லப்பட்டார் எனக் கருதிய தென்னிலங்கை சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்கள் அவரது புகழுடலை விகாரமாதேவி பூங்காவுக்குச் சுமந்து சென்று யுத்தம் பிரச்சினைக்குத் தீர்வாகாது எனக் கோஷமெழுப் பினர். கொழும்பில் நடந்த அவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் தலைவர் களும் கலந்து கொண்டனர். இது ரவிராஜ் இன உணர்வுள்ள ஒரு தமிழனாகவும், நாட்டுப்பற்றுள்ள ஒரு இலங்கையராகவும் திகழ்ந்தமையை எடுத்துக் காட்டியது.

என் அப்பாவை இழந்து துன்பத்தில் வீழ்ந்து விட்டோம் எல்லோரும் இப்போது வருகிறார்கள். அப்பாவின் உடல் புதைக்கப்பட்டு விடும். அத்தோடு எல்லோரும் மறந்து விடுவார்கள். இந்த அர்த்தமுள்ள வார்த்தைகள் ரவிராஜின் இறுதி நிகழ்வின்போது அவரது மகள் பிரவீனாவால் கூறப்பட்டவை. அவர் கூறியது போல ரவிராஜை மட்டுமல்ல தமிழ்மக்களின் விடிவுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த அனைத்து உடன் பிறப்புக்களையும் கூட நாம் மறந்து விட்டோம். இவ்வாறே இன்றைய நிலைமைகள் தமிழர்களின் விடியலை நேசிக்கும் ஒவ்வொருவரையும் எண்ண வும், ஏங்கவும் வைக்கின்றன.

சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திரநாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள் என்று கூறப் பட்ட வார்த்தைகள். தமிழர் வாழ்விலும் வரலாற்றிலும் ரவிராஜ் என்றும் நிலைத்திருப்பார் என்பதையே உணர்த்தி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் நம்பிக்கையான நடைமுறைகள். மிக மிக குறைந்த கட்டணம்
ஆங்கிலம் பேசத்தெரிந்திருப்பின்
லண்டனில் மிகவும் பிரபலமான
HIGHLY TRUSTED மற்றும் A GRADE
கல்லூரிகளில் January/ February Intake இற்கு
கல்வியைத்தொடர ஓர் அரிய வாய்ப்பு!
சந்தர்ப்பத்தினைப் தவறாமல் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
Bank Sponsorship
ஒழுங்குகள் செய்துதரப்படும்.
AUSTRALIA, NEW ZEALAND, POLAND, SINGAPORE, MALAYSIA, INDIA போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்புவர்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
மேலதிகவிபரங்களுக்கு / தொடர்புகளுக்கு:
0750405165
cpn090@gmail.com
IELTS கற்கவிரும்புவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்
மாணவர்கள் விரும்பின் எமக்கூடாக லண்டன் சென்றவர்களுடன் தொடர்பு கொள்ளவசதிசெய்துதரப்படும்.

# மீட்டல் பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, நவ.10

தென்மராட்சி கல்வி வலயப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கான துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள் இன்று புதன்கிழமை தொடக்கம் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை கர்நாடக சங்கீதமும் நாளை வியாழக்கிழமை பரத நாட்டியமும் பயிற்சி வகுப்புகள் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும்.

சித்திரபாட பயிற்சி வகுப்புகள் கொடிகாமம் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.யிலும் சாவகச்சேரி கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

**தேவை**

பாட்டா வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் மற்றும் பழக விரும்பும் பெண் பிள்ளைகளும் தேவை.
தொ.பே:- 0776615973

**இத்தாலிக்கு...**

குறைந்த செலவுடன் தொழில் விசா பெற்றுச் செல்வதற்கு உரிய சகல ஆலோசனைகளும் வழங்கப்படும்.
முற்பணம் இல்லை.
உடன்தொடர்பு கொள்ள
T.P. 0724670551.

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் தில்லைநாதன்



பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தில்லைநாதன் (04.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் பூமணி, தவமணி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.11.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவமணி (சகோதரி),
தேவி (மருமகள்).

இல.7/8, பிறவுண் றோட்,
முதலாம் ஒழுங்கை.

# சாஹித்திய மலர் வெளியீடு

கொழும்பு, நவ.10

அரச இலக்கிய விழாவிற்கு இணையாக அரச இலக்கியக் குழுவினரால் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ''சாஹித்திய விசேட மலர்'' வெளியிடப்படவுள்ளது.

இந்த மலர் நாளை வியாழக்கிழமை கொழும்பு 7, சுதந்திர ஒழுங்கையில் உள்ள நூலக மற்றும் ஆவணச்சபை கேட்போர் கூடத்தில் வைத்து பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்திரா வன்னியாராட்சி மற்றும் பிரதி அமைச்சர் குணரட்ண வீரக்கோன் ஆகியோர் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலைஞர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (319)

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 697 திகதி 08-11-2010

வெற்றி எண்கள்

**05 21 23 50 J** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 12,124,810/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,124,810/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 2,000/= | 24,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 409 | 1,000/= | 409,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 657 | 1,000/= | 657,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16261 | 60/= | 975,660/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7775 | 40/= | 311,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 191397 | 20/= | 3,827,940/= |
| | | மொத்தம் | ரூ. 7,004,600/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 600520319-8-48 |
| கண்டி | 600535158-5-25 |
| அம்பாந்தோட்டை | 600522091-5-45 |
| மொனராகலை | 600523530-4-44 |
| கொழும்பு | 600533924-2-32 |
| கொழும்பு | 600529468-2-02 |
| புத்தளம் | 600520469-3-43 |
| கொழும்பு | 600537914-9-29 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,404,600/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 12,643,000/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 11 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# 29 ஆவது பிறந்த தினமும் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

தாயின் மடியில்: 10.11.1981

இறைவன் அடியில்: 21.11.2005



## சிவசுப்பிரமணியம் பானுறூபன்

எமது அன்புச் செல்வமே றூபா
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எம்மோடு நீ வாழ்ந்த
பசுமை நினைவுகள் அத்தனையும்
என்றென்றும் எம் மனதில்
நிறைந்திருக்கும் நிலைகொள்ளும்.
உனது ஆத்மா சாந்தி பெற
மூத்தவிநாயகர் பாதம் பணிகின்றோம்



அப்பா, அம்மா, அண்ணன், தம்பி (பிரான்ஸ்), அண்ணி, அத்தான், அக்கா (கனடா), பெறாமகள், மருமக்கள்(கனடா)

மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய்,
கரவெட்டி.

# மழைபெய்த வேளை கடையில் திருட்டு

வலி.வடக்கு, நவ.10

மழைபெய்த வேளை அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட திருடர்கள் கடையை உடைத்துப் பெரும் தொகைப் பணத்தையும் பெறுமதிமிக்க ஏராளமான பொருள்களையும் அள்ளிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இணுவில் சந்திக்கு அருகில் கே.கே.எஸ்.வீதியில் இடம்பெற்றுள்ளது.

பிரதான வீதியில், சன நடமாட்டம் அதிகரித்த இடத்தில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதால் அப்பகுதி வர்த்தகர்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளார்கள்.

இந்தத் திருட்டுச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-86)

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 780
சீட்டிழுப்பு திகதி 08.11.2010

எழுத்து: **J** வெற்றி இலக்கங்கள்: **09 15 19 46**


| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 26,725,458.40 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 10 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 306 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 613 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15576 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8841 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 221758 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 34870 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,468,800.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 26,876,978.40

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk




# வாக்காளர் பதிவு 2010

## வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.
- ✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:
CPA
minority rights group international

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 60 ஆண்டு காலப் போராட்டத்தின் இலக்கு வெற்று மாகாண சபைகளைப் பெறுவதல்ல

## கிழக்கு முதல்வரின் கருத்துக்கு அரியநேத்திரன் பதிலடி

மட்டக்களப்பு,நவ.10

''60 வருடங்களாகத் தொடரும் தமிழ் மக்களின் போராட்டத்தின் இறுதி இலக்கு எந்த வித அதிகாரங்களும் இல்லாத மாகாண சபையல்ல. இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குள் நிரந்தரமான அதிகாரங்கள் கொண்ட அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும். இதுவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு.

- இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். வடக்கு, கிழக்கு



மாகாணங்களை இணைத்தால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக வருவார் என கிழக்கு முதலமைச்சர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

''இணைந்த மாகாணத்திற்குள் யார் வேண்டுமானாலும் அதிகாரத்திற்கு வரலாம். அவர் ஒரு முஸ்லிமாகக் கூட இருக்கலாம். தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவராக அந்த முதல்வர் இருக்கவேண்டும் என் பது மட்டுமே முக்கியமா னது.

எதிர்காலத்தில் எட்டப்படும் எந்தவொரு தீர்வும் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கியதாகவே இருக்க வேண்டும்'' - என்று தெரிவித்தார் அரியநேந்திரன்.

முதலமைச்சர் சந்திரகாந்தனின் கருத்துப்படி இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக மாகாண சபை முறைமையைத் தான் அவர் ஏற்றுக்கொள்கிறார் போன்று தோன்றுகின்றது எனவும் அவர் கூறினார்.

மாகாண சபை முறை வடக்கு, கிழக்கு மக்களுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது எனப்பதைச் சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், ''ஆனால் 9 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு எந்தவித அதிகாரங்களுமற்ற வெறும் பொம்மையாக அவை வைக்கப்பட்டுள்ளன.

எனவே மாகாண சபை தமிழ் பேசும் மக்களுக்கான இறுதித் தீர் வல்ல.

இணைந்த வடக்கு -, கிழக்கிற்குள் காணப்படும் அதிகாரத்துடன் கூடிய தீர்வே இறுதித் தீர்வாகும். எங்களிடத்தில் எந்த வித பிரதேச பாகுபாடுகளும் கிடையாது'' - என்றார்.

(உ-21)




## வர்த்தக நிலையத்தில் இரவில் கொள்ளை

மட்டக்களப்பு,நவ.10

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஹைறாத் வீதியில் அமைந்துள்ளசில்லறைக்கடையொன்று ஞாயிறு இரவு இனந்தெரியாத நபர்களால் சூறையாடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

மேற்படி கடை ஞாயிறு இரவு பதினொரு மணிக்கு மூடப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு திறப்பதற்கு வந்த போது கடை உடைத்திருப்பதைக் கண்ட கடை உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்

கடையில் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபா பணம் மற்றும் பெருந்தொகைபொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பொருள்களின் பெறுமதியை பொலிஸார் மதிப்பீடு செய்வதுடன் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## யுத்தம் பாதித்த மட்டு. மக்களில் 100 குடும்பங்களுக்கு இழப்பீடுகள்

மட்டக்களப்பு,நவ.10

யுத்தம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தக் குடும்பங்களுக்கு 12 மில்லியன் ரூபாவை இழப்பீடாக வழங்க உள்ளதாக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீட்டுத் தொகை எதிர்வரும் 12 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்படும் எனவும் அன்றைய தினத்தில், சுய தொழில் நடவடிக்கையில் ஈடுபட பொருத்தமானவர்களை தெரிவுசெய்யும் நேர்முக பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை புளியங்குளம், முல்லைத்தீவு, நெடுங்கேணி போன்ற பிரதேசங்களில் உள்ள 250 வீடுகளைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ள தாகவும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(த-21)

## மட்டு. வாவி அழகுபடுத்தும் பணிகள் முதலமைச்சர் தலைமையில் ஆரம்பம்

மட்டக்களப்பு,நவ.10

யுத்தம் நிறைவடைந்து அமைதிச் சூழல் தோன்றியுள்ளதால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துவருகின்றது.

இதன் காரணமாக இம்மாவட்டத்தில் உல்லாச பயணிகளைப் பெரிதும் கவரும் இலங்கையின் இரண்டாவது பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியை அழகுபடுத்தும் பணிகள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வாவிக் கரையோரம் முதலில் முழுமையாக தூய்மைப்படுத்தப்பட்டு வாவியோரங்களில் உல்லாசப் பயணிகள் அமர்ந்திருப்பதற்கான இருக்கைகளும் அமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு வாவியை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன.இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு கிளை இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மட்டக்களப்பு பிரதேச செயலாளர் கலாமதி பத்மராஜா தூய்மைப்படுத்தும் பணிகளை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு இடம் பெறவுள்ளதாக மட்டக்களப்பு இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் கே.காந்தன் தெரிவித்தார்.

இப்பணிகளுக்கான நிதியினை கிழக்கு மாகாண சபை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(த-21)

## விலைவாசி உயர்வைக் கண்டித்து ஹற்றனில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

கண்டி,நவ.10

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு ஹற்றன் பஸ் நிலையம் அருகாமையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக தொழிலாளர் முன்னணி ஆகிய கட்சிகள் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இதில் மத்திய மாகாணசபை ஐ.தே.க. உறுப்பினர் கே.கே. பியதாஸ, ஜ.தொ.மு. நிதிச் செயலாளரும் மாகாணசபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் மற்றும் நகர, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், தோட்டத் தொழிலாளர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ''அரசே மாவின் விலையை உடனடியாகக் குறை அல்லது மானியம் வழங்கு'' ''உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கு'' ''தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை களை உடனே தீர்த்து வை'' ''பெருந்தோட்ட மக்கள் என்ன மாற்றான் தாய்ப் பிள்ளைகளா''? ''சரத் பொன்சேகாவை விடுதலை செய்'' என்று கோஷங்களை எழுப்பினர்.

பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பந்தமான எதை எடுத்தாலும் அரசு, கூட்டு ஒப்பந்தம் என்ற ஒன்றைக் கூறி நழுவுகின்றது - என மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

(ளி)

## லக்ஷபான நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் திறப்பு

கொழும்பு,நவ.10

லக்ஷபான நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் நேற்று முன்தினம் காலை திறக்கப்பட்




டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் அதிக மழை பெய்து வருவதையடுத்து இரு வான் கதவுகளும் 6 அங்குலம் வரை திறக்கப்பட்டுள்ளன என நீர்த்தேக்கத்தின் கடமை நேரப் பொறியியலாளர் குறிப்பிட்டார்.

எனவே, களனி கங்கையை அண்மித்த கித்துள்கல, தெஹியோவிட்ட, யட்டியாந்தோட்டை மற்றும் களுகல பகுதிகளிலுள்ள மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுவதாகத் தெரிவித்த பொறியியலாளர், மழை குறைவடைந்தால் வான் கதவுகள் மூடப்படும் என்றும் தெரிவித்தார்.

(ளி)

## இந்திய அரசின் உதவியுடன் மலையகத்தில் 5,000 வீடுகள்

கண்டி,நவ.10

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமைய இந்திய அரசு மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இதனொரு கட்டமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 50,000 வீடுகளில் 5,000 வீடுகள் மலையகத்தில் அமைக்கப்படும் - என இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

இந்திய அரசினால் பெருந்தோட்டப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுவதற்காக பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நுவரெலியா பிரதேசசபையில் நடைபெற்றது. பஸ்களைக் கையளித்து உரையாற்றிய அசோக் கே. காந்தா தெரிவித்தவை வருமாறு:-

மலையக மக்களுக்கும் இந்தியா விற்கும் பூர்வீகத் தொடர்பு இருக்கிறது. பல வருடங்களாக இலங்கையில் யுத்தம் நடைபெற்றது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டிய தேவை இருந்தது. அந்த விடயங்களுக்கு நாம் முக்கியத்துவமளித்தோம்.

அதேவேளை, மலையக மக்களினது நன்மை கருதி பல திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறோம்.

இனிவரும் காலங்களில் மலையக மக்களின் அபிவிருத்தியில் இந்திய அரசின் பங்களிப்பு இருக்கும். வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்படும் 50,000 வீடுகளில் 5,000 வீடுகளை மலையகத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், டிக்கோயாவில் சகல வசதிகளையும் கொண்ட நவீன வைத்திய சாலையொன்றும் அமைக்கப்படும்.

மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இ.தொ.கா. பெரிதும் அக்கறை காட்டி வருகின்றது. அதன் வேண்டுகோளுக்கமைய இந்திய வம்சாவளி மாணவர்களின் உயர் கல்விக்காக இந்திய அரசு மகாத்மா காந்தி புலமைப் பரிசிலை வழங்கி வருகிறது.

2,500 மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசிலை வழங்க முடியும். இருப்பினும் வெறுமனே 400 மாணவர்களே இதில் பயன் பெறுகின்றனர். ஆசிரியர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி அதிக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

மலையகத்தில் அறிவியல் கல்வியை விருத்திசெய்ய வேண்டும் என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டார். இதற்கிணங்க மலையகப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தைப் போல இன்னொரு தொழிற் பயிற்சி நிலையம் ஊவா மாகாணத்தில் அமைக்கப்படும். இங்கு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு புதிய பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும் - இவ்வாறு அசோக் கே.காந்தா குறிப்பிட்டார். - (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.வி.பரணிதரன்,
மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை.
தொ.பே.இல: 072-5562646

G.C.E.(O/L)
வலம்-4
வெளியீடு-1
பதுளை

## விஞ்ஞானம் - I

நேரம்: 1 மணித்தியாலம்

01. இலத்திரனை கண்டுபிடித்தவர்.
1) சட்விக். 2) J.J.தொம்சன். 3) இரதபோட். 4) தாற்றன்.

02. உந்தம், உந்தமாற்று வீதம் என்பவற்றின் அளவுகள் முறையே.
1) $kgms, kgms^{-1}$ 2) $kgms^{-1}, kgm$ 3) $kgms^{-1}, kmgs^{-2}$ 4) $kgms^{-2}, kmgs^{-1}$

03. குழிக்குடலிகளுக்கு உதாரணம்.
1) மண்புழு. 2) நண்டு. 3) ஐதரா. 4) நத்தை.

04. அலுமினியத்தின் நியம குறியீடு $^{27}_{13}Al$ ஆகும். $Al^{31}$ அயனில் உள்ள இலத்திரன்கள், நியூத்திரன்கள் என்பவற்றின் எண்ணிக்கைகள் முறையே.
1) 13, 14 2) 13, 27 3) 10, 13 4) 10, 14

05. விஞ்ஞான முறையின் முதலாவது படிமுறை.
1) எதிர்வுகூறல். 2) அவதானம்.
3) முடிவுகூறல். 4) கருதுகோள் உருவாக்கல்.

06. 20kg திணிவுடைய பொருள் $3ms^{-1}$ வேகத்தில் இயங்குகின்றது. இப்பொருளின் இயக்கப்பாட்டு சக்தி,
1) 60J 2) 180J 3) 66.6J 4) 90J

07. தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
1) கலங்களில் கடத்தல் செயற்பாட்டை அகமுதலுருச் சிறுவலை, கொல்கியுடல் என்பன மேற்கொள்கின்றன்.
2) இலைகளில் கீழ்புற மேற்றோலில் மட்டுமே இலைவாய்கள் உள்ளன.
3) ஒளித்தொகுப்பு தாக்கத்திற்கு எதிரான இரசாயன செயன்முறைகள் இழைமணியில் நிகழ்கின்றன.
4) சைகஸ் தாவரம் பூக்களை உருவாக்காதபோதும் வித்துக்களை உருவாக்கும்.

08. மூலகம் X ஆனது இரண்டாம் கூட்டத்தை சேர்ந்ததாகும். மூலகம் X இன் பொசுபேற்றின் சூத்திரம்,
1) XPO 2) $X_2PO_4$ 3) $X_3(PO_4)_2$ 4) $X(PO_4)_3$

09. நிலமட்டத்தில் இருந்து () வேகத்தில் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படும் பந்து 2 செக்கனில் அடையும் உயரம்,
1) 140m 2) 120m 3) 100m 4) 80m

10. வல்லுருக்கலவிழையத்தின் இயல்பு அல்லாதது?
1) வன்மையற்றது. 2) கலத்திடைவெளி அற்றது.
3) இறந்த கலங்களலானது. 4) இலிக்னின் படிவு கொண்டது.

11. உயர் உருகுநிலை, உயர் கொதிநிலை கொண்ட மூலகம்.
1) சோடியம். 2) ஐதரசன். 3) காபன். 4) ஒட்சிசன்.

12. A- ஏமறைற்று B- மக்னைற்று C- போக்சைற்று D- கானலைற்று
மேலுள்ள உலோகத்தாதுக்களில் இரும்பு பிரித்தெடுப்புக்கு பயன்படுவது.
1) A, Bமட்டும். 2) A, C மட்டும். 3) B மட்டும். 4) C, D மட்டும்.

13. எல்லை உராய்வு விசையில் செல்வாக்கு செலுத்தாத காரணி,
1) தொடுகை மேற்பரப்பின் தன்மை. 2) தொடுகையுறும் பரப்பு.
3) செவ்வன் மறுதாக்கம். 4) உராய்வு குணகம்.

14. கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கம் அண்ணளவாக,
1) 76mmHg 2) 760cmHg 3) 76cmHg 4) 760mmHg

15. நிலத்தாவரங்களில் எச்செயன்முறை மூலம் நீர், கனியுப்புக்கள் உயரமான பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது?
1) பிரசாரணம். 2) உயிர்ப்பான கொண்டுசெல்லல்.
3) திணிவுப்பாய்ச்சல். 4) பரவல்.

16. திரவ அமுக்கம் தங்கியிராத காரணி,
1) கனவளவு. 2) ஆழம்.
3) அடர்த்தி. 4) புவியீர்ப்பு ஆர்முடுகல்.

17. A- கல்சியம் அயன், B- இரும்பு அயன், C- விற்றமின் A, D- விற்றமின் மேலுள்ளவற்றில் குருதி உறைதலுக்கு அவசியமான காரணிகள்,
1) A,B மட்டும். 2) B,C மட்டும். 3) A,D மட்டும். 4) A,C,D மட்டும்.

18. எரியும்போது மஞ்சள், வெள்ளை நிற சுவாலைகளை தரும் உலோகங்கள் முறையே,
1) Mg, K 2) K, Na 3) Na, Mg 4) T, Mg


19. 400K வெப்பநிலை $^0F$ இல்,
1) $1230\,^0F$ 2) $300\,^0F$ 3) $196.60\,^0F$ 4) $260.6\,^{00}F$

20. உட்சுவாசப் பொறிமுறையின்போது நடைபெறாதது,
1) பிரிமென்றகட்டு வளைவு குறைதல். 2) விலாஎன்விடை தசைகள் தளர்தல்.
3) நெஞ்சறை கனவளவு அதிகரித்தல். 4) நெஞ்சறை அமுக்கம் குறைதல்.

21. மெழுகுவர்த்தி ஒளிரும்போது காபனீரொட்சைட்டு, நீராவி, வெப்பம் என்பன வெளிவிடப்படும். காபனீரொட்சைட்டு, நீராவி என்பவற்றை இனங்கான ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் முறையே,
1) $C_2(OH)_2, CuSO_4$ 2) $C_2CO_3, CuSO_4.H_2O$
3) $C_2(OH)_2, CuSO_4, H_2O$ 4) $CaC_2, CuSO_4$

22. காட்டுத்தீ ஏற்பட்டவேளை காட்டின் ஒருபகுதி வெட்டி அகற்றப்பட்டு தீ கட்டுப்படுத்தப் பட்டது. இங்கு நீக்கப்பட்ட தகனத்திற்குத் தேவையான காரணி,
1) எரிபொருள். 2) தகனத்துணையி. 3) எரிபற்றுநிலை. 4) யாவும் சரி.

23. ஒரு முனை மூடப்பட்ட குழாயினுள் இரசம் காணப்படுவதை படம் காட்டுகின்றது. திறந்த முனை மேல்நோக்கி இருக்கும் போது வளி நிரலின் உயரம் h ஆகும். இக்குழாயை கிடையாக வைத்தால்,




1) h இன் உயரம் கூடும்.
2) h இன் உயரம் மாறாது.
3) h இன் உயரம் குறையும்.
4) கூறமுடியாது.

24. தோலின் தொழில் அல்லாதது,
1) நிர்ப்பீடனம் வழங்கள் 2) கழிவகற்றல்
3) அமைனகற்றல் 4) விற்றமின் D தொகுப்பு

25. 330Hz அதிர்வெண் கொண்ட இசைக்கவை அதிரும்போது ஏற்படும் அலையின் அசைவு காலம்,
1) 330s 2) 1/330s 3) 330x330s 4) 1/330s

26. முனைவுத்தன்மையற்ற பதார்த்தம்,
1) நீர் 2) மண்ணெண்ணெய்
3) தொண்டிசு 4) சீனி


27. கரைதிறனை அதிகரிக்கும் நடவடிக்கை அல்லாதது,
1) வெப்பமேற்றல். 2) அமுக்கத்தை அதிகரித்தல்.
3) கரையம்/ கரைப்பானை மாற்றுதல். 4) கலக்குதல்.

28. அனுசேப செயற்பாட்டுடன் தொடர்புடைய ஓமோன்,
1) GH 2) தைரோட்சின் 3) அதிரினலின் 4) ஈஸ்ட்ரஜன்

29. உடல்நலமுள்ள ஒருவரின் சதையியின் இலங்ககான் சிறுதீவுகளின் $\beta$ தமது சுரப்பை சுரப்பது,
1) குருதியில் குளுக்கோசு அதிகரிக்கும்போது.
2) சிறுநீரில் குளுக்கோசு செறிவு கூடும்போது.
3) குருதியில் குளுக்கோசு மட்டம் குறையும்போது.
4) நீரிழிவு நோய் ஏற்படும்போது.

30. அமிலம், மூலம், உப்பு என்பன முறையே
1) $HCl, MgCl_2, Na_2SO_4$ 2) $HNO_3, Ca(OH)_2, NaCl$
3) $H_2SO_4, CaCl_2, Mg(OH)_2$ 4) $NH_4Cl_2, Na_2SO_4, NaCl$


31. அருகில் உள்ள சுற்றில் ஒளிரக்கூடிய LED அல்லது LED க்கள்,




1) A, B மட்டும்.
2) A,B,C எல்லாம்.
3) A மட்டும்.
4) C மட்டும்.

32. கம்பி ஒன்றின் தடைதிறன் தங்கியுள்ள காரணிகளை மட்டும் கொண்ட கூட்டம்,
1) திணிவு, நீளம், மின்னோட்டம். 2) கனவளவு, நீளம், அடர்த்தி.
3) நீளம், குறுக்குமுகபரப்பு, அடர்த்தி. 4) திணிவு, நீளம், நேரம்.

33. கம்பியினுள் காந்தத்தின் வடமுனையை செலுத்தியபோது (G) கல்வனோமானியில் திரும்பல் ஏற்பட்டது. கல்வனோமானியின் திரும்பலை அதிகரிக்கச் செய்ய,




1) கம்பிச்சுருளின் எண்ணிக்கையை குறைத்தல்.
2) வலிமையற்ற காந்தத்தை பயன்படுத்தல்.
3) காந்தத்தை விரைவாக அசைத்தல்.
4) மேற்கூறிய யாவும் பொறுத்தமன்று.

34. டெங்கு நோய் காரணி, நோய் காவி என்பன முறையே,
1) ஈடிஸ், ஆபோவைரசு. 2) ஆபோவைரசு, ஈடிஸ்.
3) கியூலெக்ஸ், பியஸ்மோடியம். 4) கியூலெக்ஸ், ஈடிஸ்.

35. ஒலி அலையின் இயல்பு அல்லாதது,
1) வளியை விட வெற்றிடத்தில் மிக விரைவாக செல்லும்.
2) பொறிமறை அலையாகும்.
3) துணிக்கைகள் அதிர்வதன் மூலம் உருவாகும்.
4) மனிதனால் கேட்க முடியாத ஒலிகளும் உள்ளன.

36. சூழலில் சிக்கல் தன்மை அதிகரிக்கும் ஒழுங்கு.
1) தனியன் → சாகியம் → குடித்தொகை → சூழற்தொகுதி → உயிர்கோளம்.
2) தனியன் → குடித்தொகை → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
3) குடித்தொகை → தனியன் → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
4) தனியன் → குடித்தொகை → சாகியம் → சூழற்தொகுதி → உயிர்கோளம்.

37. புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு. இவ்வுணவுச்சங்கிலியில் உள்ள இணைப்புக்களின் எண்ணிக்கை, முதலாம் படி நுகரி என்பன முறையே,
1) 3, வெட்டுக்கிளி 2) 3, புல்
3) 4, வெட்டுக்கிளி 4) 4, புல்

38. பார உலோகங்களால் அதிகம் பாதிக்கப்படுவது,
1) உற்பத்தியாக்கிகள் 2) முதல் நுகரிகள்
3) துணைநுகரிகள் 4) புடைநுகரிகள்

39. சூழல் மாசடைதலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்,
1) காடழிப்பு 2) கைத்தொழில்மயமாக்கல்.
3) எரிபொருள் தகனம். 4) மேற்கூறிய யாவும் சரியானது.


40. ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கத்திற்கு உதாரணம் பின்வருவனவற்றில் எது?
1) $Mg + 2HCl \rightarrow MgCl_2 + H_2$ 2) $CaCO_3 \rightarrow CaO + CO_2$
3) $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ 4) $CuSO_4 + BaCl_2 \rightarrow BaSO_4 + CuCl_2$

## விஞ்ஞானம் - II


3 மணித்தியாலங்கள்

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. A. வெள்ளொளிக்கதிர் ஒன்று அரியத்தில் பட்டு முறிவடைந்து திருசியத்தை உருவாக்கும் தோற்றப்பாடு தரப்பட்டுள்ளது.




1) X, Y என்பவற்றிற்குப் பொருத்தமான நிறங்களைக் கூறுக.
2) X, Y என்பவற்றில் அதிக விலகலைக் காட்டும் நிறம் எது?
3) திருசியம் எனப்படுவது யாது?
4) திருசியத்தைக் காண்பிக்கும் இயற்கைத் தோற்றப்பாடு ஒன்றைத் தருக.
5) பின்வரும் வரிப்படங்களில் ஒளிக்கதிரின் பாதையைப் பூரணப்படுத்துக.



B. சூரிய ஒளி மட்டும் இல்லை எனில், அங்கிகள் யாவும் உணவின்றி இறக்க நேரிடும் என மாலன் கூறுகின்றான்.
1) இக்கூற்று உணர்த்தும் உயிர்ச்செயன்முறை யாது?
2) நீர் கூறிய உயிர்ச் செயன்முறைக்கு அவசியமான காரணிகள் எவை?
3) இவ் உயிர்ச்செயன்முறையில் பங்கேற்கும் சூரிய ஒளியின் இரு நிறங்களையும் கூறுக.

C. பின்வரும் சமன்பாடு கலச்சுவாசத்தை விளக்குவதாகும்.

$$C_6H_{12}O_6 + O_2 \rightarrow CO_2 + H_2O$$


1) இச்சமன்பாட்டைப் பூரணப்படுத்துக.
2) ஒரு மூல் $C_6H_{12}O_6$ இன் திணிவைக் காண்க.
3) ஒரு மூல் குளுக்கோசு சுவாசத்திற்குப் பயன்படும்போது பெறப்படும் $CO_2$ இன் திணிவைக் காண்க.

02. வெற்றுக்கண்ணினால் அவதானிக்க முடியாத அங்கிகள் நுண்ணங்கிகள் ஆகும்.
1) நுண்ணங்கிகளின் வகைகள் மூன்றினைத் தருக.
2) பக்றீரியாக்களின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக.
3) அவரையினத் தாவரங்களின் வேர்முடிச்சுக்களில் வாழும் பக்றீரிய இனம் ஒன்றைக் குறிப்பிடுக. நீர் கூறும் பக்றீரியா இனம் மூலம் சீரமைக்கப்படும் இயற்கை வட்டத்தைக் கூறுக.
4) தனிக்கல ஒட்டுண்ணிக்கு 3 உதாரணங்கள் தருக.
5) காளான்கள் எவ்வகையான நுண்ணங்கிகள்?
6) வைரசுக்களுக்கு உயிர் இல்லை என்பதற்கான காரணங்கள் இரண்டு தருக.
7) பின்வரும் நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளின் பெயர்களைத் தருக.
1. பன்றிக்காய்ச்சல். 2. டெங்கு.

(17ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. A, B, C ஆகிய சோதனைக் குழாய்களில் சம கனவளவு கொதிநீர், ஐதான HCl, செறிந்த HCl என்பன எடுக்கப்பட்டுள்ளன. மூன்று சோதனைக் குழாய்களினுள்ளும் சம திணிவுடைய Mg துண்டுகள் இடப்பட்டன.




1) தாக்கவீதம் எனப்படுவது யாது?
2) தாக்கவீதத்தில் செல்வாக்குச செலுத்தும் எக் காரணியை நிரோதிக்க இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது?
3) நீர் கூறிய காரணி தவிர்ந்த தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் மேலும் இரு காரணிகளைத் தருக.
4) ஐதான HCl உடன் Mg காட்டும் தாக்கத்தை சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடு மூலம் காட்டுக.
5) குளிர்நீரில் தாக்கமடையக்கூடிய உலோகங்கள் இரண்டு தருக.
6) குழாய் B இல் Mg துண்டினை இட்டு சிறிது நேரத்தில் அக்குழாயினை வெப்பமேற்றினால் ஏற்படும் மாற்றங்கள் 2 தருக.

04. இலத்திரனியல் தொழில்நுட்பம் மனித செயற்பாடுகளை இலகுவாக்கினாலும், அதனால் பல சூழற் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.
1) இலத்திரனியல் சாதனங்கள் இரண்டு தருக.
2) தர்க்கப்படலைகளால் ஆக்கப்பட்ட வலைவேலைப்பாடு ஒன்று தரப்பட்டுள்ளது.





1. K, L, M ஆகிய படலைகளின் பெயர்களைத் தருக.
2. தரப்பட்டுள்ள உண்மை அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| A | B | C | D |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | |
| 1 | 1 | 0 | |
| 1 | 0 | 1 | |
| 1 | 0 | 0 | |
| 0 | 1 | 1 | |
| 0 | 1 | 0 | |
| 0 | 0 | 1 | |
| 0 | 0 | 0 | |

3. இப்படலைகளை அதிகளவில் கொண்ட இலத்திரனியல் துணைச்சாதனம் ஒன்றைத் தருக.

3) பின்வரும் குறியீடுகள் குறிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் துணைச்சாதனங்களின் பெயர்களைத் தருக.





## கட்டுரை வினாக்கள்

(உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்க)

### உயிரியல்

05. மனித உடலானது பல அங்கங்களையும் தொகுதிகளையும் கொண்டு சிக்கல் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வங்கங்கள், தொகுதிகள் என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புற்று ஒத்திசைவுடன் இயங்குகின்றன. அங்கங்கள், தொகுதிகளை ஒருங்கிணைப்பதில் நரம்புத்தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி என்பன ஈடுபடுகின்றன.
1) நரம்புத்தொகுதியின் கட்டமைப்பு அலகு எது?
2) நரம்புத்தொகுதியின் இரு பெரும் பிரதான பிரிவுகளும் எவை?
3) மனித மூளையைப் பாதுகாக்கும் மூன்று மூளைச்சருமங்களும் எவை?
4) மூளைச்சரும நோய் எவ்வாறு ஏற்படுகிறது?
5) மூளையத்தின் தொழில்கள் இரண்டு தருக.
6) தெறிவில் எனப்படுவது யாது?
7) பரிவு நரம்புத்தொகுதி மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 3 தருக.
8) இயக்கு நரம்புக்கலத்தில் மயலின் கவசம் காணப்படும். மயலின் கவசத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணி ஒன்றைக் கூறுக.
9) மாலனின் கையில் தீ சுட்டது. உடனடியாக அவன் கையை இழுத்தான். இங்கு தூண்டல், துலங்கல், வாங்கி, விளைவுகாட்டி என்பவற்றைக் கூறுக.
10) நரம்புகளின் ஊடாக நிகழும் கணத்தாக்கத்தின் வேகம் குறைவதற்கான காரணங்கள் 3 தருக.
11) மனித உடலின் pH பெறுமானம் மாறாது பேணவேண்டியதன் அவசியம் யாது?

06. a)




1) A இலிருந்து J வரையான பகுதிகளைப் பெயரிடுக.
2) குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் இதயத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தொழில் என்ன?
3) சுற்றோட்டத் தொகுதியின் மூலம் நிறைவேற்றப்படும்தொழில் என்ன?
4) சுற்றோட்டத் தொகுதியின் மூன்று பிரதான பகுதிகளும்எவை?
5) நாடி, நாளம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்று தருக.
6) மாரடைப்பு ஏற்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக. இந் நோயைத் தடுக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைத் தருக.
7) J, H என்பவற்றில் காணப்படும் குருதிகளுக்கிடையிலான் வேறுபாடுகள் 2 தருக.


b) 1) குருதி மூலம் கடத்தப்படும் பதார்த்தங்கள் எவை?
2) குருதியின் பிரதான கூறுகளைத் தருக.
3) பிறபொருள் எதிரியாகத் தொழிற்படும் குருதியின் திண்மக் கலவகையைத் தருக. அதன் இரு பிரதான கலங்களையும் தருக.
4) குருதிப்புரதங்கள் இரண்டு தருக.
5) குருதிப்புற்றுநோய் ஏற்படும் விதத்தை விளக்குக.

### இரசாயனவியல்

07. a) புவிமேற்பரப்பில் பட்டுத்தெறித்து வெளியேறவேண்டிய ஒரு வகை சூரியக் கதிர்கள் வளிமண்டலத்தில் சில வாயுக்களின் கலவையில் உருவாக்கப்பட்ட மூடுபடையினால் மீண்டும் மீண்டும் புவியின் மேற்பரப்புக்கே அனுப்பப்படுகின்றன. இதனால் புவியில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது.
1) மேற்படி தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2) புவியை வெப்பமடையச்செய்யும் சூரியக்கதிரின் பெயரைத் தருக.
3) மேலே பந்தியில் கூறப்பட்ட மூடுபடையை உருவாக்கும் வாயுக்கள் 3 தருக.
4) மேற்படி நிகழ்வால் ஏற்படும் விளைவுகள் 2 தருக.

b) வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பரை எரிப்பது சூழலுக்குத் தீங்காகும்.
1) வல்கனைசுப்படுத்தல் எனப்படுவது யாது?
2) வல்கனைசுப்படுத்திய இறப்பரை எரிப்பதால் புவியில் ஏற்படும் நிலையைக் கூறுக.
3) மேற்படி நிலையை ஏற்படுத்தும் மனித செயற்பாடுகள் 2 தருக.
4) ஓசோன் வாயுவின் சூத்திரத்தைத் தருக.
5) ஓசோன்படை பாதிப்படைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் 2 தருக.


08. $CuCl_2$ கரைசலினை மின்பகுப்பதற்காக மேற்படி ஒழுங்கமைப்பு தயார்செய்யப்பட்டது. X, Y என்பன காபன் மின்வாய்கள் ஆகும்.




1) மின்குமிழ் பயன்படுத்தப்பட்டது ஏன்?
2) அனோட், கதோட் என்பவற்றைக் குறிப்பிடுக.
3) மின்பகுபொருளில் காணப்படும் அயன்களைத் தருக.
4) அனோட், கதோட் என்பவற்றில் நிகழும் தாக்கங்களுக்கான அயன் சமன்பாடுகளைத் தருக.
5) அனோட்டில் ஏற்படும் அவதானம் என்ன? இவ் அவதானத்தைவிரைவாகப் பெற மேற்படி ஒழுங்கமைப்பில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தலாம்?
6) அனோட்டுக்கு அண்மையில் ஈரமான நீல, சிவப்பு பாசிசசாயத்தாள்களைப் பிடிக்கும்போது நிகழும் மாற்றம் என்ன?
7) மின்முலாமிடல் என்றால் என்ன?
8) மின்முலாமிடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
9) அனோட்டு, கதோட்டு என்பவற்றால் கருதப்படுவது யாது?

### பௌதிகவியல்

09. a)





200g திணிவுடைய பந்து நியூட்டன் தராசில் கட்டித் தொங்கவிடப்பட்டு வளியில் நிறுக்கப்பட்டது. பின்னர் பந்து நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் A இல் வைத்து நிறுக்கப்பட்டது. பின்னர் பந்தை நீரினுள் இட்டபோது அது நீரின் அடிக்குச் சென்றது.
1) பந்தின் நிறை யாது?
2) பந்தை நீரினுள் இடும்போது ஏற்படும் அவதானங்கள் 2 தருக.
3) பந்தை நீரினுள் வைத்து நிறுக்கும்போது தராசின் வாசிப்புக்கு யாது நிகழும்?
4) மேற்படி 3 இல் கூறிய அவதானத்திற்கு என்ன காரணம்?
5) பந்தின் கனவளவு $50cm^3$ எனில், நீர் மேலே 4 இல் கூறிய காரணத்தின் பருமன் யாது?

b) அருகில் நீரமானி ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது.



1) இங்கு மிகக்குறைந்த பெறுமானம் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியைக் கூறுக. அதற்கான காரணம் என்ன?
2) சாதாரண நீரமானி மூலம் இரசத்தின் அடர்த்தியை அளவிட முடியாது. காரணம் என்ன?
3) இறப்பர்ப்பாலின் அடர்த்தியை அளக்கும் உபகரணம் யாது?
4) நீரில் இடும்போது நீரமானியின் வாசிப்பு எவ்வளவாக இருக்கும்?
5) நீரில் சிறிதளவு சீனியை இட்டு கரைக்கும்போது மேலே 4 இல் கூறிய விடைக்கு யாது நிகழும்?

10. A, B, C, D, E, F ஆகிய குண்டுகள் வெவ்வேறு நீளம்கொண்ட நூல்கள் மூலம் XY கயிற்றின் மீது வெவ்வேறு இடங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன.




1) குண்டு A ஐ சற்று இழுத்துவிட்டு சிறிது நேரத்தில் ஏற்படும் மாற்றம் என்ன? அதற்கான காரணத்தைத் தருக.
2) குண்டு D ஐத் தன்னிச்சையாக அசையவைக்க எந்தக் குண்டை இழுத்துவிடவேண்டும்?
3) அணியில் சென்ற இராணுவ வீரர்கள் பாலத்தின் மீது சாதாரண மாக நடந்துசென்றனர். அவர்கள் பாலத்தின் மீது அணிநடையைத் தவிர்த்ததன் காரணத்தை விஞ்ஞான ரீதியாக விளக்குக.
4) ஊசல்குண்டு C ஆனது நிமிடத்தில் 120 அலைவுகளை நிகழ்த்தியது. இவ்வூசலின் மீடிறன் என்ன? அலைவுகாலம் என்ன?
5) விமானம் ஒன்று வெடித்துச் சிதறுவதை அவதானித்த தரையில் ஒருவருக்கு விமானத்தின் வெடியோசை 2 செக்கன்களில் கேட்டது. விமானம் தரையில் இருந்து எவ்வளவு உயரத்தில் வெடித்திருக்கும்?
6) 512Hz மீடிறன் கொண்ட இசைக்கவை ஒலிக்கும்போது ஏற்படும் அலையின் அலைநீளம் யாது? இங்கு பிறப்பிக்கப்பட்ட அலையின் இயல்புகள் இரண்டு தருக.


(முற்றும்)

## கணிதம் I (பகுதி B) விடைகள் (22.10.2010)

01 1) 1-800 பங்குகள், 2-ரூபா 8,000 3-1,120, 4-9.3%
2) 1-ரூபா 1,230, 2- ரூபா 13,230

02. 1) சரிவகம். 2) 7m 3) 96m
4) $341 m^2$ 5) ரூ. 17,050

03. 1) 1.
2-10
3-35
4-6
2) 1-5/8, 2-3/8




04. 1) 1,500 ரூபா. 2) 270 ரூபா.
3) 1-ரூபா 6,000, 2-ரூபா 480

05. 1) 1-சரியாக வரையப்பட்ட வலையுரு வரையம்.
2-சரியாக வரையப்பட்ட மீடிறன் பல்கோணி
2) 1-60, 2-19, 3-75, 4-56 3) இடை = 39 (முற்றும்)

கணித பாட வினாத்தாள் நாளைய தினம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ.10

சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரம் வருமாறு:-

சொல்வளப் போட்டி

முன்பள்ளி

உ.கேனுஜா (வெள்ளாம் போக்கட்டி முன்பள்ளி), பி.சயந்திகா (நளினி முன்பள்ளி, கொடிகாமம்), பி.கீர்த்திகன் (நளினி முன்பள்ளி, கொடிகாமம்),

ச.தினுஜன் (கொடிகாமம் மத்தி முன்பள்ளி), ஜெ.அபிஷன் (கொடிகாமம் மத்தி முன்பள்ளி), து.சகீனா (வெள்ளாம் போக்கட்டி முன்பள்ளி), ர.டிலக்சிகா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), உ.தஜிந்தினி நளினி (முன்பள்ளி கொடிகாமம்).

தரம் -1

நா.சாயிராம் (கச்சாய் அ.த.க. பாடசாலை),இ.திலக்ஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), பா.அபிநயா (கச்சாய் அ.த.க.பாடசாலை).

தரம்- 2

ச.சுலக்ஷனா (கொடிகாமம் அ.த. க. பாடாசலை), வி.ஜேம்ஸ் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), ஜெ.பிரதிஷா (கச்சாய் அ.த.க.பாடசாலை), ஜெ.கஸ்மிதம் (அல்லாரை அ.த.க.பாட சாலை), ச.நிஷானி (கொடிகாமம் அ.த.க. பாட சாலை), உ.பிரதிஷா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்).

வாசிப்புப்போட்டி

தரம்- 3

ப.சோபிதா (அல்லாரை அ.த. க.பாடசாலை), அ.சானுஜா (கச்சாய் அ.த.க. பாடாசலை, அ.சாருஜா (கச்சாய் அ.த.க. பாடசாலை).

சித்திரப்போட்டி

தரம்- 7

ம.மகிந்தன் (கச்சாய் அ.த.க. பாடசாலை),கு.குவிந்தன் (கச்சாய் அ.த.க. பாடசாலை), இ.அகிலன் (கச்சாய் அ.த.க. பாடசாலை).

தரம்- 8

ம. தனரூபன் (கச்சாய் அ.த. க. பாடசாலை), ,க.புவிதரன் (கச்சாய் அ.த.க. பாட சாலை), கை.நிறஞ்சன் (கச்சாய் அ.த.க. பாடசாலை).

தரம்- 9

ஜெ. றஜிக்குமார் (கச்சாய் அ.த. க. பாடசாலை),க. கிருத்திகா (கச்சாய் அ.த.க. பாடசாலை), கு.சயந்தன் (கச்சாய் அ.த.க. பாடசாலை).

கட்டுரைப் போட்டி

தரம் -10

க.கலைவாணி ( கச்சாய், அ.த. க. பாடசாலை),இ.சஞ்சீவ் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்).

தரம்- 11

செ. ஆண்டனியா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

தரம் -13

க.கஜந்தி(கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்).

(204)

## ஆங்கிலப் போட்டியில் கௌசிகா முதலிடம்



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலதினப் போட்டிகள் அண்மையில் மன்னாரில் நடைபெற்றன.

இதில் யாழ்.மாணவியான கௌசிகா முதலிடம் பெற்றுள்ளார்.

மாகாணமட்ட ஆங்கில தினப்போட்டிகளில் தனிநபர் நடிப்பு நிகழ்ச்சியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவி செல்வி கௌசிகா ஸ்ரீ தாமோதரராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (204)

## அதிபர் பதவிக்கான வெற்றிடம்

யாழ்ப்பாணம், நவ.10

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

வகுப்பு Iசி ஐச் சேர்ந்த இந்த அதிபர் பதவிக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரியும் சேவை நீடிப்பில் இல்லாத இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் ஆசிரியர் சேவை வகுப்புI, மற்றும் 2-I ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆசிரியர் தரத்தைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பங்கள் ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி இந்த மாதம் 19ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி, நவ.10

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி பெண் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

கடந்த 7ஆம் திகதி மீசாலை கமநலசேவைகள்நிலையத்திற்கு முன்பாக இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை ராஜேந்திரன் (வயது-60), சதீஸ் (வயது-25) ஆகியோரும்,

மீசாலை புத்தூர் சந்தியில் இடம் பெற்ற மற்றொரு விபத்தில் ஆர். ரதீஸ் (வயது-19) என்பவரும் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி டச்சு வீதியில் சமாந்தரமாகச் சென்ற சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் கைப்பிடியில் முட்டியதில் தூக்கி வீசப்பட்ட பெண்ணொருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த சிவயோகச்சந்திரன் அன்னலட்சுமி (வயது- 45) என்பவரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு செ.இராசேந்திரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(த-207)


### தவறிவிட்டது

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை என்னும் முகவரியைச் சேர்ந்த ந.சிவகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை(801704131V), சாரதி அனுமதிப் பத்திரம், வரி, காப்புறுதிப் பத்திரங்கள், பல்கலைக்கழக Job I.C ஆகியன அடங்கிய பேர்ஸ் பரமேஸ் வராசந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பி.வ.முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்).

C/o பாலமுரளி, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே:-0773145678

### விற்பனைப் பிரதிநிதி தேவை

(SALES REPRESENTATIVE)

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் வேலை செய்வதற்கு நன்கு அனுபவம் வாய்ந்த Sales Rep. உடனடியாகத் தேவை. EXPORT QUALITY FOOD ITEM விற்பனை செய்வதற்கு

உடனடியாகத் தொடர்புக்கு:-

தொ.பே:- 0713 267826, 0772101992

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:-

தொ.பே-0750424054

### கணினி விற்பனைக்கு

P-IV, 1.7GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 15,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive என்பனவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System

162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

(டேவிற் பீரிஸ் முன்பாக) 021 222 1417.

(இ/572750)

### வீடு வாடகைக்குத் தேவை

6 மாத காலத்துக்கு, சகல வசதிகளுடன் சிறிய வீடு தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள்.

தொடர்பு:- [illegible]

தொ.பே:- 077 6203909, 021 5674040, 077 9220756

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971, கேட்டை நட்சத்திரம், கிரகபாவம் குறைந்த இத்தாலியில் தொழில் புரியும் மணமகனிற்கு பெற்றோர் படித்த, அழகிய, குடும்பப்பாங்கான மணமகளைத் தேடுகின்றனர். திருமணம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

விளம்பர இல.4089

C/o உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### STUDY IN U.K.



IELTS அவசியமில்லை

யாழ். நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்

January Admission இற்கான இறுதி வாய்ப்பு

★ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
★ சேவைக்கட்டணம் முற்றிலும் இலவசம்
★ மிகக் குறைந்த செலவில் Sponsor வசதிகள்
★ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
★ குடும்பமாகக் கல்வி பயிலக் கூடிய வாய்ப்புகள்
★ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்.
★ Visaவுக்கான 100% உத்தரவாதம்.
★ மிகக் குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
★ Interview இன்றி 3 நாள்களுக்குள் அனுமதி.

தொடர்பு: 077 0871616

அலுவலக முகவரி: 245, பலாலி வீதி, கந்தர்மடம். (Baby Photo அருகில்)

அலுவலக நேரங்கள்: திங்கள் - சனி வரை காலை 9 - பிற்பகல் 3.30

### 02 மாடிக் கட்டடத்தின் மேல் தளம் அமைப்பதற்கு கேள்வி விண்ணப்பம் கோரல்

சமாசத்தின் புதிய 2 மாடிக் கட்டடத்தின் மேல் தளம் அமைப்பதற்கு மேசன், மின்சார இணைப்பு, பெயின்றிங், பைப் லைனிங் போன்றவற்றில் கூலி வேலைகளுக்கும், தச்சு வேலைகளுக்கும் உள்ளூரில் அனுபவம் உடையோரிடம் இருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சமாச வேலை நேரத்தில் மேற்படி வேலை தொடர்பான கேள்விப் பத்திரத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 19.11.2010ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பிவைக்கவும்.

இவ்விண்ணப்பங்கள் அன்றைய தினமே திறக்கப்பட்டு ஆராயப்படும். அத்தருணம் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

விண்ணப்பதாரர் தமது கூறுவிலையை மூடிய கடிதவுறையில் அதன் இடதுபக்க மேல் மூலையில் ''கேள்வி விண்ணப்பம் கோரல்'' எனக் குறிப்பிட்டு முகாமையாளர், வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.52 சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:-
பொதுமுகாமையாளர்,
வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து),
இல.52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-0212225072

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 7ஆவது பிறந்த தினமும்

செல்வி சிவராசா திசாளினி





மலர்வு
05.11.2003

உதிர்வு
21.10.2009

திதி: 10.11.2010

ஈர விழி காயவில்லை
ஓர் ஆண்டு ஆனதம்மா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் அருமைச் செல்வம் எங்களுடன்
தான் இருப்பாய்
வருவேன் அம்மா என்று கடைசி
வார்த்தை சொன்னாயே
உன்வரவை எதிர்பார்த்திருக்கின்றோம்.

என்றும் ஈர விழிகளுடன் காத்திருக்கும்:
அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மாமார்,
மாமாமார், மாமி, பெரியம்மாமார், பெரியப்பாமார்.

சிவாஸ் பஸ் உரிமையாளர்,
சக்கலாவத்தை,கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(104489)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு பின் மியான்மரில் கலவரம் 10 ஆயிரம் பேர் தாய்லாந்துக்கு ஓட்டம்

யாங்கூன்,நவ.10

மியான்மரில் இராணுவச் சிப்பாய்களுக்கும், போராட்டக் குழுவினருக்குமிடையே துப்பாக்கிச் சண்டை திங்கட்கிழமை நடந்தது. இதில் பொதுமக்கள் 3 பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர்.

மியான்மரின் கிழக்கு எல்லைப் பகுதியில் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச் சண்டையால் அப்பகுதியில் வசித்த மக்கள் இருப்பிடத்தைக் காலி செய்து தாய்லாந்துக்குள் புகுந்தனர்.

சுமார் 10 ஆயிரம் பேர் தாய்லாந்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்தனர். இதில் பெரும்பாலோர் பெண்கள், சிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.

மியான்மரில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் நடைபெற்ற அடுத்த நாளே இராணுவச் சிப்பாய்களுக்கும் அரசுக்கு எதிரான போராட்டக் குழுவினருக்குமிடையே மோதல் வெடித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சண்டையில் போராட்டக் குழுவினர் ரொக்கெட்டுகளையும், பயங்கரமான ஆயுதங்களையும் பயன்படுத்தினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்தச் சண்டையில் இராணுவச் சிப்பாய்கள், போராட்டக் குழுவினர் ஆகியோர் தரப்பில் எவரும் உயிரிழந்தனரா என்பது குறித்து எவ்விதத் தகவலும் இல்லை.

இதனிடையே, நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலில் தாங்கள் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றி வெற்றிவாகை சூடுவது உறுதி என மியான்மரின் இராணுவ ஆதரவு கட்சிகளான என்யுபி, யூஎஸ்டிபி ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஆனால், மியான்மரில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட முறைக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறவில்லை என்று அவை குற்றஞ்சுமத்தியுள்ளன.

மியான்மரில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட முறைக்கு மேற்கத்திய நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. மியான்மரில் வெளிப்படையான முறையில் தேர்தல் நடைபெறவில்லை என்று அமெரிக்கா குற்றஞ் சுமத்தியுள்ளது.

மியான்மரில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாதவரை, மனித உரிமையை மீறல்கள் தொடரும்வரை கடுமையான பொருளாதாரத் தடை வாபஸ் பெறமாட்டாது என்று அமெரிக்கா திட்டவட்ட மாகக் கூறியுள்ளது.

## தேர்தலுக்கு மரியாதை.....



20 ஆண்டுகளுக்குப் பின்னர் மியான்மரில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. நைப்பியாடெவ் மாகாணத்திலுள்ள வாக்குச்சாவடியில் இராணுவ சர்வாதிகாரி தகஷின்சவே தனது வாக்கைப் பதிவு செய்கிறார்.

# மியான்மரில் நடந்த தேர்தலில் 60 சதவீதமானோர் வாக்களிப்பு

யாங்கூன்,நவ.10

மியான்மர் தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மியான்மரில் கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை பொதுத்தேர்தல் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான அரசியல் எதிர்ப்பாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக தேசிய லீக் கட்சித் தலைவியான ஆங் சாங் சூகிக்கு இத்தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை. எனவே, இவரது கட்சி இத்தேர்தலைப் புறக்கணித்துவிட்டது.

மற்ற கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் போட்டியிட்டனர். அனைத்துத் தொகுதிகளிலும் ஆளும் ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டு கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

எதிர்க்கட்சியினருக்கு பிரசாரம் செய்வதற்கும், மனு தாக்கல் செய்வதற்கும் போதிய கால அவகாசம் அளிக்கப்படவில்லை. வெளிநாட்டுப் பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் அனுமதிக்கப்படவில்லை.

மியான்மரில் மொத்தம் 2 கோடியே 90 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். சனிக்கிழமை நடந்த தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என மியான்மரின் அரசு அதிகாரி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவுக்கு உளவு பார்த்த 3 பேரை சுட்டுக்கொன்றனர் பாக்.தீவிரவாதிகள்

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள மலைப் பகுதி தலிபான், அல்-கொய்தா தீவிரவாதிகளின் பிடியில் உள்ளது. எனவே, அங்கு அமெரிக்க இராணுவம் அவர்களை வேட்டையாடி வருகிறது.

அங்குள்ள பொதுமக்களை அமெரிக்கா உளவு பார்க்கும் பணியில் ஈடுபடுத்தி வருகிறது. அவர்கள் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்களைத் தெரிவித்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இது தீவிரவாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க இராணுவத்துக்கு உளவுவேலை பார்ப்பவர்களுக்கு அச்சத்தையும், பயத்தையும் ஏற்படுத்தும் வகையில் 3 பேரை பொதுமக்கள் மத்தியில் வைத்து சுட்டுக் கொன்றனர்.

மிரான்ஷா நகரில் வீதியோரத்திலுள்ள ஒரு காஸ் நிலையம் அருகே 3 பேரையும் வரிசையாக நிற்க வைத்தனர். அவர்களின் கண்களைக் கறுப்புத்துணியால் கட்டியிருந்தனர்.

மேலும் 2 கைகளையும் முதுகின் பின்புறத்தில் வைத்து கட்டி வைத்து ஒருவர் பின் ஒருவராகத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு செந்தில்செல்வன்

### (கொழும்புத்துறை)



சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தி.செந்தில்செல்வன் நேற்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற க.திருநாவுக்கரசு(முன்னாள் Operational Manager, இலங்கை வங்கி) மற்றும் தனேஸ்வரி தம்பதியரின் அன்பு சிரேஷ்ட புதல்வனும் சுதாகினி (ஜேர்மனி), செந்தில்குமரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரட்ணம், புவனேஸ்வரி, தயாபதி ஆகியோரின் அன்பு மருமகனும் திருஞானசம்பந்தர்(அவுஸ்திரேலியா), பூரணம் (அற்றி) ஆகியோரின் பெறாமகனும் சனா (ஜேர்மனி), சுகந்தினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிறன்ரன் (ஜேர்மனி), சோபிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/7, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7186

தகவல்:
திருமதி க.திருநாவுக்கரசு (தாய்),
குமரன், சுதா (சகோதரர்கள்).

(105319)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்(கொக்கோ)

### (இளைப்பாறிய புகையிரத பிரதம பாதுகாவலர்)

வடலிப்புலம், மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், மயிலணி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் 08.11.2010 திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், செருகப் புலம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் (பட்டாளம் சுப்பர்)- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பஞ்சரட்ணேஸ்வரியின் அன்புக் கணவரும் பவானி (லண்டன்), சாந்தகுமார் (லண்டன்), சிவகுமாரன், வித்தியகுமார் (அரச மரக் கூட்டுத்தாபனம்), பிறேமா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவச்செல்வம் (லண்டன்), கௌரி (லண்டன்), துசியந்தி (ஆசிரியை யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), சந்திரிகா, தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோஜினி, சிவலோஜன், லக்சனா, நர்த்தனா, சௌமியா, கேசினி, ருஷாங்கினி, லாவண்யா, லக்சாயினி, விக்னேஷ் ஆகியோரின் அன்புப்பேரனும், கதிர்காமசேகரம், காலஞ்சென்ற கணேசரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சகுந்தலம்',
மயிலணி, சுன்னாகம்.
தொலைபேசி இல: 0212240605, 0213218007 (105814)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்தில் நவஜீவன், ஐக்கியம்

வலி.வடக்கு,நவ.10

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட கழக அணிகளுக்கு இடையேயான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு நவஜீவன் விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தெரிவாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியொன்றில் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெல்லியடி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதின.

மூன்று சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் நவஜீவன் விளையாட்டுக்கழகம் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை 25:12, 25:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் முதலாம், மூன்றாம் சுற்றுக்களை தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 25 : 17, 25 : 15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. இரண்டாம் சுற்றை கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 32:30 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது. (த-86)

# மத்தியஸ்தர் சங்கம் வெற்றி


மத்தியஸ்தர் சங்க அணியினர்

யாழ்ப்பாணம், நவ.10

சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணி சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியை வெற்றி கொண்டது.

நேற்று முன்தினம் திங்கள் கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியை எதிர்த்து யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணி மோதியது.

இதில் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணி சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணிக்கும் இடையிலான இந்தச் சிநேகபூர்வ ஆட்டம் நான்காவது ஆண்டாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# வென்றது விக்னேஸ்வரா

வலி.வடக்கு,நவ.10

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தி வரும் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் அரையிறுதி ஆட்டத்தில் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரி இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி போட்டியில் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுகு உட்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெல்லியடி விக்கினேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் 2:1 என்ற செற் கணக்கில் நெல்லியடி விக்கினேஸ்வராக் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது

முதலாம் மூன்றாம் சுற்றுக்களை நெல்லியடி விக்கினேஸ்வராக் கல்லூரி 25:11, 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற இரண்டாம் சுற்றை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-86)




# வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய இந்த ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களின் விவரங்கள் வருமாறு,

**கூடைப்பந்தாட்டம் (ஆண்)**

முதலாமிடம் - சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம் - ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

**கூடைப்பந்தாட்டம் (பெண்)**

முதலாமிடம் - திருக்குடும்ப கன்னியர்மட 'பியன்வெனு' அணி, இரண்டாமிடம் - பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**வலைப்பந்தாட்டம் (பெண்)**

முதலாமிடம்-யாழ்.பல்கலைக்கழக அணி, இரண்டாமிடம்- சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழகம்.


**கரப்பந்தாட்டம் (ஆண்)**

முதலாமிடம் - நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்தாட்டம் (பெண்)**

முதலாமிடம் -காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் - காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 'பி' அணி. (த-23)

# சளைத்தவர்கள் அல்லர்...



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட காட்டாப்போட்டியில் வட மாகாணத்தில் தொட்டிலடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ்.கிருபாகரன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

நாளை வியாழக்கிழமை வென்னப்புவ வில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் இவர் பங்கேற்றவுள்ளார்.

முதலிடத்தைப் பெற்ற எஸ்.கிருபாகரன் தனது ஆசிரியரான ஆர்.ஜே. அலெக்சாண்டருடன் காணப்படுகிறார். (த-9)

# ஸ்ரீநிவாஸுக்கு வெள்ளிப் பதக்கம்



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் தியகமவில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவன் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

ஆண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் அ.ஸ்ரீநிவாஸ் நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். (எ-23)

# இன்றைய கிரிக்கெட் போட்டிகள்

வலி.வடக்கு ,நவ.10

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கு இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

✸ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஏ அணிக்கும் இடையேயான போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில்.

✸ சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயான போட்டி ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில்.

✸ யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் இடையேயான ஆட்டம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்.

(த-23-86)

# அரையிறுதி ஆட்டத்தில் வென்றது யாழ்.இந்து

வலி. வடக்கு, நவ.10

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப்பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லுரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. சஜீகன் 14 நான்குகளுடன் 107, சாரங்கன் 03 ஆறுகள் 05 நான்குகளுடன் 63, மதுசன் 09 நான்குகளுடன் 58, கல்கோபன் 07 நான்குகளுடன் 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த சிந்துஜன் பத்து ஓவர்கள் பந்து வீசி 53 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் ஆனந்தசயனன் 07 ஓவர்கள் பந்து வீசி 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரதீப் 10 ஓவர்கள் பந்து வீசி 63 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

330 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 37.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

வசீகரன் 4 நான்குகளுடன் 20, கீர்த்திகன் 13 ஓட்டங்களை பெற்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச்சேர்ந்த ருக்ஸ்மன் 7 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மதுசன் 7 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சாரங்கன் 7 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கல்கோபன் 2 ஓவர்கள் பந்து வீசி ஓட்டங்கள் எதனையும் கொடுக்காது ஒரு விக்கெட்டையும் சிந்துஜன் 8 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கௌசிகன் 7 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)



யாழ்.கோட்ட மட்டப் பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் சென்.சார்ல்ஸ் மகாவித்தியாலயமும், சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையும் மோதிக் கொள்ளும் காட்சிகள்.

(படங்கள்:-தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். விக்கெட் காப்பாளர் மாயம்; டுபாய் போட்டியில் பெரும் பரபரப்பு

## மர்மநபரின் மிரட்டலுக்குப் பயந்து லண்டனுக்கு ஓடினார்



துபாய், நவ. 10

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டி ஆரம்பமாக சில மணி நேரங்கள் இருந்த நிலையில், பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளரான ஹைதர் திடீரென மாயமானதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர் லண்டனுக்குச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

பாகிஸ்தான் வீரர்கள் அனை வரும் போட்டி ஆரம்பமாக முன்னர் மைதானத்திற்குள் சென்றபோது, அணியின் இளம் விக்கெட் காப்பாளரான ஜுல்கர்னைன் ஹைதரைக் காணவில்லை.

பின்னர் அவரை எங்கு தேடியும் காணவில்லை. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கிடையே, அவருக்குத் தொலைபேசி மூலமாக மிரட்டல்கள் வந்திருந்தமையை பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பியது. அத்துடன் ஹைதர் தமது 'பேஸ்புக்' இணையதளத்தில்,

''கடைசி ஆட்டத்தில் தோற்க வேண்டும் என்று மோசமான செய்தி ஒன்று யாரோ ஒரு நபரிடமிருந்து வந்தது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை விட்டுவிட்டு நான் செல்கிறேன்'' - என்று குறிப்பிட்டிருந்தமையும் தெரியவந்தது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. ஹைதர் 19 ஓட்டங்களுடன் கடைசி வரை களத்தில் நின்று வெற்றிக்கு வழிவகுத்திருந்தார்.

இந்த ஆட்டத்திற்குப் பின்னர் தமது சகோதரருடன் அவர் பேசியுள்ளார். அப்போது அவர்,

தமக்கு மர்ம நபரிடமிருந்து சில மிரட்டல்கள் வந்திருக்கிறது எனக் கூறியிருக்கிறார். ஆனால், மேலதிக விவரங்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

ஆட்டத்தில் தோற்காமல் வெற்றிக்கு அழைத்துச் சென்றமையால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் அல்லது 5ஆவது ஆட்டத்தில் தோற்றால் வேறு வகையில் பிரச்சினைகள் உருவாகலாம் என்று கருதிய அவர், எவரிடமும் சொல்லாமல் ஓடியிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், அவர் பாகிஸ்தானைச் சேர்ந்த 'ஜியோ' தொலைக்காட்சி நிருபர் ஒருவருக்கு அனுப்பிய தகவலில், தமது குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டிருக்கிறார்.

அவர் எங்கு சென்றார், என்ன ஆனார் என்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணையைத் தொடங்கியது. இந்த நிலையில் சில மணி நேர பரபரப்புக்குப் பிறகு அவர் லண்டனுக்குச் சென்றுள்ளமை தெரிய வந்தது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் உறுதிப் படுத்தியது.

24 வய தான ஹைதர் இதுவரை ஒரு டெஸ்ட், 4 ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று 'இருபது-20' போட்டிகளில் விளையாடியுள்ளார். அவருக்குக் கொலை மிரட்டல் விடுத்தது யார் என்பது மர்மமாக உள்ளது.

ஒருவேளை அது சூதாட்டத் தரகர்களின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ஏற்கனவே சூதாட்ட விவகாரத்தில் அல்லல்பட்டு வரும் பாகிஸ்தான் அணி, இப்போது இப்படி யொரு சர்ச்சையில் சிக்கியிருக்கிறது. முழு விசாரணைக்குப் பிறகே இந்த விடயத்தில் மேலதிகமாக எந்தக் கருத்தும் சொல்ல முடியும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

### ஐ.சி.சி. கவலை

பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் சுல்கர்னைன் ஹைதர் விவகாரம் குறித்து ஐ.சி.சி. கவலையடைந் துள்ளது.

சூதாட்டங்களுக்குப் பின்னணியில் உள்ள குற்றவாளிகள் கும்பலின் மிரட்டலுக்கு, ஹைதர் ஆளாகியிருக்கலாம் என்று ஐ.சி.சி. கருதுகிறது.

''ஹைதருக்கு நிகழ்ந்தது கவலையளிக்கும் வகையில் உள்ளது. அவர் கடுமையாகப் பயந்து போயுள்ளார். அவர் மீது எந்த விதமான சந்தேகத்திற்கும் இடமில்லை. அவர் நன்றாக விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

ஆனால், இளம் வீரர்களை சூதாட்டக் கும்பல் அச்சுறுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளமை, மிகவும் கவலையளிக்கும் விடயம்'' என்று ஐ.சி.சி. கூறியுள்ளது.

## ஓய்வை அறிவித்தார் ஹைதர்

டுபாயில் இருந்து திடீரென காணாமற்போன பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் விக்கெட் காப்பாளர் ஹைதர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து தான் ஓய்வு பெறுவதாக அறி வித்துள்ளார்.

லண்டனில் இருந்து நேற்றுக் கருத்துத் தெரிவித்த அவர், ஐந்தாவது ஒருநாள் போட்டியில் ''ஒத்துழைக்குமாறும் இல்லையேல் பல பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டியிருக்கும் எனவும் எனக்குக் கூறப்பட்டது''- என்று முன்னதாக லண்டனில் இருந்து தெரிவித்தார்.

''நானும் எனது குடும்பமும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களில் இருந்து தப்புவதற்கு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதே சிறந்த வழி என நான்முடிவு செய்துள்ளேன்'' -என்றார் ஹைதர்.

ஒரு சட்டத்தரணியை வைத்து வாதாடுவதற்கு போதிய பணம் தன்னிடம் இல்லையெனத் தெரிவித்துள்ள அவர், லாகூரில் இருக்கும் தனது குடும்பத்தினரின் பாதுகாப்பே முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

''எது சரியானது என நான் நினைத்தேனோ அதனையே செய்துள்ளேன். அது தொடர்பான முழு விவரத்துக்குள் இப்போது நான் போக விரும்பவில்லை. ஆனால் இந்த கிரிக்கெட் தொடர் முழுவதும் நான் முறைகேடுகளில் ஈடுபடவில்லையென்பதும் நாட்டுக்கெதிராகச் செயற்படவில்லையென்பதும் உண்மையானது''- என்று ஹைதர் தெரிவித்தார்.

# துடுப்பாட்டத்துக்காக ஆட்டநாயகன் விருது கிடைக்கும் என்று கனவு கூட கண்டதில்லை

## முதலாவது சதம் அடித்த ஹர்பஜன்சிங் மகிழ்ச்சி

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், ஆமதாபாத் டெஸ்டின் 2 ஆவது இன்னிங்சில் சதம் அடித்து, தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் முறையாக மூன்று இலக்க ஸ்கோரை முகர்ந்தார். இதற்கு முன்பு உள்ளூர் முதல்தர கிரிக்கெட்டில் கூட ஹர்பஜன் சதம் கண்டதில்லை.

★ஹர்பஜன்சிங் தனது 88ஆவது டெஸ்டில் முதலாவது சதத்தை நிறைவு செய்துள்ளார். முதலாவது டெஸ்ட் சதத்தை எடுக்க அதிக போட்டிகளை எடுத்துக் கொண்ட 3ஆவது வீரர் ஹர்பஜன் ஆவார். இதற்கு முன்பு இந்தியாவின் கும்ளே மற்றும் இலங்கையின் சமிந்தா வாஸ் முறையே தங்களது முதலாவது டெஸ்ட் சதத்தை 118 மற்றும் 97ஆவது போட்டிகளில் அடித்துள்ளனர்.

★8ஆவது பேட்டிங் வரிசையில் இறங்கி முதலாவது இன்னிங்சில் 69 ரன்கள் விளா சிய ஹர்பஜன்சிங், 2ஆவது இன்னிங்சில் 115 ரன்கள் குவித் தார். இதன் மூலம் 8ஆவது ஆளாக களம் இறங்கி ஒரே டெஸ்டில் சதமும், அரைசதமும் அடித்த 2 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார். இதற்கு முன்பு தென்னாபிரிக்காவின் எரிக் டால்டன் 1935ஆவது ஆண்டு ஓவலில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 8ஆவது ஆளாக இறங்கி 117, 57ரன்கள் எடுத்திருந்தார்.

★துடுப்பாட்டத்தில் மிரட்டிய ஹர் பஜன்சிங் ஆட்டநாயன் விருது பெற்றார். பின்னர் அவர் கூறு கையில், ''துடுப்பாட்டத்தில் நான் ஆட்டநாயகன் விருது பெறு வேன் என்று கனவு கூடக் கண்டதில்லை.'' ஒரு நாள் போட்டியில் கூட துடுப்பாட்டத்திற்காக ஆட்ட நாயகன் விருது கிடைக்கலாம். ஆனால் டெஸ்டில் இதற்காக கிடைக்கும் என்றும் ஒரு போதும் நினைத்ததில்லை. சதம் அடித்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக லக்ஷ்மனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இல்லா விட்டால் நான் இந்த சதத்தை அடித்திருக்க முடியாது. அவர்



ஆட்டம் முழுவதும் என்னை உற்சாகப்படுத்தி, ஆலோசனைகளை வழங்கினார். ஒவ்வொரு ஓவர் முடிந்ததும் என்னை தட்டிக்கொடுத்தார். இதேபோல் டெண்டுல்கர், ஷேவாக்குக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர்களும் நான் சதம் அடிக்க வேண்டும் என்று விரும்பினர். நான் களைப்படைந்து விட்டதால், சதம் அடித்ததை பெரிய அளவில் கொண்டாடவில்லை. எனது கைகளில் இன்னும் லேசான வலி இருக்கிறது. ஏனெனில் இதற்கு முன்பு நான் இவ்வளவு நீண்ட நேரம் நின்று துடுப்பெடுத்தாடிய தில்லை. சதம் அடித்ததை விட அணியை காப்பாற்றியது தான் திருப்தி அளிக்கிறது என்றார்.

# திறமைக்கு கிடைத்த பரிசு

## இந்திய அணியின் பயிற்சியாளர்

புதுடில்லி, நவ. 10

கடந்த 2 ஆண்டுகளாக டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி, திறமையாக செயல் பட்டு வருகிறது. இதனால் 'நம்பர்-1' இடத்தை கைப்பற்றி உள்ளது. அணியின் திறமையை மேலும் நிரூபிக்க தேவையில்லை, என இந்திய அணியின் பயிற்சியாளர் கிறிஸ்டன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:- இந்திய அணி கடந்த 2 ஆண்டுகளில், 'டாப்-5' அணிகளுக்கு எதிராக வெற்றிகளைக் குவித்து உள்ளது. 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 12 வெற்றி, 2 தோல்விகளைப் பெற்றுள்ளது. மற்றவை சமநிலையில் முடிந்து உள்ளன. இதனால் தான் முதலிடத்தை எட்ட முடிந்தது. திறமை இல்லா விட்டால், முதலிடத்துக்கு முன்னேறி இருக்க முடியாது.

தென் ஆபிரிக்க மண்ணில், அந்த அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதுதான் இந்திய அணியின் அடுத்த இலக்கு. இதிலும் வெற்றி பெற்றுவிட்டால், டெஸ்ட் வரலாற்றில் மிகச் சிறந்த அணியாக இந்தியா உருவெடுக்கும். ஆனால் தென் ஆபிரிக்க மண்ணில் வெற்றி பெறுவது என்பது மிகவும் கடினமான காரியம். அங்குள்ள மைதானங்கள் வேகப்பந்து வீச்சுக்கு அதிகம் ஒத்துழைப்பு பவை.

இந்திய அணியில் சச்சின், டிராவிட், லக்ஷ்மன் உள்ளிட்ட அனுபவமிக்க வீரர்கள் உள்ளனர். இந்த மூவர் கூட் டணி, தென் ஆபிரிக்க மண் ணில் அசத்தும் என எதிர்பார்க்கிறேன். அணியில் புஜாரா, முரளி விஜய் உள்ளிட்ட திறமையான




வீரர்கள் அணியில் இடம் பெற்றிருந்தாலும், அவர்கள் போதிய அனுபவம் பெற இன்னும் 2 ஆண்டுகள் தேவைப்படும். பந்துவீச்சில் ஸ்ரீசாந்த், இஷாந்த், ஷஹீர் ஆகியோர் நல்ல ஆட்டத் திறனுடன் உள்ளனர். இதனால் அடுத்த மாதம் நடக்க உள்ள தென் ஆபிரிக்கத் தொடரில், சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்த முயற்சிப்போம் - இவ்வாறு கிறிஸ்டன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
11.04.1932

மறைவு:
10.11.2009

திருமதி சிவப்பன்
தில்லைச்சி

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயர் அன்னையே
அயல்நாடு சென்ற எங்களை
அங்கு வந்து அரவணைத்து
அன்பு காட்டிய அன்னையே
இன்னும் ஆறவில்லை எம் துயர்
துடிக்கின்றோம் அன்னையே
தினமும் துதிக்கின்றோம் உங்களை
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (105739)

பிள்ளைகள்:
சி.நாகேந்திரம் (கனடா).
சி.கோபாலகிருஷ்ணன்.
(பிரான்ஸ்),
சி.ரூபராஜன் (நோர்வே),
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நாவலடி, உடுப்பிட்டி.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



27.09.2010 அன்று
அகால மரணமடைந்த

அமரர் செல்லத்துரை
ஜெகன்
(பாரவூர்தி சாரதி)

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் அவரின் இல்லத்தில் இன்று (10.11.2010) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து அவரது ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (105809)

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
T.P: 0776054100 0770869595

மனைவி- தர்சினி, பிள்ளைகள்-
ஜெ.ஜெனுஜன், ஜெ.வஜிகா.

## பொதுஅறிவுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம்

சங்கானை, நவ.10

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இந்துசமயப் பொது அறிவுப் போட்டியில் சங்கானை மாவடி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தரம் 8 ஐச் சேர்ந்த யோகேஸ்வரன் பிரசாந்தன் என்னும் மாணவனே மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு-6, இராமகிருஷ்ண வீதி, இல.40 இல் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறும். (த-201)


### பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பலவகைப்பட்ட இலகுவான DSI பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

### தேவை

சுத்திகரிப்புத் தொழிலாளி (ஆண், பெண், இருபாலாரும்) தேவை.

நேர்முகத் தேர்வு இன்றும் நாளையும் (10 ஆம் 11 ஆம் திகதிகளில்) மு.ப. 10 மணிக்கு கீழ்குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும்.

**புதிய யாழ்.வைத்தியசாலை**
315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

### விநியோகத்தர்கள் தேவை



எமது நிறுவனம் PREMIER என்ற பெயரில் குடிநீர் / பழரசம் /அயடின் கலந்த உப்பு/ மலிகை பொருட்கள் / சோயாமீட்/ சோஸ் வகைகள் என்பன சந்தைக்கு விடப்பட்டுள்ளன. இது ISO/SLS/HACCP மற்றும் சுகாதார அமைச்சின் சான்றிதழ் பெற்ற உற்பத்திகளின் முன்னணி நிறுவனமாகும் எமது சந்தைப்படுத்தல் துறையை நாடு பூராகவும் பரவச் செய்வதற்காக வடக்கு / கிழக்கின் எல்லா பிரதேசங்களிலும் விநியோகத்தர்கள் தேவை

பிரதேசம் : யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, வவுனியா உட்பட வடமேற்கு அனைத்து பிரதேசங்கள்

தேவைப்படுவது :
பிணைக் கட்டணம் செலுத்தக்கூடிய வசதி
சொந்தமான வாகனம் / களஞ்சிய வசதி
பிரதேசம் பற்றிய அறிவு

உயர்ந்த பிரதிபலன் மற்றும் விசேட சலுகைகள், மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள் அல்லது விண்ணப்பியுங்கள்

**Premier Water Marketing (Pvt) Ltd**
1067, 3ம் மாடி, பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
Tel : 0777-641946, 0776-424393 Fax : 011 - 2774125

STANDARDS CERTIFIED COMPANY



### இடமாற்றம்

29(31), மூத்த விநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த

**அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்**

06.11.2010 இல் இருந்து, ப.தர்மலிங்கம், மாதா கோவிலடி, கோப்பாய் தெற்கு. கோப்பாய் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகின்றோம்.

தொ.பே: 0773535516
0775809812


## மரண அறிவித்தல்கள்

### தவில் வித்துவான் கந்தசாமி தயாளன் (தயா)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தசாமி தம்பதியரின் அன்பு மகன் தயாளன் (தயா) நேற்றுமுன் தினம் (08.11.2010) திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2010) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கந்தசாமி குடும்பத்தினர்,
(மனைவி - பிறேமலதா,
பிள்ளைகள்)

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு. (105820)

### திருமதி பாக்கியலீலா (லீலா) பரமானந்தம்



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியலீலா பரமானந்தம் 06.11.2010 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யேசுதாசன் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பரமானந்தத்தின் (முன்னாள் சாரதி, இ.போ.ச) அன்பு மனைவியும் விமல்ராஜ் (பிரான்ஸ்), குயின்ரன், வினோதினி ஆகியோரின் அன்புத் தாயும் பலேமா, ஜீவா, உதயதாஸ் (தேவன்) ஆகியோரின் அன்பு மாமியும் நடராஜா, செல்வரட்ணம், சந்திரலீலா, நவரட்ணம், ராஜசுலோசனா, குணரட்ணம், பஞ்சரட்ணம், காலஞ்சென்றவர்களான செல்வராணி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லொயிட், கஷ்ரன், வைவஷ், யோனத்தான், கேரீத், சியான், ஆஷிக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கிளைச்சபை விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கணவர் : பரமானந்தம்,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

நவாலி தெற்கு. (105813)


## Computer Express
Institute of Information Technology

6ஆது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book ) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

25.11.2010 க்கு முன்னர் பதிவுகளுக்கு முந்துங்கள்

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

Batch i - 10/11/2010
Batch ii - 12/11/2010 } 9-10 am
Batch iii - 13/11/2010
Batch iv - 14/11/2010 } 3-4 pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...


## மரண அறிவித்தல்



### நடராசா சீனியம்மா

ஐயனார் கோயில் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சீனியம்மா (08.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் நாகலட்சுமி, பூமணி, இரத்தினம், வேதநாயகம் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் இராசகோபால், லலீதா மற்றும் புஸ்பராணி (சுவிஸ்), ஜெயராசா (சுவிஸ்) இராசகுமார் (சுவிஸ்), சிவகுருநாதன் (சுவிஸ்), தர்மராசா (சுவிஸ்), சிவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராசரத்தினம் மற்றும் மலர்தேவி, கமலாதேவி, ரோகினி (சுவிஸ்), ஜீவா (சுவிஸ்), அமுதா (சுவிஸ்), ரதி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் தனராஜ், தர்சிகா, தர்மினி, தர்மேந்திரன், ஜெயந்தி, சாந்தி, ஐங்கரன், நந்தினி, கயூரி, ரஜனி, டெசி, கருணாமூர்த்தி, லாதீபா, றதீபன், கீர்த்திகா, அருள், ஆதி, அக்சனா, ஆதித்தியன் ஆகியோரின் பேர்த்தியும் சாரங்கன், சாகித்தின், சரண்யா, ரமணன், அக்ஞயன், அபிசிகா, ஆதீஸ், பிரின்சிகா, மகிஷன், பவித்திரா, அனுசன், மதுசன், அபிஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2010) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஐயனார் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HOTEL கற்கை நெறிக்கு விரிவுரையாளர் தேவை**

HOTEL MANAGEMENT துறையுடன் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர் உடன் தேவை.

பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 0771286382

(105822)


## மரண அறிவித்தல்

### திருமதி தில்லையம்பலம் இலட்சுமி

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தில்லையம்பலம் இலட்சுமி நேற்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், புஸ்பராணி, தவராணி, யோகநாதன் (லண்டன்), இந்திராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் சோமசுந்தரம், சிவராசா, ரகுவதனா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புஸ்பாகரன் (அதிபர், யா/ கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை), தயாளினி (ஆசிரியை, யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்), யுலாரதா (ஆசிரியை, வ/ புளியங்குள்ம் மகா வித்தியாலயம்), ரஜிதன் (சங்கமுகாமையாளர், பருத்தித்துறை), நிதர்சன், சாமிலி(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், சத்தியபவானந்தன் (ஆசியர் வ/ பெரியமடு அ.த.க பாடசாலை), வசந்தமலர் ஆகியோரின் பேர்த்தியும், ரிலக்சிகா, கனிஸ்ரன், சர்வஜன், முகுந்தாபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2010) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரவெட்டி கிழக்கு, பெருவெட்டி மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
சோ.புஸ்பாகரன் (பேரன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
நாகமணி சண்முகம்



தோற்றம்
27.06.1936

மறைவு
11.10.2010

11.10.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகமணி சண்முகம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (10.11.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

M.S.லேன்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## ரயில் மிதிபலகையில் பயணித்த சிப்பாய் பாலத்தில் மோதிப் பலி

அனுராதபுரம், நவ.10

ரயிலின் மிதிபலகையில் நின்றவாறு பயணித்த சிப்பாய் ஒருவர் மல்அத்து ஓயா பாலத்தில் மோதுண்டு ஆற்றில் விழுந்து மரணமாகியுள்ளதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இரவு தபால் இரயிலில் பயணித்தபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இவருடன் மேலும் இரண்டு சிப்பாய்கள் பயணித்துள்ளனர். அவர்கள் உறங்கிய பின்னர் மிதிபலகைக்கு வந்து பயணித்த போது அவர் பாலத்தில் மோதுண்டு வீசியெறியப்பட்டார்.

## வீதி விஸ்தரிப்பு குறித்து நாளை கலந்துரையாடல்

தென்மராட்சி, நவ.10

மீசாலை - புத்தூர் சந்தியில் இருந்து வேம்பிராய், கனகன்புளியடி, மட்டுவில் ஊடாக புத்தூருக்குச் செல்லும் வீதி அகலமாக்கப்படவுள்ளது.

இது தொடர்பான அப்பகுதி மக்களுடனான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளதால் இவ்வீதியில் உள்ள பொதுமக்கள், பொது அமைப்புகள், ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

## சைவசமய அறிவுப் போட்டி

மானிப்பாய், நவ.10

நவாலி இந்து சமய விருத்திச் சங்கம் ஆண்டு 1 இல் இருந்து 5 வரையான பாடசாலை மாணவர்களுக்கு சைவ சமயப் பாடத்தில் போட்டிப் பரீட்சை நடத்தவுள்ளது.

நவாலிப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்ற முடியும்.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபரின் உறுத்திப்படுத்தலுடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்று ஒப்படைக்குமாறு தலைவர் அறிவித்துள்ளார்.

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பரீட்சை இடம் பெறும்.

விண்ணப்பப் படிவங்களை நவாலி மகாவித்தியாலயத்திற்கு முன்னதாக உள்ள தேவன் நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்

(த-302)

## தென்மராட்சியில் மரம் நடுகை

தென்மராட்சி, நவ.10

'பசுமை நிறைந்த நாட்டை உருவாக்குவோம்' திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு மரம் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும் என்று பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

(ஒ-207)


**அடிப்படை உடல் பரிசோதனை.**

கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Reg No:PV74170
Lava Holdings Pvt Ltd

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

**ஆங்கிலம் கற்பது இலகுவானது.**

ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ?

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
Local and UK Certificates for Each Level

மாணவர்கள்,தொழில் புரிவோர்க்கான வகுப்புக்கள்

City and Guilds UK Training and Certification***

ESOL L1
ESOL L2
ESOL L3

எமது எளிமையான கற்பித்தல் முறை நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும்.. முன்னேற்றும்..ஒருமுறை வந்து பாருங்கள்.

Spoken English(KU/C&G) புதிய பிரிவுகள் விரைவில்..
IELTS Coaching பேசலாம் வாங்க !

City& Guilds Approved Centre

Web Site with full info: WWW.KUGROUP.INFO

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதுக்கீட்டுக்கு அழையுங்கள்.

0777302882/0213208342 புதிய பிரிவுகள் ஆரம்பம்

Knowledge Universe
Malaysian College of Business and ICT

City and Guilds Qualifications are accepted by BRITISH COUNCIL

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)


## 200 ஆவது நாள் நினைவும் 80ஆவது பிறந்த நாளும்

தாயின் மடியில்
10 . 11 . 1930



இறைவன் அடியில்
25 . 04 . 2010

### திருமதி சுப்பிரமணியம் கனகபூரணம்

நீர் எமையிங்கு விட்டுச்
சென்று இருநூறு நாள்கள்
ஆகுதம்மா
ஆண்டு எண்பது நீர் இன்று
கண்டீர்
கண்டபோது எம்முடன்
இல்லை
நீர் தந்த நினைவுகள்
என்றும் எம்முடனே - வாழும் அம்மம்மா

(சி/5727764)

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

தகவல்:
மதன், மயூந்தன்
(கனடா).

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


அனேக பெற்றோரின் வேண்டுகோளுக்கிணங்க....

பிரதேசத்தில் அதியுயர் முன்பள்ளியாக எமது முன்பள்ளி 2011இல் உதயமாகின்றது!

Mathuram Kids Pre - School
Pointpedro Road, Kaddaiparai

மதுரம் கிட்ஸ் முன்பள்ளி

பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.

விண்ணப்பங்களை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
மதுரம் கிட்ஸ் முன்பள்ளி - பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.
மதுரம் இன்ஸ்ரியூட் - டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.
குறித்த எண்ணிக்கையான மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
விரைவில் விண்ணப்பியுங்கள்.

தொ.பே.:
0779122918
0775581626

(105811) நிர்வாக இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலையில் நிதி மோசடியில் ஈடுபட்ட இரு சிங்கள இளைஞருக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, நவ.10

மீசாலைப் பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு பணம் வசூலித்த இரு சிங்கள இளைஞர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மேலதிக நீதிவான் எம்.கணேசராஜா உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களுக்கும் எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குருநாகல் வாசிகளான இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சிறுவர் இல்லத்திற்கு நிதி திரட்டுவதாகப் போலி அடையாள அட்டைகளைக் காண்பித்தே இவர்கள் மோசடியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## மூன்று பிள்ளைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

பூநகரி, கிராஞ்சி மொட்டையன் புலவு பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் பிரஸ்தாபப் பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து இந்தக் கொடூர சம்பவத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் நாளுக்கு நாள் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றன என்றும், மரண பயம் காரணமாக இப்படியான சம்பவங்கள் வெளிவருவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (சி)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால், யாழ். நகரில் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் நாளாந்தம் அல்லது வாராந்தம் அச்செழு, ஊரெழு இராணுவ முகாம்களில் கைச்சாத்திடவேண்டும் என இராணுவத்தினர் வற்புறுத்துகின்றனர் என புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்கவிடம் தொடர்புகொண்டு கேட்ட போது, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு இராணுவ முகாமில் கைச்சாத்திடவேண்டும். இது அவர்களின் நலன் கருதியே மேற்கொள்ளப்படுகின்றது. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய முறையில் புனர்வாழ்வளித்து அவர்களை விடுவித்தோம். எனினும், சமூகத்தில் அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின்னர் இந்நடவடிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும். எனினும், முன்னாள் போராளிகளுக்குத் தொழில்வாய்ப்பு எதுவும் கிட்டினால் பொலிஸ் சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொண்டு அவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியும். இந்தப் பொலிஸ் சான்றிதழும் அவர்களின் பாதுகாப்புக் கருதியே வழங்கப்படும்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்வது மட்டுமல்ல எமது கடமை. அவர்களை சமூகத்தில் நல்லதொரு நிலைக்குக் கொண்டுவரும் வரை கண்காணிப்பதே எமது நோக்கம். இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை - என்றார்.

அதேவேளை, முன்னாள் போராளிகளை விடுவிக்கும்போதெல்லாம் அவர்கள் சமூகத்தில் இனி எதுவித தடையுமின்றி வாழலாம். அவர்களுக்கு எவரும் நிபந்தனைகளை விதிக்க முடியாது. அவ்வாறு விதித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீங்கள் தெரிவித்தீர்கள். எனினும், தற்போது முகாம்களில் அவர்கள் கைச்சாத்திடவேண்டும் என்று நிபந்தனை போடுகின்றீர்களே என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ.குணசேகரவிடம் கேட்ட போது, இவ்வாறானதொரு நடவடிக்கை இடம்பெறவில்லை. அது குறித்து இன்னும் எனக்கு எவரும் அறிவிக்கவில்லை. அவ்வாறு இடம்பெற்றால் அது குறித்து கவனம் செலுத்தப்படும்-என்றார்.

எது எப்படியிருப்பினும், இந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்வதன் மூலம் அவர்களை இச்சமூகத்தில் தீவிரவாத கண்ணோட்டத்துடனேயே அரசு இன்னும் பார்க்கின்றது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-சி)

MyWay English இல் பயிற்சி பெறுவோர்
இலக்கணக்கற்றல், எழுத்துப்பயிற்சி, வீட்டுப்பாடம் எதுவுமின்றி
தமிழ் தொடர்பற்ற channel ஒன்றை இலகுவாக உருவாக்குவதன் மூலம்
3 மாதத்தில் தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலத்தினை பேசலாம்
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி - 4 புதிய பிரிவுகள் ஆரம்பம் : 13.11.2010
பிரிவுகள் : காலை 8 - 9, காலை 10 - 11 மாலை 2 - 3, மாலை 4 - 5
அதிபர், ஆசிரியர், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் 50% கட்டணத்துடன் 13.11.2010 வரை பயிற்சியில் சேரலாம்
ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் கூடுதலாக 8 ஆசிரியர்களும் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் கூடுதலாக 6 அலுவலர்களும் 13.11.2010 வரை மட்டுமே சலுகைக்கட்டணத்துடன் பயிற்சியில் சேரலாம்
தனியார் அலுவலர்கள், இளைஞர், யுவதிகளுக்கு 50% சலுகைக்கட்டணம் இல்லை
MyWay English 182, Stanley Rd Jaffna 0773363456

## ஒரு கோப்பை......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றியவரே இவர்தான். பொருளாதாரத்தை சூறையாடியவர். தான் அமைச்சரான பின் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலத்தின் முன் உண்ணாவிரதம் இருப்பதுபோல் பாசாங்கு காட்டினார். இதனால் ஐக்கிய நாடுகள் சபைமூலம் நாட்டிற்குக் கிடைக்கவிருந்த பல கோடி டொலர்களை இல்லாமலடித்துவிட்டார். இது தேசத்துரோகம் இல்லையா?

விமல்வீரவன்ஸ ஐக்கிய தேசியக் கட்சியினரை தேசத்துரோகிகள் என்று கூறுகின்றார். இன்று அரசின் கூட்டாளிகளாக இருப்பவர்களை மறந்துவிட்டரா?

அரந்தலாவையில் புத்த பிக்குகளை வெட்டியும் கொத்தியும் கொலை செய்தவர்களும் சரணடைந்த 600 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் ஒரே தடவையில் கொன்று குவித்தவருமான கருணா அம்மான் என்ற முரளிதரன் பிரதி அமைச்சராக இருக்கிறார். பிள்ளையான் முதலமைச்சராக இருக்கிறார். இவர்கள் நாட்டுப்பற்றாளர்களா? இவர்களை துரோகிகள் என்று கூறவும், அவர்களிடம் கேள்வி கேட்கவும் கூடிய தைரியம் இந்த விமல் வீரவன்ஸவுக்கு இல்லை என்று சாடினார் தயாசிறி ஜயசேகர.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சுவாமிநாதன் யாழ். நூல்நிலைய விவகாரம் தொடர்பாக சபையில் விமர்சித்தார்.

யாழ். நூல் நிலையத்தில் மருத்துவர்களின் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் அங்கு பல பஸ்களில் வந்து குவிந்த பெரும்பான்மை இனத்தவர்கள் நூல் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்துள்ளனர். தந்தை செல்வாவின் நினைவாலயத்தையும் சேதப்படுத்தியுள்ளனர்.

ஆனால், அரசோ எதுவுமே நடக்கவில்லை என்று மூடி மறைக்கின்றது.

யாழ்ப்பாணம் 98 வீதம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம். அங்கு அத்துமீறி சிங்களக் குடியேற்றம் இடம்பெறக்கூடாது என்று கோரும் உரிமை தமிழர்களுக்கு உண்டு. தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி இன வன்முறைகளுக்கு தூபம் இடக்கூடாது என்றும் சுவாமிநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

இரா. புத்திரசிகாமணி

## மீள்குடியேற்றத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் முழுமையாக மீளக்குடியமர்த்தப்படும் வரை இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதுடன், அந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் தலையிடும்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

அதற்குத் தடையாகவுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாட்டுக்கும் பங்களிப்பை நல்கிவருகிறோம் - என்றுள்ளது. (ஒ-ஐ)

## காலி முகத்திடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட இவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகத்துக்குரிய வகையில் இவர் படம் எடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைதுச் சம்பவம் கொழும்பில் தங்கியுள்ள தமிழ் இளைஞர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-எ)

புவியியல்
A/L-Day Class
A/L-2011
Tue, Thur : 4-6 pm
ஆரம்பம் :
11.11.2010 (Thur) 4 pm
By : அனுபவமான ஆசிரியர்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கடை வாடகைக்கு
பலாலி றோட், திருநெல்வேலிச் சந்தியில் கடை வாடகைக்குண்டு.
(105747) தொடர்பு: 0773053170

Personal Class (கணினி)
* MS office, DTP, Internet and E-mail, Web Design, Graphic Design, ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது "Laptop" மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
* ஆசிரியர் :- KRC
* T.P :- 0779672038 நல்லூர்.

## வரவு செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டம் மீதான விவாதத்தைக் கருத்திற்கொண்டு ஜனவரி மாத முற்பகுதியில் அமைச்சரவைத் தீர்மானங்கள் இடம்பெறவுள்ளதாக அவ் விணையத்தளம் தெரிவித்துள்ளது.

அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது தற்போது அமைச்சுப் பதவி வகிக்கும் அனைத்து அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளும் பெரும்பாலும் மாற்றம் செய்யப்படுமெனவும் பிரதியமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம, டிலான் பெரேரா, மஹிந்தானந்த அளுத்கமகே, டி.பீ.ஏக்கநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, 18ஆவது யாப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய ஐ.தே.க. எம்.பி. லக்ஸ்மன் செனவிரத்ன ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் அத்துடன் உயர் கல்வி அமைச்சர் பதவியிலிருந்து எஸ்.பி.திஸாநாயக்க நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாகப் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க நியமிக்கப்படவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தன்னை அமைச்சராக நியமிக்கும்படி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கோருவதாக அறியவருகிறது. (சி)

## வெற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

வீதியை விட்டு வாகனம் விலகியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## மலையக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறக்கப்பட்டுள்ளன. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல்களில் நிரம்பி வழிகின்றனர்.

இருந்தும் நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கவே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அண்மையில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மலையக இளைஞர்கள் பலருக்குப் புலிகள் கிளிநொச்சியில் வைத்து ஆயுதப் பயிற்சிகளை வழங்கியிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மலையகப் பகுதிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கும் இந்த இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டனர். அவ்வாறான இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் இடம்பெறாதவாறு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. வடக்கு, கிழக்கு, கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் மறைத்து வைக்கபட்டுள்ள ஆயுதங்களைக் கண்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அபிவிருத்திப் பணிகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவதற்காகவே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுகிறது. - என்றார். (உ-சி)

## 6 நாள்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே ஆஸ்திரேலியக் கடற்படையினர் கண்டுபிடித்தனர். இந்தப் படகில் 81 அகதிகள் இருந்தனர். படகை ஆஸ்திரேலியக் கடற்படையினர் மீட்டபோது அதில் மாலுமிகள் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகில் வந்தவர்கள் பெரும்பாலும் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதற்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு அகதிகள் மற்றும் ஒரு மாலுமியுடன் மற்றொரு படகும் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட 180 பேருடன் ஒரு படகு கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்றுள்ளது. அதற்கு முன்னர் நான்கு அகதிகள் படகுகளை ஆஸ்திரேலியக் கடற்படையினர் கண்டுபிடித்தனர்.

கடந்த செவ்வாய், புதன் ஆகிய தினங்களை உள்ளடக்கிய 24 மணிநேரத்திலேயே இந்த நான்கு அகதிகள் படகுகள் ஆஸ்திரேலியக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு படகுகளிலும் இருந்த 225 அகதிகளையும் ஆஸ்திரேலியக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள அகதிகளில் ஒரு பகுதியினரை பிரதான நிலப்பரப்பில் உள்ள முகாம்களுக்க மாற்றும் முயற்சியில் ஆஸ்திரேலிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (உ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] இல் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org